பக்கங்கள் : பதினான்கு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர்18 வள்ளுவர் ஆண்டு 2034 ஆனி 31 புதன்கிழமை (16-07-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:231

## வீரச்சாவடைந்த 12 மாவீரர்களுக்கும் உணர்வுபூர்வமாக அஞ்சலி அனுஷ்டிப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை16

கடந்த மாதம் 14ஆம் திகதி கிழகுக் கடற்பரப்பில் விடுதலைப் புலிகளின் கப்பல் ஸ்ரீலங்கா கடற்படையினரால் தாக்கப்பட்ட சம்பவத்தில் வீரச்சாவடைந்தோரின் அஞ்சலி நிகழ்வுகள் நேற்றுக் குடாநாட்டின் பல இடங்களிலும் உணர்வுபூர்வமாக இடம்பெற்றன.

வீரச்சாவடைந்த 11 கடற்புலிகள் மற்றும் ஒரு நாட்டுப்பற்றாளர் ஆகியோரின் உருவப்படங்கள் குடாநாட்டின் பல இடங்களிலும் வைக்கப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது.

**வடமராட்சி**

நேற்று முற்பகல் 11.30 மணிக்கு வல்வெட்டித்துறை, நெடியகாடு திருச்சிற்றம்பலம் பிள்ளையார் ஆலய முன் வீதியிலிருந்து பன்னிரு மாவீரர்களின் திருவுருவப் படங்களைத் தாங்கியபடி பெருந்திரளான மக்கள் ஊர்வலமாக சென்று வல்வை முத்துமாரி அம்மன் கோவிலை அடைந்தனர். அங்கு அஞ்சலிக் கூட்டம் இடம்பெற்றது. நிகழ்வில் பொதுச்சுடரினை வல்வெட்டித்துறை பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் கிஷோரும், தமிழீழ தேசியக் கொடியினை வடமராட்சி அரசியல் துறைப் பொறுப்பாளர் தயாவும் ஏற்

(13 ஆம் பக்கம் பார்க்க)

வவுனியா அஞ்சலி நிகழ்வில்

## தமிழீழக் கொடியை ஏற்ற படையினர் தடைவிதிப்பு!

வவுனியா,ஜூலை16

கிழக்குச் கடலில் காவியமான வேங்கைகளுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் வவுனியாவில் ஏற்பாடு செய்த நிகழ்வில் தமிழீழத் தேசியக் கொடியை ஏற்றப் படையினர் தடைவிதித்தனர். இதனால் பதற்றமான நிலை ஏற்பட்டது.

விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினர் இந்த அஞ்சலி நிகழ்வை ஒழுங்கு செய்திருந்தனர். இந்த நிகழவில் தமிழீழத் தேசியக்கொடி ஏற்றக் கூடாது என்று ஏற்பாட்டாளர்களுக்கு வவுனியா கட்டளை அதிகாரி கண்காணிப்புக் குழு அதிகாரிகள் மூலம் தகவல் அனுப்பியிருந்தார்.

இதையடுத்து விடுதலைப் புலிகளின் வவுனியா துணைப் பொறுப்பாளர் செங்கதிர் கண்காணிப்புக் குழு அதிகாரியுடன் கலந்துரையாடினார்.

புரிந்துணர்வு உடன்படிக்கையின்

(14 ஆம் பக்கம் பார்க்க)

# அரசியல், சட்ட ஆலோசனைக் குழு அமைப்பது பற்றிப் புலிகள் பரிசீலனை

## பேச்சுகளுக்கு உதவுவதற்கு வசதியாக

கிளிநொச்சி,ஜூலை16

**எதிர்காலத்தில் இலங்கை அரசுத் தரப்புடன் நடைபெறும் சமாதானப் பேச்சுக்களின் போது தமக்கு உதவுவதற்காக வெளி ஆள்கள் அடங்கிய அரசியல், சட்ட ஆலோசனைக் குழு ஒன்றை அமைப்பது குறித்து விடுதலைப் புலிகள் தீவிரமாக ஆராய்ந்து வருகின்றார்கள்.**

**இந்தக் குழுவில் இடம்பெறக்கூடிய பிரமுகர்கள், அறிஞர்களின் பட்டியல் ஒன்றைத் தயார் செய்யும் நடவடிக்கை முனைப்பாக மேற்கொள்ளப் பட்டு வருகின்றது.**

இடைக்கால நிர்வாகசபை விடயம் உட்பட எதிர்காலத்தில் இலங்கை அரசுத்தரப்புடன் நடத்தப்படும் பேச்சுக்களில் இடம்பெறும் சகல விவகாரங்கள் குறித்தும் அரசமைப்பு மற்றும் சட்ட ஆலோசனைகள் உரிய விதத்தில் - உயர் மட்டத்தில் - உடனுக்குடன் - தங்களுக்குக் கிடைக்கவேண்டியது அவசியம் என்று விடுதலைப் புலிகளின் தலைமை கருதுவதாகத் தெரிகின்றது.

கடந்த ஓராண்டு காலத்தில் இடம்பெற்ற ஆறு சுற்றுப் பேச்சுக்களின போதும் கணிசமான பல விடயங்கள்

(14 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பில் கைதான 8 புலிகள் பொலீஸாரால் நீதிமன்றில் ஆஜர்

### 18 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவு


மட்டக்களப்பு,ஜூலை16

மட்டக்களப்பு, கல்லடிப்பாலத்தில நேற்று முன்தினம் இரவு 10.00 மணியளவில் கைது செய்யப்பட்ட எட்டு விடுதலைப் புலிஉறுப்பினர்களும் எதிர்வரும் 18 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

நேற்று பிற்பகல் அவர்கள் மாவட்ட நீதிவான் ஏ.எல்.ஏ.கபூர் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர். காத்தான்குடிப் பொலீஸாரால் அவர்கள் பலத்த பாதுகாப்புடன் நீதிமன்றத்துக்கு அழைத்து வரப்பட்டிருந்தனர்.

நீதிமன்றத்தில் இராணுவத்தின

(14 ஆம் பக்கம் பார்க்க)



கிழக்கு கடலில் காவியமான 12 பேருக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வு நேற்று குருநகரில் இடம்பெற்றபோது பொதுமக்கள் மலரஞ்சலி செலுத்துவதை படங்களில் காணலாம். *(படங்கள்: அலுவலகப் படப்பிடிப்பாளர்)*

## ஒக்ரோபர் முதல் ஏ-9 பாதையில் 24 மணிநேரப் போக்குவரத்து?

வவுனியா,ஜூலை16

ஏ-9 தரைவழிப் பாதை ஊடான போக்குவரத்தை தினம் 24 மணி நேரமும் நடத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகக் கூறப்படுகிறது. பெரும்பாலும் எதிர் வரும் ஒக்ரோபர் மாதம்முதல் ஏ - 9 பாதை ஊடான 24 மணிநேரப் போக்குவரத்து ஆரம்பிக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

24 மணிநேரப் போக்குவரத்தை

(14 ஆம் பக்கம் பார்க்க)

## ரெலிவ்சன் - சூசை இன்று சந்திப்பு

கிளிநொச்சி,ஜூலை16

வன்னிக்கு வந்துள்ள யுத்தநிறுத்தக கண்காணிப்புக் குழுத்தலைவர் கேணல் ட்ரைவ் ரெலிவ்சன் கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசையுடன் இன்று முல்லைத்தீவில் பேச்சு நடத்தவுள்ளார்.

கடற்புலிகளின் போக்குவரத்து மற்றும் பயிற்சிகள் தொடர்பாக யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு தயாரித்துள்ள யோசனைகள் அடங்கிய வரைவு குறித்து இருவரும் இப்பேச்சின் போது ஆராய உள்ளதாகக் கூறப்படுகிறது. இந்தச் சந்திப்பைத் தொடர்ந்து கண்காணிப்புக் குழுத்தலைவர் முல்லைத்தீவில் புலிகளின் கடல் நடமாட்டம் தொடர்பாக நேரில் ஆராய்வார். பின்னர் அவர் கொழும்பு திரும்புவார்.

(ஓ-3-4)

## புகழ்பூத்த நாதஸ்வரக் கலைஞர் என்.கே.பத்மநாதன்காலமானார்



யாழ்ப்பாணம்,ஜூலை16

ஈழத்தின் புகழ்பூத்த கலைஞரும நாதஸ்வர வித்பன்னருமான கந்தசாமி பத்மநாதன் நேற்றுக் காலை 8மணியளவில் கொழும்பில் காலமானார். இறக்கும்போது அவருக்கு வயது72.

கடந்த 19 நாள்களாக கடும் சுகவீனம் அடைந்த நிலையில் யாழ். ஆஸ்பத்திரியிலும் பின்னர் கொழும்பில் உள்ள அப்பலோ, நவலோக ஆகிய வைத்தியசாலைகளிலும் அவர் சிகிச்சை பெற்றுவந்தார்.

அளவெட்டியைச் சேர்ந்த இவர் தமது 21ஆவது வயதில் இருந்து இறக்கும் வரை தனது கலைப் பணியை சைவ மரபுப்படி சீராக மேற்கொண்டு வந்தார்.

நல்லூர் கந்தசுவாமி கோயிலில்

(14 ஆம் பக்கம் பார்க்க)

NSB

அவசரமாக காசு தேவைப்படுகின்றதா ?

இப்போது தேசிய சேமிப்பு வங்கியின் ரன் சஹன அடகுச்சேவை

□ ஒரு தங்க சவரனுக்கு கூடுதலான பணம்
□ இரகசியம் பேணல் மற்றும் துரித சேவை
□ தவணை அடிப்படையில் திரும்ப செலுத்தும் வசதி
□ வருடாந்தம் 17% குறைந்த வட்டி
□ கணனி மூலம் பரிசோதனை

NSB தேசிய சேமிப்பு வங்கியின் தங்கமான சலுகை

# வடக்கு - கிழக்கு சிங்கள அமைப்பின் திருமலை ஹர்த்தாலுக்கு அற்ப ஆயுள்

வடக்கு - கிழக்கு சிங்கள அமைப்பு திருகோணமலையில் நேற்று நடத்திய ஹர்த்தால் இரண்டு மணிநேரத்தில் அற்ப ஆயுளுடன் முடிந்தது.

விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளை கண்டித்தும் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரை வெளியேறக்கோரியுமே திருகோணமலையில் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டதோடு ஆர்ப்பாட்டமும் நடத்தப்பட்டது.

ஹர்த்தாலினால் போக்குவரத்து குறைந்திருந்தது. ஆயினும், உள்ளூர், வெளியூர் போக்குவரத்துக்கள் பாதிக்கப்படவில்லை. வர்த்தக நிலையங்கள், அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள், அமைச்சு அலுவலகங்கள், தமிழ் முஸ்லிம் பாடசாலைகள், வங்கிகள் என்பன வழமை போன்று இயங்கின. நகரின் வழமை நிலைமாறவில்லை.

திருகோணமலை மணிக்கூண்டுக கோபுரத்துக்கு அருகே கூடிய நூற்றுக்கணக்கானோர் விடுதலைப் புலிகளுக்கும் கண்காணிப்புக் குழவினருக்கும் எதிராக கோஷங்களை எழுப்பினர்.

குரங்குபாஞ்சான் என்ற இடத்தில் புலிகள் அமைத்துள்ள முகாமை அகற்றும்படியும் கோஷங்கள் எழுப்பப்பட்டன.

நகரிலுள்ள சிங்களவர்களின் கடைகள் மூடப்பட்டிருந்தன. மத்தியவீதி, வித்தியாலய வீதி, மாநகரசபைவீதி, மடத்தடி ஆகிய இடங்களில் திறந்திருந்த தமிழ்க்கடைகளை மூடும்படி ஆர்ப்பாட்டக்காரர்கள் அச்சுறுத்தல் விடுத்தனர். இதையடுத்து திறந்திருந்த தமிழ்க்கடைகள் மூடப்பட்டன. திருகோணமலை நகரில் நேற்று போக்குவரத்து வெகுவாகக் குறைந்திருந்தது. நகரத்தில் ஆங்காங்கே கறுப்புக் கொடிகள் பறக்க விடப்பட்டிருந்தன.

இந்த ஆர்ப்பாட்டம் காலை 10 மணிக்கு ஆரம்பித்து 2 மணிநேரத்தில் அதாவது நண்பகல் 12 மணிக்கு முடிநதுவிட்டது. ஆர்ப்பாட்டத்தை முன்னிட்டு திருகோணமலை நகரில் பொலீஸார் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர். முக்கிய சந்திகளில் ஆயுதம் தாங்கிய பொலஸாரும் கடமையில் ஈடுபட்டிருந்தனர்.

ஆர்ப்பாட்டக்காரர்கள் மணிக் கூண்டு கோபுர சந்தியில் ஒன்றுகூடி உள்துறைமுக வீதியில் உள்ள இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு அலுவலகம் வரை ஊர்வலமாகச் சென்றனர். அங்கு கோஷங்கள் எழுப்பிய அவர்கள் பின்னர் கலைந்துசென்றனர். அசம்பாவிதங்கள் எதுவும் நடைபெறவில்லை.

# வடமராட்சியில் சோதனைக் கெடுபிடிகள்: கண்காணிப்புக் குழுவிடம் முறைப்பாடு

கரவெட்டி,ஜுலை16

வடமராட்சிப் பகுதியில் பொதுமகக்கள் மீதான இராணுவத்தினரின் கெடுபிடிகள் அதிகரித்திருப்பது குறித்து புலிகள் கடும் ஆட்சேபம் தெரிவித்திருக்கின்றனர்.

புலிகளின் வடமராட்சி பிரிவு அரசியல் பொறுப்பாளர் இ.தயா இதனை நேற்று போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரிடம் சுட்டிக்காட்டினார்.

வடமராட்சியில் உள்ள புலிகளின் அரசியற்துறை அலுவலகத்துக்குச் சமீபமாக நேற்றுக்காலைமுதல் மாலை வரை படையினர் வீதிச்சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர் என்று கூறப்படுகிறது.

நேற்று மாலை புலிகளின் அலுவலகத்துக்கு வருகை தந்த போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் வடமராட்சிப் பிரதேச அதிகாரிகள் புலிகளின் பொறுப்பாளருடன பேச்சு நடத்தினர்.

பொதுமக்களின் இயல்பு வாழ்க்கையைப் பாதிக்கின்ற படையினரின சோதனை நடவடிக்கைகளை கண்காணிப்புக் குழுவினரிடம் புலிகளின் பொறுப்பாளர் சுட்டிக்காட்டினார்.

புலிகளின் தரப்பின இந்த முறைப்பாட்டை வடமராட்சிப் பிரதேச படை அதிகாரிகளின் கவனத்துக்கு கொண்டு வருவதாக கண்காணிப்புக் குழுவினர் தெரிவித்தனர்.

(ஜ-70)

## தப்ரூ கொலைவழக்கில் அடையாள அணிவகுப்பு

கொழும்பு,ஜுலை16

தெஹிவளை பொலீஸ் நிலையக் குற்றப்புலனாய்வுப் பிரிவுப் பொறுப்பதிகாரி சுனில் தாப்ரூ கொலையின் சந்தேகநபரான மதன்குமார் நேற்று இடம்பெற்ற அடையாள அணிவகுப்பின்போது சாட்சிகளால் அடையாளம் காட்டப்பட்டார்.

கல்கிசை நீதிவான் நீதிமன்றில் மேலதிக நீதிவான் திருமதி சந்திரமணி சிவபாதம் முன்னிலையில் நேற்று பிற்பகல் இந்த அடையாள அணிவகுப்பு இடம்பெற்றது.

அப்போது தெஹிவளை பொலீஸ் நிலைய உதவிப் பொலீஸ்இன்ஸ்பெக்டர் வசந்த உட்பட மூவர் சந்தேக நபரை அடையாளம் காட்டினார்கள்.

இதனைத் தொடர்ந்து சந்தேக நபரான மதன்குமார் (செல்லத்துரை கிருபாகரன் - குமாரபுரம், முள்ளியவளை, முல்லைத்தீவு) கல்கிசை நீதிவான் முகமட்மஹுகி முன்னிலையில் ஆஜர்செய்யப்பட்டார்.

சந்தேக நபரை எதிர்வரும் 29 ஆம் திகதி வரையும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார். சந்தேகநபரின் சார்பில் சட்டத்தரணி என்.ஸ்ரீகாந்தா ஆஜரானார்.

இதேவேளை,இன்ஸ்பெக்டர் சுனில் தாப்ருவின் கொலை தொடர்பான விசாரணை அறிக்கையின் பிரதியொன்றை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பொலீஸ்மா அதிபரிடம் கோரியிருக்கிறார்.

இக்கொலை தொடர்பான விசாரணை ஏற்கனவே பூர்த்தி அடைந்திருப்பதாகத் தான் கருதுவதாலேயே விசாரணை அறிக்கையின் பிரதியைக் கோருவதாகவும் ஜனாதிபதி தெரிவித்திருக்கிறார். (ஞ-9)

## அ.அட்டை நடமாடும் சேவை சாவகச்சேரியில் நேற்று நடந்தது

யாழ்ப்பாணம்,ஜுலை16

சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நேற்று தேசிய அடையாள அட்டைகளை வழங்குவதற்காக இடம்பெற்ற ஆட்பதிவுத் திணைக்களத்தின் நடமாடும் சேவையில் நூற்றுக்கணக்கான மக்கள் கலந்துகொண்டனர்.

ஆயினும், நடமாடும் சேவை தொடர்பாக முன்னர் அறிவித்தல் விடுக்கப்பட்டிருந்தமைக்கு மாறாக சில விடயங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டதனால் குழப்பங்கள் ஏற்பட்டன.

தேசிய அடையாள அட்டையைப புதிதாகப் பெற்றுக்கொள்வதற்கான விண்ணப்பங்களைக் கையளிப்போர் நடமாடும் சேவையில் கலந்துகொள்ளத்தேவையில்லை என்று சேவையின் இணைப்பாளர் அறிவித்திருந்த போதும் கலந்துகொண்டு கையளித்த புதிய விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

விண்ணப்பங்கள் யாவும் ஏற்றுக்கொள்ளப்பட்ட போதும் அவற்றைப் பெற்றுக்கொண்டமைக்கு அடையாளமாக பற்றுச்சீட்டுக்களோ அல்லது எதுவித ஆவணங்களோ விண்ணப்பதாரிகளுக்கு வழங்கப்படவில்லை. இதனால் நடமாடும் சேவையில் பணியாற்றிய உத்தியோகத்தர்களுக்கும் பொதுமக்களுக்கும் இடையே வாய்த தர்க்கங்களும் இடம்பெற்றன. சாவகச்சேரி இந்துக்கல்லூரியிலேயே நடமாடும் சேவை இடம்பெறுகிறது. என்ற விடயம் தெரியாத பல பொதுமக்கள் தென்மராட்சி பிரதேச செயலகத்துக்குச் சென்று அதன் பின்னரே உரிய இடத்தை அறிந்து கொண்டனர். (ம-10-86-31-75-117)

## என் பிள்ளைகளின் பெயர்களை அரசியலுக்காகப் பயன்படுத்தாதீர்கள்

### ஜனாதிபதி சந்திரிகா ஊடகங்களிடம் கோரிக்கை

குறுகிய அரசியல் நோக்கங்களுக்காக தனது பிள்ளைகளின் பெயர்களைப் பயன்படுத்துவதை தவிர்த்துக கொள்ளுமாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க சகல ஊடக நிறுவனங்களிடமும் கோரிக்கை விடுத்திருக்கின்றார்.

அரசாங்க ஞாயிறு பத்திரிகைகள் இரண்டில் தனது பிள்ளைகளின் பெயர்களைத் தொடர்புபடுத்தி வெளியான செய்தி குறித்து மக்கள் தொடர்பாடல் அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்காருக்கு அனுப்பியுள்ள கடிதம் ஒன்றில் ஜனாதிபதி தனது கவலையை தெரிவித்திருக்கிறார்.

அச்செய்தியை ஜனாதிபதி முற்றாக மறுத்திருக்கிறார். அரசியல்வாதிகளின் பிள்ளைகளின் பெயர்கள் அந்தவகையில் பயன்படுத்தப்படுவது தார்மீக ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட முடியாததாகும் எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டிருக்கிறார்.

## எழுச்சிப் பேரவையின் கலந்துரையாடல்கள்

இன்று புதன்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு கோப்பாய் பிரதேச ஊரக தேசிய எழுச்சிப் பேரவை உறுப்பினர்களுக்கான கலந்துரையாடல் கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரி கேட்போர் கூடத்தில் நடைபெற உள்ளது. சம்பந்தப்பட்ட ஊரக தேசிய எழுச்சிப் பேரவை உறுப்பினர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு, வலிகாமம் கோட்ட அரசியல்துறையினர் கேட்டுக்கொண்டுள்ளனர்.

★ ★ ★

வேலணை, புங்குடுதீவு, நயினாதீவு பிரதேசங்களின் தேசிய எழுச்சிப் பேரவையின் ஊரக்கிளை உறுப்பினர்களுக்கான கலந்துரையாடல் நாளை மறுதினம் காலை 10 மணிக்கு வேலணை ப.நோ.கூ.சங்க தலைமையகத்தில் நடைபெறவுள்ளது.

(ஞ-4-70)

## மஸ்கெலியா மின் உற்பத்தி நிலைய நிர்மாணப் பணி மீண்டும் ஆரம்பம்

மஸ்கெலியா,ஜுலை16

மஸ்கெலியாவில் இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்த சிறு மின் உற்பத்தி நிலைய நிர்மாண வேலைகள் நேற்றுமுதல் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதனால், இப்பிரதேசத்திற்கு தீவிர பொலீஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. நிர்மாணப்பணிகள் நடைபெறும் இடத்தில் மஸ்கெலிய பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி சூலனி வீரரத்ன தலைமையில் பொலீஸ் சோதனைச் சாவடி ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

மஸ்கெலியா பிளாண்டேஷன் கம்பனியும் கொழும்பு பொக்பாட் நிறுவனமும் இணைந்து இந்த சிறு மின் உற்பத்தி நிலையத்தை அமைக்கின்றன.

மஸ்கெலியா பிரவுன்ஸ்விக் தோட்டத்தில் அமைந்துள்ள இத்திட்டத்திற்கு 13 வயதுச் சிறுமியை நரபலி கொடுக்கும் நோக்கத்துடன் கடத்தினர் எனக்கூறி அங்கு ஆர்ப்பாட்டங்கள நடைபெற்றதும் அதனைத் தொடர்ந்தே நிர்மாணப் பணிகள் இடைநிறுத்தப்பட்டதும் தெரிந்தவையே.

நேற்றுமுன்தினம் ஹற்றன் சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகருடன் நடத்திய சமரசப் பேச்சுக்களின் பின்னரே இப்பணிகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டன என்று மஸ்கெலிய பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி சூலனி வீரரத்ன கூறினார்.

(ஒ)

## வல்லையில் நேற்று....

சர்வதேசக் கடற்பரப்பில் விடுதலைப் புலிகளின் கப்பல் மூழ்கடிக்கப்பட்ட சம்பவத்தில் வீரச்சாவடைந்த வேங்கைகளுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் வல்வெட்டித்துறையில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சிகளில் எடுக்கப்பட்ட படங்கள் இவை.



புலிகளின் வடமராட்சி அரசியல் பிரிவுப்பொறுப்பாளர் இ.தயா தேசியக்கொடி ஏற்றுகிறார்.



மாவீரர் அன்புவின் பேரன் ஈகச்சுடரேற்றிய காட்சி



நினைவு ஊர்வலத்தில் மாவீரர் உருவப்படங்களை சுமந்து சென்ற மாணவர்கள்...



நினைவு ஊர்வலத்தில் 'பாண்ட்' வாத்திய அணி.

(படங்கள்: சி.சுந்தரலிங்கம் கரவெட்டி செய்தியாளர்)

## மீசாலையில் நேற்று
## மாவீரர் நினைவுத் தூபி திறந்து வைக்கப்பட்டது

கொடிகாமம்,ஜுலை16

விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர்களான லெப்.சீலன் (லூ.சாள்ஸ் அன்ரனி - திருமலை), வீரவேங்கை ஆனந்த் (இ.அருள்நாத்-மயிலிட்டி) ஆகியோரின் நினைவுத் தூபி நேற்று மீசாலையில் திறந்து வைக்கப்பட்டது.

மீசாலை, அல்லாரைப் பகுதியில் நடைபெற்ற இந்நிகழ்வில் நினைவுத் தூபிகளை யாழ்.மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி திரைநீக்கம் செய்துவைத்தார்.

அதற்கு முன்னர் நடைபெற்ற நிகழ்வில் பொது ஈகச்சுடரினை வரணி மகா வித்தியாலய அதிபரும், மாவீரரின் தந்தையுமான எம்.நவரட்ணராஜா ஏற்றிவைத்தார். தமிழீழ தேசியக் கொடியை தென்மராட்சி அரசியல் துறைப் பொறுப்பாளர் கலைவாணன் ஏற்றினார்.

ஈகச்சுடரினை சாவகச்சேரி இந்துக் கல்லூரி முன்னாள் அதிபர் எஸ்சந்திரசேகர, யாழ்.மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் மலர்விழி ஆகியோர் ஏற்றினர்.

மாவீரர்களின் திருவுருப்படங்களுக்கு யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா, சாவகச்சேரி பிரதேச சபைச் செயலாளர் எஸ்.பாலச்சந்திரன் ஆகியோர் மலர்மாலை அணிவித்தனர்.

(ஒ-5-74-31-117)



ஸ்பெயின் நாட்டின் பாரம்பரிய கொண்டாட்டமான சென்.ஃபெர்மின் திருவிழா ஆரம்பமாகியுள்ளது. ஒருவாரகாலம் கொண்டாடப்படும் இத்திருவிழாவில் காளை மாட்டுச் சண்டை பிரதான நிகழ்வாக இடம்பெறுகின்றது. வடக்கு ஸ்பெயினின் பம்ப்லோனா நகரில் சென்.ஃபெர்மின் திருவிழாவின் ஆரம்பத்தையொட்டி இடம்பெற்ற சம்பிரதாய நிகழ்வின்போது எடுக்கப்பட்ட படம் இது.

யுரேனியத்தை ஈராக் இறக்குமதி செய்ததாகக் கூறிய விவகாரத்தில்

# தன் மீது சுமத்தப்பட்ட பழியை சி.ஐ.ஏ. மீது திணித்தார் புஷ்!

வாஷிங்ரன்,ஜூலை16

சி.ஐ.ஏ. உளவு நிறுவனத்தின் தகவல்கள் நன்கு இழையிடப்பட்டு - செப்பனிடப்பட்டு - பொதி செய்யப்பட்ட உண்மைகள். ஆனால், ஆபிரிக்க நாடான நைகரில் இருந்து யுரேனியத்தை ஈராக் கொள்வனவு செய்தது என்று தவறான தகவல்களை அது வழங்கிவிட்டது.

- இவ்வாறு அமெரிக்க ஜனாதிபதி புஷ் சி.ஐ.ஏ. மீது குற்றஞ்சாட்டியுள்ளார்.

ஆபிரிக்க நாடுகளுக்கான சுற்றுப் பயணத்தை முடித்து அமெரிக்கா திரும்பியுள்ள புஷ் இந்தக் குற்றச்சாட்டை தெரிவித்துள்ளார்.

யுரேனியத்தை ஆபிரிக்க நாடொன்றில் இருந்து ஈராக் இறக்குமதி செய்தது என்று மக்களவையில் தான் உரையாற்றியதால் எழுந்துள்ள சர்ச்சைக்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில் அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

ஆனால், அமெரிக்க செனட் சபை உறுப்பினர் ஸ்பெக்ரா இதனைக் கண்டித்துள்ளார். சி.ஐ.ஏ. மீது இதற்கான பழியை சுமத்தமுடியாது. இதற்கான இறுதிப் பொறுப்பை ஜனாதிபதி புஷ் ஏற்கவேண்டும் என்று அவர் கூறியுள்ளார்.



இதனால் ஈராக் மீதான யுத்தத்தை நியாயப்படுத்தும் வகையில் அமெரிக்க மக்களுக்கு தவறான தகவல்களை வழங்கி பிழையாக வழி நடத்தினரா? என்ற பெரும் சர்ச்சைக்கு ஜனாதிபதி புஷ் முகம்கொடுக்கவேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார்.

இந்த விவகாரம் குறித்து வெள்ளை மாளிகையின் பேச்சாளர் எரிக் பிளெச்சர் கூறுகையில், ஆபிரிக்காவில் இருந்து யுரேனியத்தை ஈராக் இறக்குமதி செய்தது என்ற ஒரேயொரு காரணத்தை மட்டும் மையமாக வைத்து அந்நாட்டின் மீது போர் தொடுக்கவில்லை என்று கூறியுள்ளார்.

இது இவ்வாறிருக்க சி.ஐ.ஏயின் பணிப்பாளர் ஜோர்ஜ் ரெனெற்றை ஜனாதிபதி புஷ் சந்தித்து உரையாடியுள்ளார். இது குறித்து செனட் குழு ஜோர்ஜ் ரெனெற்றை இரகசியமாக விசாரிக்கவிருக்கிறது.

(ம)

## இஸ்ரேலியர் மூவருக்கு கத்திக்குத்து!

இஸ்ரேலியத் தலைநகர் டெல்அவிவில் இஸ்ரேலியர் மூவர் கத்திக்குத்துக்கு இலக்காகினர். அவர்களில் ஒருவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டபின் உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்படுகிறது.

பலஸ்தீனர் ஒருவரை மதுபான நிலையம் ஒன்றுக்குள் செல்லவிடாது தடுத்தபோது இந்த கத்திக்குத்து சம்பவம் நடந்தது.

முதலில் மதுபான நிலையத்தின் காவலரை கத்தியால் குத்திய பலஸ்தீனர், பின்னர் அங்கு நின்ற மேலும் இருவரைக் குத்தியுள்ளார்.

இதனையடுத்து கடமையில் நின்ற மற்றொரு காவலர் பலஸ்தீனரின் காலில் துப்பாக்கியால் சுட்டு அவரைக் கைதுசெய்தார். தற்போது அவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

# லைபீரியாவுக்கு படைகளை அனுப்ப ஐ.நா. செயலருக்கு அதிபர் புஷ் உறுதி

லைபீரியாவில் அமைதியை நிலைநாட்டுவதற்காக சிறுதொகை அமெரிக்கப் படைகளை அங்கு அனுப்பத் தீர்மானித்துள்ளதாக ஜனாதிபதி புஷ் தெரிவித்துள்ளார்.

ஐ.நா. செயலாளர் நாயகம் கோபி அனானைச் சந்தித்த புஷ் இதனை அவரிடம் தெரிவித்துள்ளார். ஆனால், அமெரிக்கப் படையினர் லைபீரியாவுக்கு செல்வதற்கு முன்னர் அங்கிருந்து ஜனாதிபதி ரெய்லர் வேறு நாட்டிற்குச் சென்றுவிடவேண்டும் என்று அவர் நிபந்தனையும் விதித்துள்ளார்.

லைபீரியாவின் நிலைமைகளை மதிப்பீடு செய்ய அங்கு சென்றுள்ள இராணுவ மதிப்பீட்டுக் குழு அமெரிக்கா திரும்பியதும் அறிக்கை ஒன்றை அமெரிக்க அரசுக்கு சமர்ப்பிக்கும். இந்த அறிக்கையை ஆராய்ந்த பின்பே லைபீரியாவுக்கு அமெரிக்கப் படைகள் நகரும் என்று கூறப்படுகின்றது.

கோபி அனானுடனான சந்திப்பின் போது லைபீரிய பிரச்சினை குறித்து புஷ் ஆராய்ந்தார்.

ஆபிரிக்க நாடுகளின் பிரச்சினைகளுக்கு உதவ அங்கு அமைதியை நிலைநாட்டவேண்டும். அதற்கு தேவைப்படும் படைகளையும் அங்கு அனுப்பவேண்டும் - என்று கோபி அனானிடம் புஷ் தெரிவித்தார்.

உலக அரங்கில்

ஆனால், மேற்கு ஆபிரிக்க நாடுகள் இணைந்து லைபீரியாவுக்கு 2000 அமைதிப்படையினரை முதலில் அனுப்புவதையே கோபி அனான் விரும்புகிறார்.

ஆபிரிக்க அமைதிப்படையினர் அங்கு சென்று நிலைமைகளை கட்டுப்படுத்தியதும் ஜனாதிபதி ரெய்லர் நாட்டை விட்டு வெளியேறிவிட வேண்டும். அதன் பின்னர் மேலதிகமாக தேவைப்படும் படையினரை அனுப்புவது குறித்து அமெரிக்கா பரிசீலனை செய்யலாம் என்று கோபி அனான் ஜனாதிபதி புஷ்ஷிடம் கூறியுள்ளார்.

அமெரிக்கப் படைகள் லைபீரியாவுக்கு வருவதையிட்டு அங்குள்ள மக்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். ஆனால், போதிய எண்ணிக்கையினரை அனுப்ப அமெரிக்கா விரும்பாதது குறித்து லைபீரிய அதிகாரிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை -

லைபீரியாவில் நடைமுறையில் இருக்கும் போர்நிறுத்தத்தை கிளர்ச்சியாளர்கள் மீறி வருகின்றனர் என்று லைபீரிய பாதுகாப்பு அமைச்சர் டானியல் டே தெரிவித்துள்ளார்.

(ம)

## வயிறு ஒட்டிய இரட்டையரைப் பிரிக்க இந்தோனேஷிய டாக்டர்கள் பரிசீலனை

ஜகார்த்தா,ஜூலை16

கடந்த சனிக்கிழமை இந்தோனேஷியாவின் மேற்கு நகரான பாண்டுங்கில், வயிற்றுப்பகுதிகள் ஒட்டிப் பிறந்த இரட்டையரைப் பிரிப்பதற்கான சாத்தியக் கூறுகள் குறித்து டாக்டர்கள் பரிசீலனை செய்து வருகின்றனர்.

சிறந்த உடல் நலத்துடன் இருக்கும் இந்த இரட்டை ஆண் குழந்தைகளை, ஆபத்தில்லாத வகையில் பிரிக்க முடியுமா என்பது பற்றியே அவர்கள் ஆலோசனை நடத்தி வருகின்றனர்.

கடந்த வாரம் தலையொட்டிப் பிறந்த ஈரானிய இரட்டையரைப் பிரிக்கும் முயற்சி தோல்வியில் முடிந்ததையடுத்து, இவ்வாறான அறுவைச் சிகிச்சைகளை மேற்கொள்வதற்கு டாக்டர்கள் தயக்கம் காட்டியுள்ளனர்.

1952 ஆம் ஆண்டுமுதல் ஒட்டிப் பிறந்த குழந்தைகளைப் பிரிக்கும் முயற்சிகள் வெற்றியில் முடிந்துள்ளன. குழந்தைப் பருவத்தில் இருக்கும் போது, அறுவைச் சிகிச்சையால் ஏற்படும் காயங்கள் விரைவில் குணமாவதே இதற்குக் காரணம் என்று கூறப்படுகிறது.

கருவானது ஒரே மாதிரியான அமைப்பைக் கொண்ட இரு பகுதிகளாகப் பிரியும் போது சில சமயங்களில் அவற்றில் ஒரு பிரிவு பாதியிலேயே பிரியாமல் நின்றுவிடும். அதனாலேயே ஒட்டிப் பிறந்த குழந்தைகள் பிறக்கின்றன.

ஒட்டிப் பிறந்த குழந்தைகள் எல்லாம் உயிர்வாழ்வதில்லை. இவற்றில் 40 சதவீதம்முதல் 60 சதவீதம் வரையான குழந்தைகள் இறந்தே பிறக்கின்றன.

மேலும் சில குழந்தைகள் பிறந்த 24 மணித்தியாலங்களுக்குள் இறந்துவிடுகின்றன. உயிரோடு இருக்கும் குழந்தைகளின் முக்கிய உடல் அவயவங்களை பங்கு போடவேண்டியிருப்பதால் அவர்கள் ஆயுள் முழுவதும் சிரமப்படவேண்டியுள்ளது என்று டாக்டர்கள் கூறியுள்ளனர்.

### குவைத் இளவரசர் பதவி நீக்கம்

குவைத்தின் பட்டத்து இளவரசர், அவர் வகித்து வந்த பிரதமர் பதவியிலிருந்து நீக்கப்பட்டதாக செய்திகள் வெளியாகின.

இந்தப் பதவி நீக்கத்துக்கான காரணம் உடனடியாக வெளியிடப்படவில்லை.

## நிலச்சரிவுக்குள் சிக்கி 51 சீனர்கள் உயிரிழப்பு!

பெய்ஜிங்,ஜூலை16

கடந்த சனிக்கிழமை மேற்கு சீனாவில் ஏற்பட்ட நிலச்சரிவின் போது காணாமல்போன 51 பேரையும் உயிருடன் மீட்கலாம் என்ற நம்பிக்கை தங்களுக்கு இல்லாமல் போயிருப்பதாக மீட்புப்படையினர் தெரிவித்துள்ளனர்.

அதேவேளை, நாட்டின் கிழக்குப் பகுதியில் ஏற்பட்ட பெருவெள்ளத்தில் இருந்து தப்பிய 1.6 மில்லியன் மக்கள் தற்காலிக தங்குமிடங்களில் வைக்கப்பட்டுள்ளனர்.

வெள்ளம், இயற்கை அழிவு, நிலச்சரிவு காரணமாக சீனாவில் இந்த ஆண்டு 500 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.

இதனிடையே -

நதிகளிடையே உள்ள தீவுகளில் உலகிலேயே பெரியதான மாஜிலி தீவு வெள்ளத்தினால் சூழப்பட்டுள்ளது. பல வீடுகள் அழிந்துள்ளன. மேலும் பல வீடுகள் அழியும் நிலையில் உள்ளன. இந்தத் தீவு 800 சதுர கி.மீ. நிலப்பரப்புக் கொண்டது.

(ம)

## கனேடிய பெண் பத்திரிகையாளர் ஈரானில் கொல்லப்பட்டாரா? சர்ச்சைகள் கிளம்பின!

கடந்தவாரம் ஈரானிய சிறையில் கனேடிய பெண் பத்திரிகையாளர் மரணமான சம்பவம் குறித்த சர்ச்சைகள் கிளம்பியுள்ளன. 54 வயதுடைய ஷாரா என்ற இந்தப் பெண் நோய் காரணமாக இறந்தார் என்று ஈரான் அறிவித்தது. ஆனால், பொலீஸார் தாக்கியதாலேயே ஷாரா இறந்தார் என்று கனேடியர்கள் கூறுகின்றார்கள்.

அத்துடன், ஷாராவின் உடலை கனடாவுக்கு அனுப்பாமல் ஈரானிலேயே அடக்கம் செய்துவிட்டனர் ஈரானிய அதிகாரிகள்.

ஷாராவின் மகன் ஸ்டீபன், தனது தாய் ஈரானிய பொலீஸ் விசாரணையாளர்கள் தாக்கியதாலேயே மயக்கமடைந்து அதன் பின் மரணமடைந்தார் என்று குற்றஞ்சாட்டியுள்ளார்.

ஷாராவின் உடலை கனடாவுக்கு கொண்டு வரவேண்டும் என்றும் அப்போதுதான் ஷாரா எவ்வாறு இறந்தார் என்பதைக் கண்டறியமுடியும் என்றும் கனேடியர்கள் கூறுகின்றனர்.

தனது தாயின் உடல் கடந்த திங்கட்கிழமை அடக்கம் செய்யப்பட்டுவிட்டது என்று ஈரானிய அதிகாரிகள் தனக்குத் தெரிவித்ததாகக் கூறும் ஸ்டீபன், தனது தாயின் உடலைத் தோண்டி எடுத்து அதனைக் கனடாவுக்கு அனுப்பிவைக்குமாறு ஈரானிய அரசை கனேடியர்கள் வற்புறுத்தவேண்டும் என்று கேட்டுள்ளார்.

ஷாராவின் உடலை கனடாவுக்கு அனுபபவேண்டும் என்று கனேடிய பிரதிப் பிரதமர் ஜோன் மான்லியும் கேட்டுள்ளார்.

ஆனால், ஷாரா உண்மையில் தலையில் பலமாக அடிபட்டு இறந்திருக்கும் பட்சத்தில் ஈரானிய அரசு ஷாராவின் உடலை கனடாவுக்கு அனுப்பாது. ஏனெனில், உண்மை வெளியாகும் பட்சத்தில் நாட்டுக்கு தலைக்குனிவு ஏற்படும் என்று அது நினைக்கலாம் என அவதானிகள் கூறியிருக்கின்றனர்.

ஷாராவின் தாயின் அனுமதியுடனேயே ஷாராவை அடக்கம் செய்ததாக ஈரானிய அதிகாரிகள் கூறும் கருத்தையும் ஸ்டீபன் மறுத்துள்ளார். அவ்வாறு அனுமதி பெறப்பட்டிருப்பின் அது பலவந்தமாகப் பெறப்பட்டதாகவே இருக்கும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மரணமான ஷாரா ஈரானில் பிறந்தவர். கனடா பிரஜையாக இருந்த போதும், ஈரானிய பிரஜாவுரிமையையும் ஷாரா வைத்திருந்தார்.

ஈரானிய இஸ்லாமிய சட்டப்படி ஷாராவின் உடல் தொடர்பான நடவடிக்கை எடுக்கும் உரிமை ஷாராவின் தாயாருக்கே உள்ளது என்பதால் அவரிடம் அனுமதி பெற்றே ஷாராவை அடக்கம் செய்துள்ளதால் அதில் தவறில்லை என்று ஈரானிய செய்திகள் தெரிவிக்கின்றன.

### தற்கொலைகள் அதிகரிப்பு

பிரிட்டிஷின் ஆதிக்கத்தில் இருந்த ஹொங்கொங் 1997ஆம் ஆண்டு சீனாவிடம் ஒப்படைக்கப்பட்டது. அதுமுதல் ஹொங்கொங்கில் பொருளாதாரம் சீர்கெட்டு வருகிறது. வேலையில்லாத் திண்டாட்டங்களும் அதிகரித்து வருகின்றன. ஆட்சி நடத்தி வரும் பிரதமர் தும்சிக்வா பதவி விலகவேண்டும் என்று வற்புறுத்தி அங்கு தொடர் போராட்டங்களும் நடைபெற்று வருகின்றன.

வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்துள்ளதைத் தொடர்ந்து அங்கு தற்கொலைகளும் அதிகரித்துள்ளன. இந்த ஆண்டில் வேலையில்லாத் திண்டாட்டம் 9சதவீதம் அதிகரித்துள்ளது. வேலையில்லாமல் தவிக்கும் படித்த இளைஞர்கள் மற்றும் வேலை இழந்த தொழிலாளர்களில் 15 சதவீதம் பேர் அங்கு தற்கொலை செய்து கொள்கிறார்கள் என்று தெரியவந்துள்ளது.

Serendib EXPRESS

Feel The Difference......

செரண்டிப் விமான சேவை

இன்று 16 ஜூலை 2003 புதன்கிழமை RNL 102, 104, 106 விமான சேவையில் ரிக்கெட் பெற்றவர்கள் கவனத்திற்கு! எமது விமான சேவையில் நேரமாற்றம் ஏற்பட்டுள்ளதால் இக்குறித்த திகதியில் பயணஞ்செய்யவுள்ள பயணிகள் அனைவரும் காலை 9 மணிக்கு சிங்கள மகாவித்தியாலய மைதானத்திற்கு சமுகமளிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

தொடர்புகளுக்கு - 021 2223916
0777-714875

முகாமையாளர்,
யாழ்ப்பாணக் காரியாலயம்,
செரண்டிப் விமான சேவை.

(C/28968) (22-12-15)

# சமுர்த்தித் திட்டத்தின்கீழ் இங்கு கிராம அபிவிருத்திக்கு ரூ.2 லட்சம்

## உதவி ஆணையாளர் தெரிவிப்பு

வடமராட்சி,ஜூலை16

சமுர்த்தித் திட்டத்தின்கீழ் யாழ். மாவட்டத்தின கிராம அபிவிருத்திக்கு இரண்டு லட்சம் ரூபாவும், சந்தைப் படுத்தலுக்கு ஒரு லட்சம் ரூபாவும் சமுர்த்தி அதிகார சபையால் ஒதுக் கப்பட்டுள்ளது. விவசாய மீன்பிடி அபிவிருத்திக்கான நிதி தொடர்பான திட்டம் ஒன்று சமுர்த்தி அதிகார சபைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள் ளது. அதற்கான நிதியும் விரையில் கிடைக்கும்.

- இவ்வாறு பருத்தித்துறை பிர தேச செயலர் பிரிவில் இரண்டாவது சமுர்த்தி வங்கிச் சங்கத் திறப்பு விழாவில் கலந்துகொண்டு உரை யாற்றிய யாழ். சமுர்த்தி உதவி ஆணையாளர் தி.மகேஸ்வரகுமார் கூறினார்.

பருத்தித்துறை பிரதான வீதியில் கரவெட்டியில் அமைக்கப்பட்டுள்ள சமுர்த்தி வங்கிச் சங்கத்தை பிரதேச செயலர் வி.வீரபத்திரபிள்ளை திறந்து வைத்தார். யாழ். சமுர்த்தி உதவி ஆணையாளர் தி.மகேஸ்வரகுமார் பெயர்ப்பலகையைத் திரைநீக்கம் செய்துவைத்தார்.

பிரதேச செயலர் ஆ.சிவசுவாமி தலைமையில் நடைபெற்ற இவ்வைப வத்தில், சமுர்த்தி உதவி ஆணை யாளர் தி.மகேஸ்வரகுமார் மேலும் தெரிவித்ததாவது:-

சமுர்த்தி அபிவிருத்தித்திட்டம் 1995ஆம் ஆண்டு தென்பகுதியில் நன்றாகச் செயற்பட ஆரம்பித்தது. யாழ். மாவட்டத்தில் தற்போதுதான் செயற்படத் தொடங்கியுள்ளது.

வறுமைக்கோட்டிற்குக்கீழ் வாழும் மக்களின் அபிவிருத்திக்கு சமுர்த்தித் திட்டம் ஒரு வரப்பிரசாதம். பல்வேறு திட்டங்களை உள்ளடங்கிய இத் திட்டத்தில் கிராம அபிவிருத்தி, சந் தைப்படுத்தலுக்கு நிதி ஒதுக்கப்பட் டுள்ளது. விவசாய, மீன்பிடி அபி விருத்திக்கும் விரைவாக நிதி கிடைக் கும்.

யாழ். மாவட்டத்தில் 322 சமுர்த்தி வங்கிச் சங்கங்கள் ஏற்படுத்தப்படும். இவ்வங்கிச் சங்கம் 24ஆவது சங்க மாகும். சமுர்த்தி வங்கிக்கென தற் போது ஒரு கோடி 31லட்சம் ரூபாவும் சிறுகுழுக்கள் நிதியாக ஒரு கோடி 50 லட்சம் ரூபாவும் வைப்பிலிடப்பட் டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் இதுவரை 12ஆயிரத்து 829 சிறு குழுக்கள் 24 சமுர்த்தி வங்கிகளின்கீழ் செயற் பட்டுவருகின்றன. சமுர்த்தித் திட்டத் தைச் செயற்படுத்துபவர்கள் வறிய மக்களே - என்றார்.

கரவெட்டிப் பிரதேச செயலர் வி. வீரபத்திரபிள்ளை உரையாற்றுகை யில் கூறியதாவது:-

சமுர்த்தித் திட்டம் மக்களுடை யது. சமுர்த்தித் திட்டத்தின் பொறுப் பும் மக்களுடையது. சமுர்த்தி வங் கிப் பணத்தை என்ன செய்வது என்பதைத் தீர்மானிப்பதும் மக்கள் தான். ஒவ்வொரு வறிய மக்களும் சமுர்த்தி வங்கியில் சேமிப்பதுடன், தேவைக்கேற்ப கடன்களைப் பெற்று தமது வாழ்க்கைத் தரத்தை உயர்த் திக்கொள்ளவேண்டும் - என்றார்.

வல்வெட்டித்துறை மாவட்ட அர சினர் வைத்தியசாலை வைத்தியப் பொறுப்பதிகாரி டாக்டர் கே.மயிலே றும்பெருமாள் உரையாற்றுகையில்:-

சேமிப்புப் பழக்கம் பெண்களிடம் தான் உண்டு; ஆண்களிடம் இல்லை. சேமிப்பை இலக்காகக் கொண்ட பெண்களுக்கு சமுர்த்தி வங்கி ஒரு வரப்பிரசாதம். தற்போது மீன்பிடித் தொழில் அதிகரித்துள்ள இவ்வேளை யில் தொழிலில் கிடைக்கும் வரு வாயைப் பல மீனவர்கள் மது பாவ னையில் செலவிடுகிறார்கள். இச் செயலைநிறுத்தி, உழைக்கும் போதே சேமித்துப் பழகவேண்டும் - என்றார்.

இவ்வைபவ ஆரம்பத்தில் புலோலி பசுபதீஸ்வரர் கோயில் பிரதம குரு சிவஸ்ரீ க.சிவனேசக்குருக்கள், பருத் தித்துறை பங்குத் தந்தை அருட் திரு. பயஸ் இருதயதாஸ் அடிகள் ஆகியோர் ஆசியுரை வழங்கினார் கள்.

பருத்தித்துறை மக்கள் வங்கி முகாமையாளர் திருமதி சி.ஆதவன், தேசிய சேமிப்பு வங்கி கிளைப் பிரதிநிதி எஸ்.தூங்கராசா, சமுர்த்தி வங்கிச் சங்க முகாமையாளர் ச.பேம றாஜ், சமுர்த்தி முகாமையாளர் க.அன்ரனி ஆகியோரும் உரையாற்றி னார்கள். (ம-173)

# காணி உத்தியோகத்தர் இல்லாமல் பளை மக்கள்

## மீள்குடியமர்வுக் கொடுப்பனவு பெறுவதில் சிக்கல்

தென்மராட்சி,ஜூலை16

பளைப் பிரதேச செயலகத்தில் காணி உத்தியோகத்தர் இல்லாததால் இபபிரதேசத்தைச் சேர்ந்த பல குடும் பங்கள் மீள்குடியமர்வுக் கொடுப்பன வினைப் பெற்றுக்கொள்ள முடிய வில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

இப்பிரதேசத்தின் பல இடங்களில அரச காணிகளில் குடியேறிய பல குடும்பங்களுக்கு காணி உறுதி வழங் கப்படவில்லை. தற்போது குடியிருப் பினை உறுதிப்படுத்துவதற்கு காணி உத்தியோகத்தர் இல்லாததால் கொடுப்பனவினைப் பெறமுடியவில்லை எனப் பொதுமக்கள் தெரிவித்தனர்.

பிரதேச செயலகத்தில் கடமை யாற்றிய காணி உத்தியோகத்தர் இடமாற்றம் பெற்றுச் சென்றதை யடுத்து எவரும் நியமிக்கப்படாததால் 2000ஆம் ஆண்டு இடம்பெயர்வின் பின்னர் மீளக் குடியமர்ந்த மக்கள் தமது மீள்குடியமர்வுக் கொடுப்பன வைப் பெறமுடியவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது. (ம-117)

# கண்ணீர்க் காணிக்கை

கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட

## Dr.சுப்பையா இரத்தினசிங்கம்

அவர்கள் நேற்று 15-07-2003 கொழும்பில் காலமானார்.

அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அவரின் ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

Dr.ந.சர்வானந்தா குடும்பத்தினர்

ஊரெழு கிழக்கு, சுன்னாகம். (20294)(21-14-15)






# மனமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்



சிறந்த சமூகசேவையாளரான


## உயர்திரு. செ.சிவயோகநாதன்

அவர்கள் தரம்-1 கிராமசேவையாளராகப் பதவி உயர்வு பெற்றதையிட்டும் அடுத்து 25.06.2003 அன்று மல்லாகம் நீதிமன்றத்தில் மாவட்ட நீதிபதி திருமதி ச.இளங்கோவன் முன்னிலையில் சமாதான நீதி வானாகச் சத்தியப்பிரமாணம் செய்துகொண்ட தையிட்டும் இவரது சேவை மேலும் நல்லமுறையில் தொடர நாம் அவரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

காருண்யா களஞ்சியம்,
இல.31, பொற்பதி வீதி,
கொக்குவில். (20292)(21-26-14-15)

மருமக்கள்:
நிலக்ஷன், பவித்ரன்.

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



ஓய்வுபெற்ற வருமானவரி மேற்பார்வையாளரும், மல்வம் சனசமூக நிலைய முன்னாள் செயலாளரும், உடுவில் மத்தி கிராம முன்னேற்றச் சங்க முன்னாள் பொருளாளரும், மல்வம் திருக்குடும்ப ஆலய நிர்வாகப் பணிச்சபைப் பொருளாளரும், மல்வம் கிராமத்தைச் சேர்ந்தவருமாகி

உயர்திரு.

## சாமிநாதன் சிங்கராசா

அவர்கள் மல்லாகம் மாவட்ட நீதிபதி திருமதி ச. இளங்கோவன் முன்னிலையில் 09-07-2003இல் சமாதான நீதிவானாகச் சத்தியப் பிரமாணம் செய்துகொண்டமையை முன்னிட்டு அவரை சிறப்புற வாழ்த்துவதோடு, மேன்மேலும் அவரது சமூகப் பணிகள் சிறக்க இறை ஆசியை வேண்டுகின்றோம்.

ஞானப்பிரகாசர் சனசமூக நிலையத்தினர்,
மல்வத்தை.

(20293)(21-14-15)




உதயன்

# இந்தியாவில் உள்ள இலங்கை அகதிகள்

தமிழ்நாட்டு அகதி முகாம் ஒன்றில் சுமார் 12 வருடங்கள் தங்கியிருந்த இலங்கை அகதிகளில் 13 பேர் கடந்த 8ஆம் திகதி முகாமிலிருந்து வெளியேறி படகுகளில் சட்டவிரோதமாக வந்து நெடுந்தீவில் இறங்கியிருக்கின்றனர்.

அவர்கள் கூறிய கதை சோகக்கதை. அதைக் கேட்டவர்களும் பத்திரிகைகளில் படித்தவர்களும் "இந்தியாவில் இப்படியா? நம்மவர்களுக்கு அங்கே இவ்வளவு கஷ்டங்களா?" என்றெல்லாம் வேதனை தெரிவிக்கின்றார்கள். பலரும் இந்தியாவில் உள்ள இலங்கை அகதிகள் பற்றிப் புதிதாகப் பேசத் தொடங்கிவிட்டார்கள்.

இந்த விடயத்தில் உண்மை நிலை என்ன?

இலங்கையில் ஏற்பட்ட போர்ச் சூழல் காரணமாக உயிரைக் காப்பாற்றிக்கொள்வதற்காக இந்தியா சென்று தமிழ்நாட்டிலே தஞ்சமடைந்தவர்களில் 16 ஆயிரத்து 820 குடும்பங்களைச் சேர்ந்த 63ஆயிரத்து 860 பேர் 111 முகாம்களில் இன்றும் இருக்கிறார்கள்.

தமது உறவினர்கள், நண்பர்கள் ஆகியோரோடு 22ஆயிரத்து 320 அகதிகள் இருக்கிறார்கள். அவர்களுடைய கதை வேறு.

இந்திய மத்திய அரசின் உதவியோடு தமிழ்நாடு அரசு இந்த அகதிமுகாம்களை நடத்தி வருகிறது. இவற்றுக்குப் பொறுப்பாக புனர்வாழ்வு ஆணையாளரும் அவருடைய அலுவலர்கள் பலரும் இருக்கிறார்கள்.

முகாம்களில் தங்கியிருக்கும் அகதிகளுக்கு ஒரு குறிப்பிட்ட தொகைப் பணம், உணவுப் பண்டங்கள், சமையல் பாத்திரங்கள், உடுபுடைவைகள் முதலானவை வழங்கப்படுகின்றன; மருத்துவ வசதிகள் செய்துகொடுக்கப்பட்டுள்ளன; அகதிகளின் பிள்ளைகள் கல்விகற்பதற்கான ஏற்பாடுகளும் செய்து கொடுக்கப்பட்டுள்ளன; பல்கலைக்கழகங்களிலும் மற்றும் உயர் கல்வி நிலையங்களிலும் இலங்கை அகதிகளுக்கென இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

மருத்துவம் 20, பொறியியல் 25, சட்டம் 5, விவசாயம் 7, பல்தொழில்நுட்பம் 30 என்று இப்படிப் பல்வேறு கற்கைநெறிகளுக்கும் இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

இந்த உதவிகள் கிடைப்பதை எவரும் மறுக்கவில்லை. சட்டவிரோதமாக இலங்கை திரும்பிவரும் அகதிகள் கூறும் குறைபாடுகள் எல்லாம் உதவிகள் போதா என்பதுதான். பணத்துக்குப் பெரும் கஷ்டம், நல்ல தொழில் வாய்ப்புக்கள் இல்லை, நாளாந்த உணவுக்கே கஷ்டம், வெளி இடங்களுக்கு போய்வர வழியில்லை, முகாம்களில் உள்ள வசதிகள் மிகக் குறைவு, நரக வாழ்க்கை, இலங்கை திரும்பலாம் என்றால் அதற்கும் விடுகிறார்கள் இல்லை என்கிறார்கள் அகதிகள். இலங்கையிலும் அரசாங்க அகதி முகாம்கள் இருக்கின்றன. அவற்றில் தங்கியிருக்கும் அகதிகளும் அந்த முகாம்களில் தங்களுக்கு நரக வாழ்க்கை என்றே கூறுகிறார்கள்; வசதிகள் போதா என்கிறார்கள்.

மேற்குநாடுகளுக்கு புலம்பெயர்ந்து சென்ற இலங்கையர்கள் அங்கே தமக்கு சொர்க்க வாழ்வு என்றா கூறுகிறார்கள்! அதுவும் இல்லை. சுதந்திரம் இல்லை; வேலைவாய்ப்பு இல்லை; கிடைக்கும் ஆதாரப் பணமும் போதுமானதாக இல்லை என்று அவர்களும் குறைகூறவே செய்கிறார்கள். ஆக வீட்டுக்கு வீடு வாசற்படிதான்.

இந்தியாவைப் பொறுத்தவரை அரசியல் சூழ்நிலைகள் காரணமாக பழைய நிலைமை இன்றில்லை. அதில் மாற்றம் ஏற்பட்டிருப்பது உண்மைதான்.

என்றாலும் அமெரிக்கா, ஜப்பான் போன்று இந்தியா செல்வந்தநாடு அல்ல; ஏழைநாடு. இந்தியாவில் இன்றும் பட்டினிச்சாவுகள் இருக்கவே செய்கின்றன. அப்படியிருந்தும் பல மேற்குநாடுகளைப் போல இலங்கை அகதிகளை சொந்த நாட்டுக்கு விரட்டி அடிக்காமல் இந்தியா இவ்வளவு பெரும் எண்ணிக்கையிலான இலங்கை அகதிகளை தன்னால் முடிந்தவரை தொடர்ந்து பேணிப் பாதுகாத்து வருகிறது என்றால் அதற்காக நன்றி தெரிவிக்கவேண்டும்.

சட்டபூர்வமாக சொந்தத்தில் இலங்கை திரும்ப விரும்பும் அகதிகளை இந்தியா தடுக்கவில்லை. ஆனால், அப்படி ஒருவர் திரும்புவதற்கு சுமார் 18 ஆயிரம் ரூபா செலவாகும். அகதிகள் பணத்துக்கு எங்கே போவார்கள் என்ற கவலைதான் இந்தியாவுக்கு!

இன்று யுத்தமின்றி அமைதி நிலவினாலும் உள்நாட்டில் இடம்பெயர்ந்திருக்கும் அகதிகள் சொந்த இடங்களுக்குச் சென்று தமது வீடுகளில் குடியமர முடியாமல் தவிக்கிறார்கள். இந்த நிலையில் இந்திய அகதிகள் எல்லோரும் இங்கே திரும்பி வந்தால் என்ன ஆகும்?

இலங்கை - இந்திய அரசுகள் இரண்டும் இணைந்து இங்கே சொந்த இடங்களில் குடியிருப்புக்கு சாதகமானநிலை தோன்றிய பின்னர் அகதிகளின் இலங்கை வருகைக்கு ஏற்பாடு செய்யவேண்டும். அப்போது தான் அகதிப் பிரச்சினை சுமுகமாகத் தீரும். அதற்குள் எவரும் அவசரப்படுவது புத்திசாலித்தனமல்ல.

சங்கானை சிறுவன் துஷ்பிரயோக வழக்கு:

## மதகுருவின் விளக்கமறியல் மேலும் இரு வாரங்கள் நீடிப்பு

வலி.வடக்கு,ஜூலை16

சங்கானையில் கிறிஸ்தவ மதகுரு ஒருவர் சிறுவனை பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியதாகக் கூறப்படும் வழக்கில சட்ட வைத்திய அதிகாரியின் வைத்திய அறிக்கை நதிமன்றில் சமர்ப்பிக்கப்படாமையினால் மதகுருவின் விளக்கமறியல் மேலும் இரு வாரங்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கு நேற்றுமுன்தினம் மல்லாகம் நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது, நீதிவான் திருமதி சரோஜினி இளங்கோவன் மதகுருவின் விளக்கமறியலை நீடித்தார்.

கடந்த மாதம் சங்கானைப் பகுதியில் உள்ள சிறுவனை இந்த மதகுரு பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தினார் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் சந்தேகநபர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி அவரைப் பிணையில் விடும்படி கோரினார்.

சிறுவர் பாலியல் துன்புறுத்தல் தொடர்பான சட்டங்கள் திருத்தப்பட்டு வலுவாக இருப்பதனாலும், சட்ட வைத்திய அதிகாரியின் அறிக்கை கிடைக்காமையினாலும் மதகுருவை பிணையில் விடமுடியாது என்று நீதிபதி தெரிவித்தார். (ம-86)

## நாட்டு நடப்பு

### நங்கை நாணத்தால் உயிரை நீத்தாள்

பண்படுத்தி பலஆண்டு பயிர் செய்து வந்த காணியை
கண்கலங்கி கதிகலங்க கனடா நாட்டார் விற்றனர்
குண்டுபட்டுக் காலிழந்த கொழுநன் தன்னைக் கூட்டியே
அன்னையவள் அழுதுகொண்டு அடுத்த ஊருக்கேகினாள்.

கையில் பகவு கதறிட கண்கள் குளமாய் நிறைந்திட
பையில் பத்துச்சதமின்றியே பரிதவித்த மாதவள்
கள்ளு வாங்கி விற்றதனை காலம் போக்க எண்ணினாள்
மெள்ள இவளைக் கைது செய்து மேலும் சிறையிலிட்டனர்.

காலிழந்த கணவனை கண்ணிழந்த தாய்தனை
நாலிரண்டு போத்தல் விற்று நாளும் உயிர் காத்தவள்
நாலுமாதம் சிறையிருந்து நாணி வீடு வந்தபின்
அலரிக்கொட்டை அரைத்து உண்டு அமரராக மாறினாள்.

- விகடகவி.

# நெடுந்தீவு போக்குவரத்துக்கு புதிய படகு அமைக்க நிதி ஒதுக்கீடு செய்யுங்கள்!

### கூட்டமைப்பு எம்.பிக்களிடம் அப்பகுதி மக்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஜூலை16

நெடுந்தீவு - குறிகாட்டுவான் துறைமுகங்களுக்கிடையே கடல் பிரயாண சேவையில் ஈடுபடுத்துவதற்கென புதிய மோட்டார் படகொன்றை நிர்மாணிப்பதற்கு நிதி ஒதுக்கீடு செய்து தருமாறு யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் நெடுந்தீவு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பாக தமிழர் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான வீ.ஆனந்தசங்கரி, மாவை.சேனாதிராஜா, எம்.கே. சிவாஜிலிங்கம் ஆகியோருக்கு கடிதமொன்றையும் அவர்கள் அனுப்பிவைத்துள்ளனர்.

தற்போது நெடுந்தீவு - குறிகாட்டுவான் துறைமுகங்களுக் கிடையே கடல் பிரயாணத்தில் ஈடுபட்டுவரும் 'குமுதினி' படகு அடிப்படை வசதிகள் இல்லாமலும் அதிகமான மக்கள் போக்குவரத்திற்கு உகந்ததல்லாமலும் உள்ளது. இப்படகு மிக நீண்டகாலமாக இச்சேவையில் ஈடுபட்டு வருவதால் அடிக்கடி பழுதடைந்தவண்ணமுள்ளது.

இதனால், நெடுந்தீவு மக்கள் போக்குவரத்தில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்; தமது உடனடித் தேவைகளைப் பூர்த்திசெய்ய முடியாத நிலையிலும் உள்ளனர்.

எனவே, நெடுந்தீவு வாழ் மக்களின் நிலையைக் கருத்திற் கொண்டு நெடுந்தீவு - குறிகாட்டுவான் கடற்பிரயாண சேவையில் ஈடுபடுவதற்கென நவீன வசதிகளைக்கொண்ட பெரிய மோட்டார் படகொன்றைக் கட்டுவதற்கு நிதி ஒதுக்கீடு செய்து தருமாறு அவர்கள் அந்தக் கடிதத்தில் கோரியுள்ளனர். (ம-8)

## கோப்பாய்ப் பாலத்தடியில் சட்டவிரோத மணல் அகழ்வு

### கடல்நீர் உட்புகும் அபாயம்

கைதடி,ஜூலை16

கைதடி - கோப்பாய் வீதியில் கோப்பாய் பாலத்தடிப் பகுதிகளில் சட்டவிரோதமாக மணல் அகழப்பட்டு வருவதாக பொது மக்கள் புகார் தெரிவித்துள்ளனர்.

இப்பகுதியில் மணல் அகழப்படுவதால் குடியிருப்புகளுக்குள் கடல்நீர் புகும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை சட்டவிரோதமாக மணல் அகழப்பட்டுக்கொண்டிருந்தவேளை அங்கு சென்று அதனைத் தடுக்க முற்பட்ட நபர் ஒருவர் அவர்களால் அச்சுறுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதுவிடயத்தில் உரிய தரப்பினர் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று பொதுமக்கள் எதிர்பார்க்கிறார்கள். (எ-10-75)

மகனை வெட்டிக்கொன்ற தகப்பனின் வழக்கு:

# வீட்டிற்கு வரும்போதே அப்பா வெறியில் எல்லோரையும் வெட்டுகிறேன் என்றார்

### இறந்த தயாளனின் தங்கை சாட்சியம்

வலி.வடக்கு,ஜூலை16

"அப்பா வீட்டிற்கு வரும்போதே, 'எல்லோரும் இருங்கோ உங்களை நான் வெட்டுகின்றேன்' என்று போதையில் கத்திக் கொண்டே வந்தார். அப்போது அம்மாவும், இறந்த அண்ணாவும் ஏனைய மூன்று தம்பிகளும் மூன்று தங்கச்சிகளும் வீட்டில்தான் இருந்தோம்."

மேற்கண்டவாறு ஆனைக்கோட்டை உயரப்புலம் பகுதியில் தந்தையினால் கொடூரமாக வெட்டிக் கொலைசெய்யப்பட்டதாகக் கூறப்படும் ஸ்ரீகாந்தன் தயாளனின் மரண விசாரணையின்போது சாட்சியமளித்த அவரது 14வயதுச் சகோதரி நீதிமன்றில் தெரிவித்தார்.

ஆனைக்கோட்டை உயரப்புலம் பகுதியில் கடந்த மாதம் 9ஆம் திகதி தந்தையான பஞ்சாட்சரம் ஸ்ரீகாந்தன் என்பவரினால் கொலைசெய்யப்பட்டதாகக் கூறப்படும் 15வயதுச் சிறுவன் ஸ்ரீகாந்தன் தயாளனின் மரண விசாரணை நேற்றுமுன்தினம் மல்லாகம் மாவட்ட நீதிமன்றில் நீதிபதி திருமதி சரோஜினி இளங்கோவன் முன்னிலையில் இடம்பெற்றது.

மானிப்பாய் பொலிஸார் சாட்சியங்களை நெறிப்படுத்தி நீதிமன்றின்முன் ஆஜர் செய்தனர். அப்போது இறந்தவரின் 14வயதுச் சகோதரி தொடர்ந்து சாட்சியமளிக்கும்போது கூறியதாவது:-

"இறைச்சிக்காக மாடுகளை வாங்கிவிற்கும் தொழிலை அப்பா மேற்கொண்டு வந்தார் நாளாந்தம் அவர் குடித்துவிட்டே வீட்டுக்கு வருவார். நாங்கள் கோப்பாயில் குடியிருந்தோம். பிறகு, ஆனைக்கோட்டையில் நிரந்தரமாக குடியிருக்க வந்து குடியிருக்கின்றோம்.

"எங்களுடன் சொந்தம் எதுவும் இல்லாத ஒருபெண்ணையும் எங்கள் வீட்டில் அப்பா கொண்டுவந்து இருத்தியிருந்தார். இவருடன் மிகவும் அன்பாக அப்பா பழகுவார். அவரையும் அம்மாவைப் போன்றே நடத்துவார்.

"இந்தப் பெண்ணுக்கும் அம்மாவுக்கும் இடையில் அடிக்கடி சண்டை வரும். பிறகு அம்மா அப்பெண்ணை வீட்டிலிருந்து துரத்திவிட்டார். அதன்பின் அப்பா வீட்டிற்கு வந்து ஒவ்வொரு நாளும் சண்டை பிடிப்பார்.

"அப்பாவை கடந்த மாதம் 7ஆம் திகதி பொலிஸார் வீட்டிற்கு வந்து பிடித்துச்சென்றனர். அதன்பின்னர்தான் வீட்டில் இருந்து சென்ற பெண் காரணமாக அப்பா கோப்பாயில் சண்டை பிடித்துள்ளதாக எனக்குத் தெரியும். நீதிமன்றில் இருந்து அப்பாவை அம்மாவே பிணை எடுத்தார்.

"அம்மாவுடன் எமது உறவினர்களான செல்வராசா, சந்திரன், சீலன் ஆகியோரும் நீதிமன்றுக்குச் சென்றிருந்தனர். ஆனால், அம்மாதான் முதலில் வீட்டுக்கு வந்தார். பிறகுதான் அப்பாவும் ஏனையவர்களும் வீட்டுக்கு வந்தனர்.

"வீட்டிற்கு வரும்போதே வெறியில் வந்த அப்பா, 'எல்லோரும் இருங்கோ வெட்டுகின்றேன்' என்று கூறிக்கொண்டே வந்தார். அப்போது இறந்துபோன அண்ணா வீட்டின் வெளியில் நின்றான்.

"வீட்டுக் கூரையில் மீன் வெட்டும் கத்தி ஒன்றை அப்பா ஒளித்து வைத்திருப்பார். அக்கத்தியை எடுத்துக்கொண்டு அண்ணாவைப் பிடித்துவிட்டார். நாங்கள் கத்திக்கொண்டு ஓடி வந்தோம்.

"அப்போது அப்பா அண்ணாவைக் கத்தியால் பிடரியில் அடிப்பதைக் கண்டேன். நாங்கள், எல்லோரும் பயத்தில் மாமி வீட்டை ஓடிவிட்டோம். பிறகு மாமா வந்து கூறிய பின்னர்தான் அண்ணா வெட்டப்பட்ட இடத்திற்கு வந்தோம்" - எனவும் கூறிவிட்டார்.

அயல்வீட்டில் வசிக்கும் 12வயதுச் சிறுமி ஒருத்தி தனது சாட்சியத்தில் தெரிவித்ததாவது:-

"சம்பவதினம் மத்தியானம் எனது வீட்டிற்கு வந்த ஸ்ரீகாந்தன் எனது கழுத்தில் கத்தியை வைத்துக்கொண்டு 'என் மனைவி, பிள்ளைகள் இங்கு வந்தார்களா?' என்று கேட்டு வெருட்டினார். அப்போது எனது அம்மா 'என் பிள்ளையை வெட்டுகின்றான்' என்று கத்தினார். அதனைத் தொடர்ந்து நானும் கத்தினேன்; அவர் ஓடிவிட்டார்." - என்றார்.

தனது கழுத்தில் ஸ்ரீகாந்தன் கத்தியை அழுத்தியதனால் வெட்டப்பட்டு, காயம் ஏற்பட்டுள்ளது என்று தனது காயத்தையும் நீதிமன்றத்திற்குக் காட்டினார் அந்தச் சிறுமி.

"எனது கழுத்தில் வைத்த கத்தியில் ஏற்கனவே இரத்தம் இருந்ததை நான் கண்டேன். நான் ஸ்ரீகாந்தனிடம், "உங்கள் பிள்ளைகளும் மனைவியும் இந்தப்பக்கம் ஓடுகிறார்கள்" என்று கூறினேன். நாங்கள் விளையாடிக்கொண்டு இருக்கும்போது இறந்த தயாளன் வீட்டில் ஒருவரின் குளறிக்கேட்ட சத்தத்தைக் கேட்டேன்.

"அம்மாவும் நானும் குளறியதைத் தொடர்ந்து உரிய இடத்திற்கு, வந்த எனது அப்பா, அயலவர்களையும் திரட்டிக் கொண்டுவந்து ஸ்ரீகாந்தனை பிடித்து, மரத்தில் கட்டினார்" - எனவும் தெரிவித்தார்.

ஏனையோரின் சாட்சியங்கள் தொடர்ந்து பதிவுசெய்யப்படுகின்றன. (ம-86)

### நாளை

ஆடி 01
வியாழக்கிழமை
(17.07.2003),
திதி : சதுர்த்தி
முன்னிரவு 10.51 வரை
நட்சத்திரம் : சதயம்
பின்னிரவு 1.31வரை
ஆடிப்பிறப்பு
சுபநேரம் : 7.30 - 9.00
ராகுகாலம் : 1.30 - 3.00
(பழைய நேரப்படி)

### உதய வாக்கு

மனம் ஒரு நல்ல பணியாளன். எனவே, அதற்குள் நல்ல சிந்தனைகளை மட்டுமே சேமித்து வையுங்கள்.

இலங்கையில் முதல் முறையாக
மாணவர்களுக்கான

**தமிழ் வெப்தளம்**

www./stnet.com

(உயர்தர வர்த்தக பாடங்கள், சாதாரண்தரம், பொழுதுபோக்கு அம்சங்களுடன்)

(20285) (21-15-19)



இதோ, யாழ். நகரில்

ஆரோக்கிய வாழ்வின் அற்புத தோழன்

**ரீஷி காளான்**

DXN

நலத்துடன் வளம்பெற ஒரு முறை வந்து பாருங்கள்.

No.1, ஸ்ரீ வெங்கடேசன் வீதி,
பெருமாள் கோவிலடி,
யாழ்ப்பாணம்.

ச.பரமானந்தம்
யாழ்நகர முகவர்

(20280) (21-15-19)


### தீவுப்பகுதி பல நோ.கூ.சங்கம் - அனலைதீவு

## பொதுமுகாமையாளர் பதவி வெற்றிடம்

மேற்படி பதவிக்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப்படிவங்களை உரியமுறையில் தயாரித்து "தலைவர், தீவுப்பகுதி பல நோ.கூ.சங்கம் - அனலைதீவு" என விலாசமிட்டு கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் பதவியின் பெயர் குறிப்பிட்டு பதிவுத்தபால்மூலம் அனுப்பப்படல் வேண்டும்.

1. *சம்பள அளவுத் திட்டம்*

   கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு சுற்றறிக்கை இல.31/99 அமைய
   4750 - 6850
   ------------ - 10
   100X10-110X10

2. *தகைமைகள் -*

   அ. கூட்டுறவுப் பணியாளர் 9ஆவது (11)சம்பளத்திட்டத்தில் முகாமை/ மேற்பார்வை மட்டத்தில் 3 வருடங்களுக்குக் குறையாத அனுபவம் அல்லது10ஆவது (12) சம்பளத்திட்டத்தில் மேற்குறித்த வண்ணம் 6வருடங்களுக்குக் குறையாத அனுபவம்

   அல்லது

   ஆ. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றின் பட்டத்துடன் அல்லது அதற்கு இணையான பட்டத்துடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/தொழில்நுட்ப ஸ்தாபனமொன்றில் முகாமை மட்டத்திலான பதவியில் ஒரு வருடத்திற்குக் குறையாத அனுபவம்.

   அல்லது

   இ. கூட்டுறவுப் பணியாளர் தராதரப்பத்திரம் உயர்தரம் க.பொ.த.உயர்தரத்தில் 3 பாடங்களில் சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/தொழில்நுட்ப ஸ்தாபனம் ஒன்றில் முகாமை மட்டத்தில் 2 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

3. *வயதெல்லை - 18 - 45*

   (தற்போது இச்சங்கத்தில் கடமையாற்றும் ஊழியர்களுக்கு மட்டும் வயதெல்லை கிடையாது)

4. ஏனைய சங்கத்தில் பணிபுரிபவர் விண்ணப்பம் செய்யுமிடத்து தங்கள் சங்கத்தினூடாக விண்ணப்பிக்கவேண்டும்.

5. விண்ணப்ப முடிவு திகதி: 31.07.2003

(20284) (21-15-19) - தலைவர்.

## 12ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| மண்ணில் முளையாய் | மண்ணில் விதையாய் |
|---|---|
| 12 - 07 - 1971 | 16 - 07 - 1991 |

### 2ஆம் லெப்டினன்ட் சங்கர்

(பொன்னுக்கோன் ஜெயந்திரன் - துதி)

அன்பு முகம் கண்ணில் மின்ன
ஆசைமொழி கேட்க நாம் ஏங்கி நிற்க
அந்நியனின் எதிர்ச் சமரில்
ஆவி துறந்தாய் ஆனையிறவில்
அலறுகின்றோம் நாம் இங்கு
வாராயோ மீண்டும்?

நாவற்குழி. (20283) (21-15-19) - குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 24 - 04 - 1924 | 27 - 06 - 2002 |

### திருமதி S.K.ஆறுமுகம் வள்ளியம்மை

ஆண்டு ஒன்று சென்றாலும் தாயே!
உங்கள் நினைவுகள் மட்டும்
எங்கள் நெஞ்சை விட்டகலாது!

எமது அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனை வேண்டி நிற்கின்றோம்.

உங்கள் நினைவுடன் வாழும்:
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

கைதடி நாவற்குழி,
கைதடி. (20281)(21-15-19)

## நிவாரணம் நிறுத்தம்

தென்மராட்சி,ஜூலை16

பளைப் பிரதேசத்தில் மீளக் குடியமர்ந்த சில குடும்பங்களின் இடம்பெயர்ந்தோர் நிவாரணம் நிறுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மீளக் குடியமர்ந்தோரில் வியாபாரம் செய்வோர், வாகனம் வைத்திருப்போர் உட்பட சில குடும்பங்களின் நிவாரணம் நிறுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஜ-117)

## அம்பனில் சமுர்த்தி வங்கிச்சங்கம்

வடமராட்சி,ஜூலை16

யாழ்.மாவட்டத்தில் 25ஆவது சமுர்த்தி வங்கிச் சங்கம் வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள அம்பனில் விரைவில் திறந்து வைக்கப்படவுள்ளது.

இப்பிரிவில் திறக்கப்படும் இரண்டாவது வங்கிச் சங்கம் இதுவாகும். யாழ்.மாவட்டத்தில் முதலாவது சமுர்த்தி வங்கிச் சங்கம் இப்பிரிவில் உள்ள மருதங்கேணியில் ஆரம்பித்து வைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

(ஜ-173)

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,ஜூலை16

'சமாதான செயற்பாடுகளை முன்னெடுப்பதில் பெண்கள் பங்கு' என்ற தலைப்பில் மகளிர் அபிவிருத்தி நிலையம் நடத்தும் கருத்தரங்கு எதிர்வரும் 19ஆம், 20 ஆம் திகதிகளில் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

சமாதான செயற்பாடுகளிற்கு பெண்களின் ஆக்கபூர்வமான பங்களிப்பைப் பெற்றுக்கொள்வது ஓர் ஆரோக்கியமான சூழலை உருவாக்கும் என்ற நோக்கத்துடன் இருநாள்களும் காலை 9 மணி முதல் மாலை 4 மணிவரை நடைபெறவுள்ள இக்கருத்தரங்கில் மாணவர்கள், மாதர் சங்கங்களின் பிரதிநிதிகள், அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஜ-8)

## வேலையாள்கள் தேவை

எம்மால் மேற்கொள்ளப்படவிருக்கும் கட்டட புனரமைப்பு வேலைகளுக்கு கீழ்க்காணும் வேலையாள்கள் உடனடியாகத் தேவை.

சம்பள விவரம்

| | | | |
|---|---|---|---|
| மேசன் | 350/- | கூலியாள் | 250/- |
| தச்சுத்தொழிலாளர் | 350/- | வெல்டர்ஸ் | 300/- |

உடன் தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:

**ரட்ணா எஞ்சினியேர்ஸ்**

(20252) கேணியடி, கொக்குவில் மேற்கு, கொக்குவில். (21-15-19)

## நெஞ்சகலாத நினைவஞ்சலி

| முதலாம் ஆண்டு | பத்தாம் ஆண்டு |
|---|---|
|  |  |
| அமரர் கனகசபை பரமசாமி | திருமதி பரமசாமி சிவயோகம (குணம்) |

14.11.1928 ⟶ மலர்வு ⟵ 20.08.1933
27.06.2002 ⟶ உதிர்வு ⟵ 07.07.1993

அன்பால் எம்மைக் காத்து ஆசையால்
எம்மை வளர்த்து
பூவுலகில் சிறக்க வைத்த எம் தெய்வங்களே!
சீராக நாம் வாழும் காலமதில் எம் சிறப்பைக்
காணாது சென்றனையோ?
"ஐயா! அம்மா!" என்று நாம் ஆயிரம் தரம்
அழைத்தாலும்
உங்களைக் காணாது தவிக்கின்றோம்.

இந்நாளில் தங்களை நினைவு கூருகின்றோம்.
உங்களது ஆத்மா சாந்தி அடையட்டும்!
ஓம் சாந்தி!

பிரிவால் துயருறும்:
பிள்ளைகள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள்,
மைத்துனர்மார்.

31, புதுவீதி,
கொய்யாத்தோட்டம்,
யாழ்ப்பாணம். (20286)(21-15-19)


உங்கள் வாழ்வையும் ஒளிமயமாக்கிட....

வடக்கு கிழக்கு மக்களுக்கு ஒரு அரிய வாய்ப்பு

Polycrome®

ELECTRICAL ACCESSORIES




நீங்கள் வாங்கும் ஒவ்வொரு மின் ஆழி அல்லது சொக்கட்டுடனும் ஒரு பொலிக்ரோம் சங்க்பெட்டி இலவசம்

உங்கள் அருகிலுள்ள விநியோகஸ்தரை இன்றே நாடுங்கள்

சர்வதேச தரத்திற்கமைய உருவாக்கப்பட்ட ஃபேடியோ மின் ஆழிகளுடன் சொக்கட்கள்

எங்களிடம்
- MCB என்க்ளோஷர்கள்
- 5 AMP, 13 AMP, 15 AMP ப்ளக் டொப்கள்
- லாம்ப் ஹோல்டர்ஸ், விட்டொ ஹோல்டர்ஸ், சீலிங் ரோஸ், சுவிட்சுகள் பொருத்தும் பெட்டிகள், அழைப்பு மணிகள். என்பவையும் உண்டு

விநியோகஸ்தர்: எஸ்ஜே இலக்ட்ரிகல்ஸ்
இல. 9, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தோ.பே : 021-2222564

**பொலிக்ரோம் இலக்ட்ரிகல் இண்டஸ்ட்ரீஸ் பிரைவேட் லிமிடட்**
333/9, பழைய கெஸ்பாவ வீதி,
ரத்தனபிட்டிய,
பொரலஸ்கமுவ.

உயர் தரம்மிக்க மின் உபகரண உற்பத்திகளுக்கு பொலிக்ரோம்

# 96 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இதுவரை 9,169 பேருக்கே சாரதி அனுமதிப்பத்திரம்

யாழ்ப்பாணம்,ஜூலை16

யாழ் செயலகத்தில் உள்ள மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள அலுவலகம் 1996 ஆம் ஆண்டு முதல் இவ்வாண்டு ஜுன் மாதம் வரை 9,169 சாரதி அனுமதிப்பத்திரங்களை வழங்கியுள்ளது.

இதில் இவ்வாண்டு ஜனவரி மாதம் முதல் ஜுன் மாதம் வரையான காலப்பகுதிக்குள் 2,271 சாரதி அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளதாக மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள அலுவலக அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். சாரதி அனுமதிப்பத்திரங்களுக்கு விண்ணப்பித்துவிட்டு காத்திருப்போருக்கு 2,471 அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட வேண்டியுள்ளன எனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை - யாழ். செயலக மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தில் 1996 ஆம் ஆண்டு முதல் இவ்வாண்டு ஜுன் மாதம் வரை 15,653 மோட்டார் சைக்கிள்கள் பதிவுசெய்யப்பட்டுள் ளன என்றும் இதில் இவ்வாண்டு ஜனவரி முதல் ஜுன் வரை 1,176 மோட்டார் சைக்கிள்கள் பதியப்பட்டுள்ளன எனவும் தெரிவிக்கப்பட்டது. (ஜ-8)



மந்துவில் கிழக்கு பாலர் பகல் பராமரிப்பு நிலைய ஆரம்ப விழாவின்போது முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்ட சாவகச்சேரி நகர கிராம அலுவலர் வை.இராசரத்தினம் நிலைய பெயர்ப் பலகையினைத் திரைநீக்கம் செய்வதைக் காணலாம். (படம்: தென்மராட்சி செய்தியாளர்)

# அரசியல்வாதிகளின் பலவீனங்களினால் நாட்டுக்கு 50 ஆண்டுகளாக நன்மையில்லை

## அவர்களை வீட்டுக்கு அனுப்பவேண்டும் என்கிறார் ஜனாதிபதி



கொழும்பு,ஜூலை16

அரசியல்வாதிகளின் பலவீனங்களினாலேயே கடந்த 50 ஆண்டுகளில் இந்த நாட்டுக்கு நன்மையான சேவை எதுவும் நடைபெறவில்லை. அவ்வாறு பலவீனமான அரசியல்வாதிகள் வீட்டுக்கு அனுப்பப்படவேண்டும் என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கூறினார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற பொறியியலாளர்கள் நிறுவனத்தின் வெள்ளிவிழா தொடர்பான வைபவத்தில் உரையாற்றியபொழுதே ஜனாதிபதி இவற்றைக் கூறினார்.

ஜனாதிபதி சந்திரிகா அங்கு தொடர்ந்து கூறியதாவது:-

"பத்து ஆண்டுகளுக்கு கூடுதலான காலம் நாட்டின் தலைவியாக இருக்க எனக்குச் சந்தர்ப்பம் கிடைத்தது. எனது பதவிக்காலம் முடிந்ததும் வீட்டுக்குச் செல்வேன்.

அரசியலைத் தொழிலாகக் கொண்டவர்கள் நாடாளுமன்றத்துக்குள் நுழைய இடமளிக்கக்கூடாது. படித்த, புத்திசாலியான, கௌரவமான நபர்களே நாடாளுமன்றத்துக்கு அனுப்பப்படவேண்டும்.

இநநாட்டு அரசியல்வாதிகள் மேற்கொள்ளும் ஊழலையும் மோசடியையும் ஒழிக்க முடியுமானால் நாட்டை முன்னேற்றப்பாதையில் இட்டுச்செல்ல முடியும்.

இப்பயணத்தை ஒருவரோ அல்லது இருவரோ மேற்கொள்ளமுடியாது. இதற்கு நேர்மையான மனிதர்கள் அனைவரும் ஒன்றுபடவேண்டும் - இவ்வாறு ஜனாதிபதி கூறினார்.(ஓ)

# வடக்கு - கிழக்கு கஷ்டப் பிரதேசங்களுக்கு சூரியஒளிமூலம் மின்சாரம் வழங்கத் திட்டம்

## இவ்வருட இறுதிக்குள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாம்

கொழும்பு,ஜூலை16

வடக்கு - கிழக்கு, சப்ரகமுவ, ஊவா மாகாணங்களிலுள்ள மின்சார வசதியற்ற - பின்தங்கிய - கஷ்டப் பிரதேசங்களுக்கு, உலக வங்கியின் நிதி உதவியுடன் சூரியஒளி மின்சக்தியைப் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சப்ரகமுவ மாகாண சபையின் செயலாளர் பிரேமதாஸ கொடித்துவக்கு தெரிவித்தார்.

அண்மையில் இரத்தினபுரி, குருவிட்ட புஸ்ஸல்ல கிராம அபிவிருத்தி நிலையத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:-

பின்தங்கியுள்ள கிராமங்களுக்கு மின்சாரம் வழங்குவதில் மின்சார சபை பாரிய நிதி நெருக்கடியினை எதிர்கொண்டுள்ளது. சூரியஒளிமூலம் மின்சக்தியைப் பெற்றுக்கொடுப்பதற்கான செலவு நேரடியாக மின்சாரத்தைப் பெறும் செலவையும்விட மிகக் குறைவானது என்று அறியப்பட்டுள்ளது.

சூரியஒளி மின்சாரத்தைப் பெற்றுக் கொடுக்கும் திட்டத்தின் இவ்வருட செலவுக்கென உலகவங்கியிடமிருந்து பெற்ற நிதி உதவியிலிருந்து 10கோடி ரூபாவை அரசு ஒதுக்கியுள்ளது. இது வடக்கு - கிழக்கு, சப்ரகமுவ, ஊவா மாகாணங்களின் மின் தேவைக்காகச் செலவிடப்படும்.

17,500 குடும்பங்களுக்கு சூரிய ஒளி மின்சாரம் இவ்வருட இறுதிக்குள் வழங்கப்படவுள்ளது. ஐந்து ஆண்டுகளுக்கு இத்திட்டம் தொடர்ந்தும் முன்கொண்டு செல்லப்படும்.

- இவ்வாறு அவர் கூறினார்.

# சித்த மருத்துவ மாணவர் போராட்டத்துக்கு ஆதரவு

யாழ்ப்பாணம்,ஜூலை16

சித்த மருத்துவத்துறையை நிறுவன மயமாக்குவதைக் கண்டித்து சித்த மருத்துவ மாணவர்கள் நடத்தும் போராட்டத்துக்கு யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் ஆதரவு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக ஒன்றியம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தமிழர்களின் சுதேச வைத்தியமான சித்த மருத்துவத்தை வளர்ப்பதற்காக பல்கலைக்கழகத்தில் ஆரம்பிக்கப்பட்டது சித்த மருத்துவத்துறை. அது மேன்மேலும் வளர்ச்சி பெறவேண்டும் என்பதே எம்மக்களின் எதிர்பார்ப்பாகும். இத்துறையில் கல்விகற்கும் மாணவர்கள் பல தடவைகள் சித்த மருத்துவத்துறையை தனிப்பீடமாக ஆக்கித் தருமாறு கோரியிருந்தனர். ஆயினும், அக்கோரிக்கை நிராகரிக்கப்பட்டது. தற்போது அத்துறையை பீடமாக்குவதைத் தவிர்த்து அதனை பல்கலைக்கழக நிர்வாகத்திலிருந்து தனிமைப்படுத்துவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இத்துறை நிறுவனமாக்கப்பட்டால அதன் தரம் குன்றிவிடும் என மாணவர்கள் கருதுகின்றனர்.

பல்கலைக்கழக நிர்வாகத்தில் இருந்து தனிமைப்படுத்தப்பட்டால் விளையாட்டு, நாடகம், நூலகம் போன்றவற்றில் முழுமையாக பல்கலைக்கழகத்துடன் இணைந்து செயற்பட முடியாதுபோகும்.

சித்த மருத்துவத்துறையை தனியொரு பீடமாக்கினால் அது ஏனைய பீடங்கள் போன்று வளர்ச்சியடையும். இதன்மூலம் சுதேச வைத்தியத்துறையைக் கற்கும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். அதன்மூலம் சுதேச வைத்தியத்துறை வளர்ச்சி பெற்றுவிடும் - இவ்வாறு அதில் உள்ளது. (ஓ-9-117)

# தமிழகத்திலிருந்து படகுகள் மூலம் ஈழ அகதிகள் வருகை அதிகரிப்பு

## செயலகப் புள்ளிவிவரங்கள் தகவல்

யாழ்ப்பாணம்,ஜூலை16

இந்தியாவிலிருந்து நெடுந்தீவுக்கு மீன்பிடிப் படகுகள்மூலம் திரும்பும் ஈழ அகதிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக யாழ்.செயலக புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

கடந்த மாதம் மட்டும் 46குடும்பங்களைச் சேர்ந்த 62பேர் இவ்வாறு தாயகம் திரும்பியுள்ளனர்.

குடாநாட்டைச் சேர்ந்தோர் மட்டுமன்றி வடக்கு - கிழக்கின் வேறு மாவட்டங்களைச் சேர்ந்த மக்களும் நெடுந்தீவுக்கு ஊடாக தாயகம் திரும்பி வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

உரியமுறையில் தாயகம் திரும்புவதற்கு அகதிகளுக்கு தமிழக அரசு கடவுச்சீட்டினை வழங்க மறுத்து வருவதாகவும் - இதனாலேயே பல ஆபத்துக்களின் மத்தியிலும் அதிகளவு பணம் கொடுத்து - மீன்பிடிப் படகுகள்மூலம் பாம்பன், இராமேஸ்வரம் கடற்கரைகளிலிருந்து நெடுந்தீவுக்கு வந்து சேர்கின்றனர் எனவும் யாழ். செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இவ்வாறு நாடு திரும்புபவர்களுக்கு அவர்களது சொந்த இடங்களுக்குச் செல்வதற்குரிய போக்குவரத்து ஒழுங்குகளை யாழ். செயலகம் வழங்கி வருவதாகவும் -

அவர்கள் ஒவ்வொருவருக்கும் தலா ஆயிரம் ரூபா வீதம் உதவிப் பணம் கொடுத்து அனுப்பிவைக்கப்படுகின்றனர் எனவும் - அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார். (ஜ-4)

# பரந்தன் சந்தை மீண்டும் 7வருடங்களின் பின் திறப்பு

கிளிநொச்சி பரந்தன் சந்தை கடந்த 7வருடங்களின் பின்னர் நேற்றுமுன்தினம் முதல் மீண்டும் இயங்கத் தொடங்கியுள்ளது.

கடந்த 1996ஆம் ஆண்டு இப்பகுதியில் இடம்பெற்ற யுத்தத்தினால் இச் சந்தை செயலிழந்திருந்து.

நேற்றுமுன்தினம் பிற்பகல் 1.30மணியளவில் பரந்தன் பிரதேச பிறப்பு, இறப்பு விவாகப் பதிவாளர் திருமதி பத்மநாதன் தலைமையில் சந்தையின் ஆரம்ப நிகழ்வுகள் நடைபெற்றன.

பொது ஈகச்சுடரை கரைச்சி பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் திருமதி அன்னலிங்கம் ஏற்றி வைத்தார்.

தமிழீழ தேசியக்கொடியை பரந்தன் பிரதேச அரசியல்துறை பொறுப்பாளர் சுதா ஏற்றினார். கண்டாவளை பிரதேச செயலர் சி.க.மத்தியாஸ் சந்தைக் கட்டடத்தைத் திறந்துவைத்தார். (ம-4)

# சுமார் 30 நாடுகளுடன் வர்த்தக ஒப்பந்தங்கள்

## அமைச்சு நடவடிக்கை

கொழும்பு,ஜூலை16

இவ்வருட இறுதிக்குள் தாய்லாந்து, சிங்கப்பூர், எகிப்து, சவூதி அரேபியா, ஐக்கிய அரபு குடியரசு, ஈரான், அவுஸ்திரேலியா நியூஸிலாந்து, தென் ஆபிரிக்கா, மியன்மார், மடகஸ்கர், மலேசியா மற்றும் வியட்நாம் உட்பட 30 நாடுகளுடன் சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்களை ஏற்படுத்துவதற்கான பேச்சுக்களை அரசு ஆரம்பித்துள்ளது. வர்த்தக அமைச்சர் ரவி கருணாநாயக்கா இத்தகவலை வெளியிட்டார்.

இந்த ஒப்பந்தங்களின்கீழ் வரிச்சலுகை வழுங்கப்படவேண்டிய பொருள்களின் பட்டியல் தயாரிக்கப்பட்ட பின்னர் சில மாதங்களுக்குள் ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட முடியுமென்றும் அவர் கூறியுள்ளார்.

இவ்வாறன சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்கள் செய்து கொள்வதன்மூலம் நாட்டின் தொழில் வளத்தை விருத்தி செய்யவும் உற்பத்தி விகிதாசாரத்தை உயர்த்தவும் முடியுமென்று அமைச்சர் கூறினார்.

இதேவேளை, ஏற்கனவே அமெரிக்காவுடன் வர்த்தக ஒப்பந்தமொன்றை ஏற்படுத்த இணக்கப்பாடு கண்டுள்ளதாகவும் -

அநேகமாக அடுத்த வருடத்தில் இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்படுமென்றும் - அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஓ-ரி)

# வருமான அதிகார சபையை நிறுவ அரசு தீவிர நடவடிக்கை

கடந்த வரவு - செலவுத் திட்டத்தில் குறிப்பிடப்பட்ட வருமானத்துக்கான அதிகார சபையை நிறுவ அரசு தற்போது முன்வந்துள்ளது.

இவ்வதிகார சபையை நிறுவுவதற்காக அரசினால் வருவாய்க்கான திட்டமிடல் ஆலோசனை வழங்கும் நிபுணர்கள் சிலர் முன்னர் தெரிவுசெய்யப்பட்டிருந்தனர். அக்குழு நடத்திய செயலமர்வின்போது நிதியமைச்சின் அலுவலர்கள் ம்த்தியிலேற்பட்ட கருத்து வேறுபாடுகளால் மேற்படி சபையை நிறுவும் நடவடிக்கை இடைநிறுத்தப்பட்டிருந்தது.

இந்த அதிகார சபை இலங்கை சுங்கத்துறை, தேசிய வருமான வரித் திணைக்களம் மற்றும் மதுவரித் திணைக்களம் என்பவற்றை உள்ளடக்கியதாக அமையவுள்ளது. இதன்படி இந்த அதிகார சபைக்கான தகுதிவாய்ந்த சிரேஷ்ட அதிகாரியைத் தெரிவுசெய்வதற்கான விண்ணப்பங்கள் நிதியமைச்சினால் கோரப்பட்டுள்ளன. (ஓ-ரி)

### பளையில் உள்ளூராட்சி வாரவிழா

தென்மராட்சி,ஜூலை16

பளை பிரதேச சபையின் உள்ளூராட்சி வாரவிழா நேற்றுமுன்தினம் ஆரம்பமாகியது; எதிர்வரும் 21ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது.

இக்காலப்பகுதியில் சிரமதானம், மரம் நடுகை விழா, நூலகவாரம், நூலக கண்காட்சி ஆகியவை இடம்பெறும் என்று பிரதேச சபை செயலாளர் இ.து.சிவராசா தெரிவித்தார். (ஜ-117)

### ஆலய உண்டியல் உடைப்பு

வடமராட்சி,ஜூலை16

மந்திகை கண்ணகை அம்மன் கோயில் உண்டியல் இரவுவேளை இனந்தெரியாதோரால் உடைக்கப்பட்டு அதற்குள் இருந்த பணம் திருடப்பட்டுள்ளது.

உடைக்கப்பட்ட உண்டியலை திருடர்கள் அருகில் உள்ள பற்றைக்குள் வீசிவிட்டுச் சென்றுள்ளனர் என்று கூறப்பட்டது. (ஜ-173)

# நாட்டின் மத்திய பிராந்தியத்தில் கிராமியச் செயலகப் பணிமனைகள்

## ஒரே கூரையின் கீழ் பல பணிகளுக்கு வசதி

கொழும்பு,ஜூலை16

நாட்டின் மத்திய பிராந்தியத்தில் கிராமிய செயலகப் பணிமனைகளைத் திறந்துவைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருக்கிறது. இதன்படி கண்டி, மாத்தளை, நுவரெலியா, பதுளை, பொலநறுவை, அனுராதபுரம் ஆகிய மாவட்டங்களில் இச்செயலகப் பணிகளை நிறுவும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. முதலாவது கிராமியச் செயலகம் உடுநுவர - கலுகல பகுதியில் நிர்மாணிக்கப்பட்டு இயங்குகின்றது.

கிராமசேவையாளர், விவசாய அதிகாரி, குடும்ப சுகாதார சேவையாளர், சமுர்த்தி அதிகாரி ஆகிய எல்லா அரசாங்க ஊழியர்களையும் ஒரே கூரையின் கீழ் கொண்டுவருவதே கிராமியச் செயலகத்திட்டத்தின் பிரதான நோக்கமாகும். இதன் மூலம் பொதுமக்கள் தமது கடமைகளை நிறைவேற்றுவதில் எதிர்நோக்கும் கஷ்டங்களைக் குறைத்துக்கொள்ள முடியும்.

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

சொந்தப் பாவனையிலுள்ள ரவுண் AC TOYOTA வான் 51- சகல ஆவணங்களுடனும் விற்பனைக்குண்டு. தரகர் தேவையில்லை. தொடர்பு: தொலைபேசி இல.: 0777 - 734339. (20274)

"ஜேர்மன் செப்பேர்ட்" நல்லின கறுப்பு நிற அல்சேசியன் நாய்க் குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: ஜே.ராஜா, "புஷ்பவாசா", ம.ம.வி. வீதி, நெல்லியடி, கரவெட்டி. (20269)

புறொயிலர் இறைச்சிக்கோழிகள் விற்பனைக்குண்டு. தினமும் வேண்டிய நிறையில் சுத்தஞ்செய்து பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு:- சிவா, இராமலிங்கம் வீதி, முடமாவடி, திருநெல்வேலி கிழக்கு. (20243)

செவ்வரத்தை (அடுக்கு மஞ்சள்), முசந்தாஸ், அடுக்கு நந்தியாவெட்டை, வெகிறீன், மஞ்சள் கொடிப் பூ, ஈரப்பலா, ஸ்பொஞ்பிளவர், முத்துப் பூ ஆகிய கன்றுகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 152/2, கோயில் வீதி, யாழ்ப்பாணம் (I.C.R.C.இற்கு அருகில்). (20145)

சாவகச்சேரி பழைய பொலீஸ் நிலைய வீதியில் டாக்டர் சண்முகராசாவின் ஆஸ்பத்திரியாக இயங்கிய காணியுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: S.பாஸ்கரன, 31மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில். (20218)

வீட்டுப் பாவனையிலிருந்த நல்ல நிலையில் உள்ள Sony கலர் T.Vயும், Tele Sonic CD Setஉம் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: ஜெகன், மஞ்சவனப்பதி வடக்கு வீதி, கொக்குவில் மேற்கு, கொக்குவில். (20301)

## தவறிவிட்டது

சாவகச்சேரி, பெரியரசடியைச் சேர்ந்த, சிவராமச்சந்திரன் சிவகிரிஷன், என்பவருடைய தங்கச் சங்கிலி பெரியரசடிக்கும் மீசாலைக்குமிடையில் 12.07.2003 சனிக்கிழமை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் முத்துக்குமரன் ஹாட்வெயர்ஸ், கண்டி வீதி, சாவகச்சேரி என்ற முகவரியில் ஒப்படைத்துதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (20277)

வரணி, இயற்றாலையைச் சேர்ந்த சின்னத்துரை நந்ததீபன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல.791442966V), விசேட அடையாள அட்டை, லைசென்ஸ் என்பன கொடிகாமத்துக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்காணும் முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (077-6110157) (20296)

## கோழிக்குஞ்சு விநியோகம்

நல்ல, தரமான Prima, Broiler குஞ்சுகள் ரூபா (45/-) வியாழக்கிழமை பிற்பகல் விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவுசெய்யவும். தொடர்பு: தனபாலசிங்கம் (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (20291)

## புத்தகங்கள்

கலாபூஷணம் அராலியூர் ந.சுந்தரம்பிள்ளையின் நூல்கள் 1.யாழ்ப்பாணமா? கொழும்பா? 2.இலக்கியக் கட்டுரைகள் 3.யாழ்ப்பாணம் 4.வீடற்றவன் நாவலின் விளக்கமும் விமர்சனமும். 5.ஒரு காதலின் கதை. 6.எங்கள் நாடு 7.இலக்கிய விமர்சனம். (20256)

## கட்டாக்காலி நாய்கள் அழிப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை16

திருநெல்வேலிப் பொதுச்சந்தை, ஆடியபாதம் வீதி, பலாலி வீதி, அம்மன் வீதி, பிள்ளையார் வீதி, மாரியம்மன் வீதி ஆகிய பகுதிகளில் கட்டாக்காலி நாய்கள் இன்று புதன்கிழமை காலை 8மணிமுதல் நஞ்சூட்டி அழிக்கப்படவுள்ளன.

உரிமையாளர்கள் வளர்ப்பு நாய்களைக் கட்டிவைக்குமாறும், வளர்ப்பு நாய்களுக்கு உரிமத்தகடுகளை நல்லூர், கொக்குவில் உப அலுவலகங்களில் பெற்றுக்கொள்ளுமாறும் நல்லூர் பிரதேச சபையின் செயலாளர் அறிவித்துள்ளார். (ம-8)

## விசர்நாய் இருவரைக் கடித்தது

தென்மராட்சி,ஜூலை16

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இருவர் விசர்நாயினால் கடியுண்ட சம்பவம் கடந்த வியாழக்கிழமை கச்சாய் தெற்கில் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த ஆறுமுகம் செல்லையா (வயது40), சிவதாஸ் (வயது30) ஆகிய இருவருமே விசர்நாயினால் கடியுண்ட நிலையில் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (ஐ-117)

## சிகை ஒப்பனையாளர் சங்கத்தின் கூட்டம்

யாழ்ப்பாணம்,ஜூலை16

யாழ்மாவட்ட சிகை ஒப்பனையாளர் சங்கத்தின் 50 ஆவது ஆண்டு பொதுக் கூட்டம், எதிர்வரும் 20 ஆம் திகதி காலை 10 மணிக்கு க.சிறிராஜன் தலைமையில் யாழ். ப.நோ.கூ. சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதமவிருந்தினராக யாழ். நல்லூர் கோட்ட அரசியல் துறை பொறுப்பாளர் பி.ஈஸ்வரன் கலந்துகொள்ளவுள்ளார். (ஐ-10)

# நூல் அறிமுகமும் விமர்சனமும்

யாழ்ப்பாணம்,ஜூலை16

தேசிய கலை இலக்கியப் பேரவையின் ஆதரவில் 'தாயகம்' கலை இலக்கிய சமூக விஞ்ஞான இதழின் அறிமுகமும் விமர்சனமும் எதிர்வரும் 20ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 3.30 மணிக்கு ஆரியகுளம் சந்தியில் உள்ள தமிழ் எழுத்தாளர் ஒன்றிய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கவிஞர் இ.முருகையன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் விமர்சன உரைகளை யாழ். பல்கலைக்கழக பொருளியற்றுறைத் தலைவர் வி.பி.சிவநாதன், யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறை விரிவுரையாளர் இ.குமரன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். (ம-8)

## சேவை தொடர எம் நல்வாழ்த்துக்கள்



வடலியடைப்பின் மைந்தன்

**திரு.கணபதிப்பிள்ளை கந்தசாமி**

எமது பிரதேசத்தின் வளர்ச்சிக்காகத் தன்னை முழுமையாக அர்ப்பணித்து சேவை ஆற்றி வருபவரும், எமது ஆலய பரிபாலன சபைத் தலைவரும் சிறந்த சமூக சேவையாளருமாகிய மதிப்பிற்குரிய

**திரு.கணபதிப்பிள்ளை கந்தசாமி**

அவர்கள் 09.07.2003 அன்று மல்லாகம் நீதிமன்றத்தில் சமாதான நீதிவானாகச் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டதையிட்டு அவரைப் பாராட்டி வாழ்த்துவதோடு, அவரது சேவை மேலும் தொடர எல்லாம்வல்ல ஐயப்ப பெருமானை வேண்டுகின்றோம்.

(20299)(24-15-19)

பரிபாலனசபை,
பாரத்தனை ஐயனார் ஆலயம், வடலியடைப்பு.

## தமிழ்த்தின விழா

யாழ்ப்பாணம்,ஜூலை16

வடக்கு - கிழக்கு மாகாணத் தமிழ்மொழித் தினவிழா இம்மாதம் 25ஆம், 26ஆம், 27ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது. இதற்கான சகல ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுவருவதாக வடக்கு - கிழக்கு மாகாண கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ம-8)

## விற்பனையாளர்கள் தேவை

எமது நிறுவனத்துக்கு பெண் விற்பனையாளர்கள் தேவை.
நேரில் தொடர்புகொள்க.
ஸ்கை எலக்ரோனிக்ஸ்
I.C., ஸ்ரான்லி வீதி
(வின்சர் தியேட்டர் அருகில்),
யாழ்ப்பாணம்.
(C28967) (24-15-19)




உலகப் புகழ் பெற்ற L.G
குளிர்சாதனப் பெட்டிகள்
Abans நிறுவனத்தின்
உத்தரவாதத்துடன்
இலவச விநியோக சேவையில் பெற்றிட





LG
JAFFNA ELECTRICALS
Authorised Dealer For
Abans
141, POWER HOUSE ROAD, JAFFNA
TEL: 021-222-5766
(C-28951)


யாழ்.பல்கலைக்கழக ஜிம்னாஸ்ரிக் அணி வழங்கும்


## ஜிம்னாஸ்ரிக் காட்சி

இடம்: கைலாசபதி கலையரங்கம்
காலம்: இன்று (16-07-2003) புதன் பிற்பகல் 3 மணி
பிரதம விருந்தினர்: பேராசிரியர் சு.மோகனதாஸ்
(துணை வேந்தர்)
பிரவேசம் இலவசம்
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

விளம்பர அனுசரணை:
**முத்துமாரி நகைமாடம்**
நவீன டிசைன் நகைகளை உத்தரவாதத்துடன் செய்து பெற்றிட
யாழ்.நகரில் சிறந்த நகைமாடம்
இல.78, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(20305)

# 18ஆவது பிறந்தநாள் வாழ்த்துக்கள்

16-07-2003



மீசாலை தெற்கு,
மீசாலை.

மீசாலை தெற்கு, மீசாலையைச் சேர்ந்தவர்களான
**திரு.திருமதி சரவணமுத்து - தங்கமணி**
தம்பதிகளின் தவப் புதல்வன்
செல்வன்

**சதீஸ்வரன்**
**(தீபன்)**

அவர்களின் 18ஆவது பிறந்தநாள் இன்று (16.07.2003) புதன்கிழமை.

செல்வன் சதீஸ்வரனை பாசமிகு அருமைத் தங்கை தமிழினி (தீபா), சித்தப்பா கருணேஸ்வரன், சித்தி நந்தா, சகோதரிகளான விதுசா, நிதுசா, திவ்வியா மற்றும் அம்மம்மா ஆகியோர் சுழிபுரம் பெரியபுலோ அரசடி ஸ்ரீ ஞானவைரவப் பெருமானின் அருள்பெற்று நலமுடன் நீடூழி வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

கருணேஸ்வரன் சித்தப்பா,
நந்தா சித்தி.

(20276) (24-12-19)

# மரண அறிவித்தல்

## திருமதி அரசரெத்தினம்
## ஜெயமங்கள சிரோண்மணி (ஜெயா)

வடலியடைப்பைச் சேர்ந்த திருமதி அரசரெத்தினம் ஜெயமங்கள சிரோண்மணி 14.07.2003 திங்கட்கிழமை இந்தியாவில் காலமானார்.

அன்னார் வடலியடைப்பைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான தம்பிமுத்து - இலட்சுமியின் அன்பு மகளும் வேலணை கிழக்கைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான பசுபதிப்பிள்ளை - அன்னப்பிள்ளையின் மூத்த மருமகளும் அரசரெத்தினம் (இளைப்பாறிய தபால் அதிபர்) அவர்களின் அன்பு மனைவியும் ரஜீவன் (வீரகேசரி செய்தியாளர்), காண்டீபன் (லண்டன்), செந்தூரன் (இந்தியா) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இந்தியாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*No.31, புதுவீதி,*
*கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம்.*
(24-15-19)

தகவல்:
ப.இராசரெத்தினம்
(மைத்துனன்)(20302)

# கணிதத்தில் நிபுணத்துவம் பெற்றவர்கள் தமிழர்கள் என்ற நிலை மாறிவருகிறது

## சிவாஜிலிங்கம் எம்.பி. கவலை தெரிவிப்பு

சண்டிலிப்பாய்,ஜூலை16

தமிழர்கள் கணித்தத்துறையில் நிபுணத்துவம் பெற்றவர்கள் என்று பெருமைப்பட்ட நிலை தற்பொழுது மாறிவருவது மிகவும் கவலைக்குரிய விடயம்.

- இவ்வாறு தெரிவித்தார் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம்.

சித்தன்கேணி ஸ்ரீகணேச வித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு வைபவத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வித்தியாலய அதிபர் க.சந்திரசேகரன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்:-

கடந்த காலங்களை விடவும் தற்பொழுது கல்விச் செயற்பாடுகள் அதிகரித்து வருகின்ற போதிலும் கல்வித்தரம் வீழ்ச்சியடைந்தே காணப்படுகிறது. குறிப்பாகக் கணித பாடத்தின் பெறுபேறுகள் மிகவும் வீழ்ச்சியடைந்துள்ளன. 30 மாவட்டங்களின் கணிதபாடப் பெறுபேறுகளை ஆராய்ந்தபோது யாழ். மாவட்டம் 21ஆவது இடத்தில் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

இந்தக் கல்வித்தர வீழ்ச்சிக்கு அதிபர்கள், ஆசிரியர்கள் மட்டும் பொறுப் பேற்றுக்கொள்ளமுடியாது. பெற்றோர்களும் பொறுப்பேற்கவேண்டும். கல்விச் சமூகத்துடன் இணைந்து பெற்றோர்களும் மாணவர்களின் கல்வி அபிவிருத்தியில் அக்கறை செலுத்தவேண்டும்.

யுத்தம் ஓய்ந்துள்ள தற்போதைய காலகட்டத்திலும் கூட குடாநாட்டு மாணவர்களின் கல்வித்தரம் வீழ்ச்சியடைந்து வருவது ஆரோக்கியமானதல்ல - என்றார்.

சங்கானை கல்விக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.செல்லையா உட்படப் பலரும் இந்த நிகழ்வில் உரையாற்றினார்கள்.

(ம-10-135)

# எம்.பிக்களின் பணியாளர்களுக்கு நுவரெலியாவில் பயிற்சித் திட்டம்!

நாடாளுமன்ற உறுப்பினர்களின் அலுவலகப் பணியாளர்களுக்கு பயிற்சி வழங்கும் திட்டத்தை நாடாளுமன்ற அலுவல்கள் அமைச்சர் ஏ.எச்.எம்.அஸ்வர் நேற்றுமுன்தினம் ஆரம்பித்துவைத்தார்.

நாடாளுமன்ற வரலாற்றில் முதல் தடவையாக நடைபெறும் இந்தப் பயிற்சித்திட்டம் நுவரெலியா, பதுளை மாவட்ட எம்.பிக்களின் அலுவலகப் பணியாளர்கள் மத்தியில் முதன்முதலில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

நுவரெலியா தொழில்நுட்பக் கல்லூரி கேட்போர்கூடத்தில் இந்த பயிற்சித்திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. நுவரெலியா, பதுளை மாவட்ட எம்.பிக்களான பிரதியமைச்சர் முத்து சிவலிங்கம், வீ.புத்திரசிகாமணி, எஸ்.சதாசிவம் ஆகியோரும் வைபவத்தில் கலந்துகொண்டனர்.

எம்.பிக்களின் மக்களுக்கான சேவையை விஸ்தரிக்கவும், பொதுமக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை எம்.பிக்களின் அலுவலகப் பணியாளர் மூலம் உடனுக்குடன் தீர்த்து வைக்கவும், அரசின் புதிய பயிற்சித் திட்டம் உதவும் என்றும் -

கணனி இயந்திரம், தொலைநகல் கருவி ஆகியவற்றை அமைச்சு வழங்கி வருகின்றபோதிலும் அவற்றை இயக்க பணியாளர்களுக்கு தெரியாமலிருக்கும் குறையைப் போக்குவது இந்தப் பயிற்சியின் நோக்கமாகும் என்றும் -

அமைச்சர் அஸ்வர் கூறினார். (ஒ)

### லொறியிலிருந்து பாய்ந்து ஓடிய ஊழியரைக் காணோம்!

தென்மராட்சி,ஜூலை16

திரிபோஷா ஏற்றிவரச் சென்ற யாழ. சுகாதாரத் திணைக்கள லொறியில் உதவியாளராகச் சென்ற ஊழியர் ஒருவர் திரும்பிவரும் வழியில் ஜா-எல பகுதியில் லொறியிலிருந்து பாய்ந்து ஓடிக் காணாமற்போய்விட்டதாகப் பொலீஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த 8ஆம் திகதி திரிபோஷா ஏற்றி வருவதற்காக யாழ்ப்பாணத்திலிருந்து சென்ற மூன்று லொறிகளில் ஒன்றில் உதவியாளராக சென்றிருந்தவரே இவ்வாறு காணாமற்போயுள்ளதாகக் கூறப்படுகிறது.

திரிபோஷா பைக்கற்றுக்களை ஏற்றிக்கொண்டு கடந்த வியாழக்கிழமை லொறிகள் புறப்பட்டு வந்துகொண்டிருந்தபோது ஜா-எல பகுதியல் சம்பந்தப்பட்ட ஊழியர் லொறியின் சாரதியைக் கட்டிப்பிடித்து லொறியை நிறுத்துமாறு கோரியுள்ளார். லொறி நின்றதும் லொறியிலிருந்து பாய்ந்து ஓடத்தொடங்கியுள்ளார். மூன்று லொறிகளில் வந்தவர்களும் இவரைத் துரத்திச் சென்றபோதிலும் அவர் ஓடித் தலைமறைவாகி விட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

அன்று முழுவதும் தேடி அலைந்த ஏனையோர் ஜா-எல பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துவிட்டு கடந்த வெள்ளியன்று யாழ்ப்பாணம் வந்துசேர்ந்தனர்.(ம-117)

### வடகடல் நிறுவனத்துக்கு புதிய தலைவர் நியமனம்

யாழ்ப்பாணம்,ஜூலை16

வடகடல் நிறுவனத்தின் புதிய தலைவராக இந்துசமய விவகார அமைச்சின் மேலதிக செயலாளர் கே.பரமலிங்கம் நிதி அமைச்சால் நியமிக்கப்பட்டுள்ளதாக இந்துசமய விவகார அலுவல்கள் அமைச்சின் ஊடகச் செயலாளர் தெரிவித்தார்.

வடகடல் நிறுவனம் நேற்றுமுன் தினம் முதல் உத்தியோகபூர்வமாக இந்துசமய விவகார அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-9)

### வாராந்த திரைப்படக்காட்சி

யாழ்ப்பாணம்,ஜூலை16

யாழ். பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகின் ஏற்பாட்டில் வாரந்தோறும் இடம்பெற்றுவரும் திரைப்படக் காட்சித் தொடரில் எதிர்வரும் 20ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு புவியியற்றுறை மண்டபத்தில் 'காற்றின் நடனம்' எனும் ஹிந்தித் திரைப்படம் காண்பிக்கப்படவுள்ளது.

திரைப்படம் ஆரம்பமாவதற்கு முன்னர் பண்டிட் மணிலால் நக்கின் சிதார் இசை நிகழ்வும் வீடியோக் காட்சியாக இடம்பெறவுள்ளது. (ம-10)

# வடக்கு - கிழக்கைப் பிரிப்பதற்கு திருமலையில் கையெழுத்து வேட்டை

## சிங்கள அடிப்படைவாத அமைப்பு ஆரம்பித்தது

திருகோணமலை,ஜூலை16

வடக்கு-கிழக்கில் இருந்து திருகோணமலையைப் பிரிக்குமாறு கோரி 'சிங்கள சன்வித்ஹனாயா' என்ற சிங்கள தேசிய முன்னணி அமைப்பு கையெழுத்துக்களைச் சேகரிக்க ஆரம்பித்துள்ளது. திங்களன்று இந்தத் திட்டம் செயற்படுத்த ஆரம்பிக்கப்பட்டது.



இந்தக் கையெழுத்து வேட்டையை 'சிங்கள சன்வித்ஹனாயா' அமைப்பின் தலைவர் டெகியோ விட்டிய பியதிஸ்ஸ தேரோ கையெழுத்திட்டு ஆரம்பித்துவைத்தார்.

திருமலையின் இதயப் பகுதியாக அமைந்துள்ள நகரின் மணிக்கூட்டுக் கோபுர சந்திக்கருகே அமைந்துள்ள இடத்தில் இந்தக் கையெழுத்து வேட்டை இடம்பெற்று வருகின்றது. அருகிலேயே பொதுச் சந்தையும் பஸ் நிலையமும் அமைந்துள்ளமையால் அந்த இடம் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

தமது நடவடிக்கை பற்றி விவரித்த அமைப்பின் பேச்சாளர், "1987ஆம் ஆண்டு ஏற்பட்ட இந்திய - இலங்கை ஒப்பந்தப்படி இப்போது தற்காலிக இணைப்பு இருக்கிறது. அது ரத்துச்செய்யப்படவேண்டும். அத்துடன் வடக்கு மற்றும் கிழக்கு என்னும் இரு தனித்தனி மாகாணங்கள் உருவாக்கப்படவேண்டும் - என்று கூறினார்.

இந்தக் கையெழுத்து வேட்டை விரைவில் கிழக்கின் ஏனைய மாவட்டங்களான மட்டக்களப்பு, அம்பாறை ஆகியவற்றுக்கும் விஸ்தரிக்கப்படும் என்றும் பேச்சாளர் மேலும் சொன்னார்.

திருமலையைப் பிரிப்பதற்கான இந்தக் கையெழுத்து வேட்டையில் தமிழ், முஸ்லிம், சிங்கள இனங்களைச் சேர்ந்தவர்களின் லட்சக்கணக்கான கையெழுத்துக்களைத் திரட்டுவதற்கு 'சிங்கள சன்வித்ஹனாயா' அமைப்புத் திட்டமிட்டுள்ளது.

சேகரிக்கப்படும் கையெழுத்துக்கள் அடங்கிய மகஜர்கள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் ஏனைய கட்சிகளின் தலைவர்கள் ஆகியோருக்கு அனுப்பிவைக்கப்படவுள்ளன.

(ம)

# யாழ். மாவட்டத்தில் ஐம்பது 'பிள்ளைநேயப் பாடசாலைகள்'

யாழ்.மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளில் இருந்து 50 பிள்ளைநேயப் பாடசாலைகள் தெரிவுசெய்யப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

யாழ்மாவட்டத்தில் உள்ள ஆரம்ப வகுப்பு மாணவர்களின் எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டு இது அமைக்கப்படும்.

ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் சிறுவர் நிதியத்தின் (UNICEF) அனுசரணையுடன் தீவகத்தில் தம்பாட்டி அ.த.க., மெலிஞ்சிமுனை றோ.க.வித்தியாலயம், மண்டைதீவு றோ.க., வேலணை ஐயனார், எழுவைதீவு றோ.க. என்பன முன்னோடிப் பாடசாலைகளாக தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

பாடசாலைகளில் ஒத்துழைப்பு, மனிதநேயம், நேச மனப்பான்மையுடன் கற்றல், கற்பித்தல் செயற்பாட்டை முன்னெடுக்கும் இந்தத் திட்டத்தில் விளையாட்டு முற்றம்; வாசிப்பு மூலை போன்றவை அமைக்கப்படவுள்ளன.

தீவுப்பகுதி பாடசாலை அதிபர்களுக்கான 3நாள் பயிற்சி ஏற்கனவே நடைபெற்று முடிந்துள்ளது. (ம-88)

### விளக்கமறியல் நீடிப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை16

உரும்பிராய் சந்திரோதய வித்தியாலய மாணவி மரணம் தொடர்பாக ஏற்கனவே கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள பாடசாலைக் காவலாளியான தில்லையம்பலம் ரமணன் என்பவரை எதிர்வரும் 28ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் இவ்வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. (ஒ-9)



உரும்பிராய் லயன்ஸ் கழகத்தின் 4ஆவது ஆண்டு நிறைவுவிழாவும் பணிசூட்டும் நிகழ்வும் அண்மையில் உரும்பிராய் இந்துக்கல்லூரியில் இடம்பெற்றபோது அற்பணப் பிரார்த்தனையில் ஈடுபட்டிருக்கும் லயன் பிரமுகர்களைப் படத்தில் காணலாம்.

# பொலீஸார் பாரபட்சமாக நடந்தால் பொதுமக்கள் நேரடியாக முறையிடலாம்

## பொலீஸ்மா அதிபர் தெரிவிப்பு

கொழும்பு,ஜூலை16

பொலீஸ் நிலையங்களில் பொதுமக்களால் செய்யப்படும் முறைப்பாடுகள் தொடர்பாக பொலீஸ் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கத் தவறினாலும், பாரபட்சமாக நடந்துகொண்டாலும் அது பற்றி என்னிடம் நேரடியாக முறைப்பாடு செய்யலாம். உடனடி நடவடிக்கை எடுக்கப்படும்.

இதற்கென பொலீஸ் தலைமையகதத்தில் விசேட கருமபீடம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. பொலீஸார் பொதுமக்களுக்காகவே சேவைக்கு அமர்த்தப்பட்டவர்கள் என்பதை மறந்துவிடக் கூடாது.

- இவ்வாறு பொலீஸ் மா அதிபர் கூறினார்.

நேற்றுமுன்தினம் மாலை உள்துறை அமைச்சில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். இம்மாநாட்டில் சிரேஷ்ட பிரதிப் பொலீஸ்மா அதிபர் சிறிசேன ஹேரத், பிரதிப் பொலீஸ்மா அதிபர்களான பத்மசிறி, கே.பத்திரன மற்றும் சிரேஷ்ட பொலீஸ் அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

அங்கு செய்தியாளர் ஒருவர் பொலீஸ்மா அதிபரிடம் கடந்த ஜூன் மாதம் 18ஆம் திகதி கடவத்த பொலீஸ் பிரிவுக்குட்பட்ட தர்க்காநகர் என்ற இடத்தில் ஒரு வீடு கொள்ளையிடப்பட்டுள்ளது. இவ்வீட்டில் சரோஜா என்ற தமிழ்ப்பெண்ணும் அவரது மாமனாரும் மட்டுமே வசித்து வந்துள்ளனர்.

நில்கா என்ற பெண்ணின் தலைமையில் வந்த 15பேர் கொண்ட குண்டர் கோஷ்டியினர், வீட்டுக்குள் பலாத்காரமாகப் புகுந்தனர். தம்மோடு கொண்டுவந்திருந்த லொறியில் றேடியோ, ரிவி, அலுமாரி உட்பட வீட்டுத் தளபாடப் பொருள்கள் அனைத்தையும் ஏற்றிச்சென்றுள்ளனர். இவற்றுடன் பத்துப் பவுண் தங்க நகைகள், 15 ஆயிரம் ரூபா ரொக்கப் பணம் என்பவற்றையும் அவர்கள் கொள்ளையடித்துச் சென்றனர். பயங்கர ஆயுதங்களைக் காட்டி அச்சுறுத்தியே இப்பயங்கரக் கொள்ளை இடம் பெற்றுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக மறுநாள் ஜூன் 19 ஆம் திகதி கடவத்தை பொலீஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. ஆனால், இன்றுவரை எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

பாதிக்கப்பட்டவர்கள் கட்டிய துணியுடன் நிற்கின்றனர். இவர்களுக்குப் பாதுகாப்பும் இல்லை என்று கூறினார். அப்போது பாதிக்கப்பட்டவர்களால் பொலீஸ்மா அதிபருக்கு எழுதப்பட்ட கடிதம் ஒன்றையும் பொலீஸ்மா அதிபரிடம் ஒப்படைத்தார்.

இதனைத் தொடர்ந்தே பொலீஸ் மா அதிபர் மேற்கண்டவாறு கூறினார். அதேவேளை, கடவத்தை பொலீஸ் பிரிவுக்குப் பொறுப்பான பிரதிப் பொலீஸ்மா அதிபர் பத்திரனவிடம், இவ்விடயம் தொடர்பாக நடவடிக்கை எடுக்கும்படியும், முழு அறிக்கை ஒன்றையும் சமர்ப்பிக்கும்படியும் பொலீஸ் மா அதிபர் உத்தரவிட்டார்

### பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம்,ஜூலை16

சிமெந்து பொதுத் தொழிலாளர் யூனியன் விசேட பொதுக்கூட்டம் நாளை வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளதால் சகல ஊழியர்களையும் கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு செயலாளர் கேட்டுள்ளார்.

(ம-6)

### கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,ஜூலை16

யாழ்மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் கலந்துகொள்ளும் அரசியல் கருத்தரங்கு இன்று மாலை 4.30 மணிக்கு ஆனைக்கோட்டை மூத்த விநாயகர் கோயிலடி ஞானவைரவர் ஆலய முன்றிலில் இடம்பெறவுள்ளது. (ம-10)

# வலி.கிழக்கில் இரு வீதிகள் ரூ.7 லட்சம் செலவில் புனரமைப்பு

கோப்பாய்,ஜூலை16

வலி.கிழக்கு பிரதேச சபைக்குட்பட்ட இரு வதிகள் 7 லட்சத்து 40 ஆயிரம் ரூபா செலவில் புனரமைக்கப்படவுள்ளன.

பிரமாண அடிப்படையிலான வேலைத் திட்ட நிதியின் கீழ் உரும்பிராய், விளாத்தியடி வீதி 3 லட்சத்து 70ஆயிரம் ரூபா செலவிலும் - மாகாண குறித்தொதுக்கப்பட்ட நன்கொடை நிதியின் கீழ் ஊரெழு, பொக்கணை வீதி (திலீபன் வீதி) 3 லட்சத்து 70 ஆயிரம் ரூபா செலவிலும் புனரமைக்கப்படவுள்ளன.

அத்துடன் சபை நிதியின் மூலம் வேறு சில வீதிகளும் புனரமைக்கப்படவுள்ளதாக சபையின் செயலாளர் தெரிவித்துள்ளார். (ம-10-72)

# கண்ணீர் அஞ்சலி



நாதஸ்வர கலாநிதி

**கலாசூரி N.K.பத்மநாதன் (J.P.)**

இசையின் மண்ணில் 19-09-1931 | இசை விண்ணில் 15-07-2003

ஈழமண் பெற்றெடுத்த எங்கள் கலை
இசை வேந்தரே! கானமழை ஓய்ந்ததோ?
ஞான இசை மாய்ந்ததோ?
என் ஆசிகுருவே!
என்றும் உங்கள் ஆத்மா
சாந்தியடைய
நல்லூர்க்கந்தனைப் பிரார்த்திக்கின்றோம்.

சட்டநாதர் வீதி,
நல்லூர்.

P.சுப்புச்சாமி
பாலமுருகன் (குடும்பத்தினர்).

(20325) (31-13-18)

# மரண அறிவித்தல்கள்

## ஆறுமுகம் தம்பு

**(ஓய்வு பெற்ற அரச பண்ணை முகாமையாளர், தலைவர் - கமநலச் சேவைக்குழு- வேலணை. தலைவர்- விவசாய சம்மேளனங்களின் சமாசம்- வேலணை)**

வேலணை முதலாம் வட்டாரத்தைச் சேர்ந்த ஆறுமுகம் தம்பு 14.07.2003 திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் பாக்கியத்தின் அன்புக் கணவரும் பத்மநாதன் (கனடா), கௌரி, உமா (கொழும்பு), சித்திரா (கனடா), ஸ்ரீரகுநாதன் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் நிலா (கனடா), குகதாஸ் (கொழும்பு), பத்மநாதன் (கனடா), ஜெயமதி (கனடா) ஆகியோரின் மாமனாரும் ஜனகன் (கனடா), ஜகிதா (கனடா), கஜானன் (கொழும்பு), அஜிந்தன் (கனடா), சிந்து (கனடா), விசாலினி (கனடா) ஆகியோரின் பேரனும் நடராஜா (கொழும்பு), கனகம்மா, கந்தவனம், கணேஸ் (கிராம அலுவலர்), சண்முகலிங்கம் (இ.போ.ச), தியாகேசன் (ஆஸ்திரேலியா), தேவகி (ஆஸ்திரேலியா), சபாநாதன் (கிராம அலுவலர்) ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.07.2003) வியாழக்கிழமை மு.ப. 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக சாட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம்.

*நீர்விநியோகத்திட்ட ஒழுங்கை,*
*வேலணை கிழக்கு,*
*வேலணை-01.*

தகவல்:
பாக்கியம் (மனைவி),
உமா (மகள்).

(20319) (32-13-18)

## டாக்டர் சுப்பையா ரட்ணசிங்கம்

டாக்டர் சுப்பையா ரட்ணசிங்கம் அவர்கள் நேற்று (15.07.2003) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் "சுந்தரபவனம்" கே.கே.எஸ்.வீதி, கொக்குவிலைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான மாம்பழம் சுப்பையா - நாகரெத்தினம் தம்பதிகளின் கனிஷ்ட புதல்வனும் காலஞ்சென்றவர்களான உடுவிலைச் சேர்ந்த நமசிவாயம் தம்பதிகளின் அன்பு மருமகனும் டாக்டர் சுசான் செல்வநாச்சியார் (குஞ்சு) அவர்களின் அன்புக் கணவரும் குமாரவேலு (லண்டன்), நல்லையா (கனடா), இராசமலர், இன்பமலர் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற சிவபாக்கியவதி, இந்திராணி (கனடா) காலஞ்சென்ற கிருஷ்ணபிள்ளை (விவேகானந்தா அச்சகம்), இராஜரட்ணம் (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் பூதவுடல் எதிர்வரும் 20.07.2003 ஞாயிற்றுக்கிழமை காலை பொறளை ஜெயரட்ண மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பிற்பகல் 2.00 மணியளவில் இறுதிக்கிரியைகள் நடைபெற்ற பின்னர் பொறளை கனத்தை மயானத்தில் தகனக்கிரியைகள் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*148/2, காலி வீதி, தெஹிவளை.*
*T.P: 714880.*

தகவல்:
திருமதி மஞ்சுளா இளங்கோ
(மருமகள்).

(சி-28971) (31-13-18)

## சிவகுரு பரஞ்சோதி

**(லண்டன், இளைப்பாறிய ஆசிரியர்)**

உசன், மிருசுவிலைப் பிறப்பிடமாகவும் பெரியபளை, பளையை வசிப்பிடமாகவும் கொண்ட சிவகுரு பரஞ்சோதி அவர்கள் 09.07.2003 அன்று லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவகுரு - பொன்னம்மாவின் கனிஷ்ட புத்திரனும் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை மற்றும் மீனாட்சிப்பிள்ளையின் மருமகனும் பத்மாசனியின் பாசமிகு கணவரும் பத்மரூபி, பத்மரூபன், தர்ஷாலினி, தர்ஷிகா, சிந்துஜன், விமோஜன் ஆகியோரின் அன்புத் தந்தையும் அமிர்தலிங்கத்தின் (லண்டன்) அன்புச்சகோதரனும் பத்மநாதனின் பாசமிகு சகலனும் இந்திராணியின் அன்பு மைத்துனரும் பிரதீபா, அருந்தா, சயந்தன், கிருபாம்பாள், சுபாஜினி, நந்தினி, முகுந்தன் ஆகியோரின் பாசமிகு சித்தப்பாவும் விஜயராகவன், விஜயகுமார், கலாதரன் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

***31.4/2, Arethusa Lane, Wellawatte,***
***Colombo-06. T.P: 01-361083.***

தகவல்:
குடும்பத்தினர்.

(சி-28978) (31-13-18)

## பொன்னையா சோமசுந்தரம்

**(Retired Chief Education Officer, Vavuniya Education Department, முன்னாள் அதிபர். யாழ். மகாஜனக் கல்லூரி. யாழ் நடேஸ்வராக் கல்லூரி)**

அத்தியடியைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா சோமசுந்தரம் அவர்கள் 14.07.2003 திங்கட்கிழமை கொழும்பில் காலமானார்

அன்னார் இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும் சுந்தரேஸ்வரி (கனடா), சுந்தரராஜன் (லண்டன்), சுந்தரராணி **(Srilanka Tele com, Havelock Town)**, சுந்தரகாந்தி (ஆஸ்திரேலியா), சுந்தரகுமாரி (கனடா) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் தட்சணாமூர்த்தி (கனடா), நாளினி (லண்டன்), கந்தசாமி **(SriLanka Tele com, Kollupitiya)**, நடேசன் (ஆஸ்திரேலியா), பகீரதன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் துளசி, அருண், பவன், ஷேன், அனோறா, சிந்து, மயூரி, பிரிந்தன், ஆரபி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு (20.07.2003) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு இறுதிக்கிரியைகள் நடைபெற்று, கல்கிசை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*16/1, நெல்சன் பிளேஸ், வெள்ளவத்தை.*
*தொலைபேசி: 01-504700, 0777-315425.*

தகவல்:
சுந்தரராணி (மகள்)
**(SriLanka Tele com, Havelock Town).**

(20321) (31-13-18-29)

## உலர் உணவுகளை திறந்த நிலையில் வைத்திருக்கத் தடை!

தென்மராட்சி.ஜூலை16

சாவகச்சேரி நகர்ப்பகுதி வர்த்தக நிலையங்களில் திறந்தநிலையில் சாக்கு மற்றும் உரப்பைகளில் உணவு தானியங்கள் வைத்திருப்பதற்கு சாவகச்சேரி சுகாதாரப் பகுதியினர் தடைவிதித்துள்ளனர். மூடியுள்ள பிளாஸ்ரிக் அல்லது தகர கொள்கலன்களில் உணவுப் பொருள்களை விற்பனைக்கு வைத்திருக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

வர்த்தக நிலையங்களில் திறந்த நிலையில் வைக்கப்பட்டுள்ள உலர் உணவுப் பொருள்கள் வீதியில் செல்லும் வாகனங்களால் கிளம்பும் தூசிகளால் மாசடைவதாகவும் -

அத்துடன், சாக்கு, உரப்பைகளில் வைக்கப்பட்டுள்ள உணவுப் பொருள்கள் எலிகள் மற்றும் வண்டுகளால் அசுத்தப்படுத்தப்படுவதாலும் -

ஆகவே, விற்பனைப் பொருள்களை மூடியுள்ள பிளாஸ்ரிக் அல்லது தகர கொள்கலன்களில் வைத்திருக்குமாறும் - வர்த்தக நிலையங்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ஒ-117)

## நோயாளர்கள் அதிகரிப்பு

சண்டிலிப்பாய்.ஜூலை16

வலி.வடக்கு பிரதேச சபை நடத்தி வரும் மல்லாகத்திலுள்ள இலவச சித்த ஆயுர்வேத வைத்திய சாலையில் சிகிச்சை பெறவரும் நோயாளர்கள் தொகை மிகவும் அதிகரித்துள்ளது. இடம்பெயர்ந்து இப்பகுதிகளில் வசித்து வரும் குடும்பங்கள் பலவும் இங்கு சிகிச்சை பெற்று வருவதாக வலி.வடக்கு பிரதேச சபையின் செயலாளர் பொ.வைரமுத்து தெரிவித்தார். அளவெட்டியில் இயங்கிவரும் கிளை வைத்தியசாலையிலும் நோயாளர்கள் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## சீரற்ற வீதி

சண்டிலிப்பாய்,ஜூலை16

வடலியடைப்பு, கலைவாணி வீதி நீண்ட காலமாக திருத்தப்படாது மக்கள் போக்குவரத்துக்கு உதவாத நிலையில் உள்ளது.

இதனை புனரமைப்பு செய்து தருமாறு வடலியடைப்பு கலைவாணி சனசமூக நிலையம் வலி. தென் மேற்கு பிரதேச சபையின் பண்டத்தரிப்பு பட்டின உப அலுவலக பொறுப்பதிகாரியை கடிதம் மூலம் கேட்டுள்ளது. (ஒ-135)

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்.ஜூலை16

அல்லைப்பிட்டி புனித உத்தரிய அன்னை ஆலயத் திருவிழா இன்று புதன்கிழமை காலை 7 மணிக்கு நடைபெறவுள்ளது.

நேற்று மாலை 5 மணிக்கு திருப்பலியும், நற்கருணை வழிபாடும் இடம்பெற்றன. (ஐ-10)

★ ★ ★

வடமராட்சி,ஜூலை16

மந்திகை கண்ணகி அம்மன் கோவில் வருடாந்த அலங்கார உற்சவம் நாளை 17ஆம் திகதி ஆரம்பமாகி தொடர்ந்து 16 தினங்கள் நடைபெறும்.

எதிர்வரும் ஓகஸ்ட் முதலாம் திகதி ஆடிப்பூர தினத்தன்று தீர்த்தோற்சவம் இடம்பெறும். (ஐ)

★ ★ ★

சண்டிலிப்பாய்,ஜூலை16

சில்லாலை தெற்கு புனித யாகப்பர் ஆலய வருடாந்த உற்சவம் இன்று புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. எதிர்வரும் 24ஆம் திகதி பிற்பகல் நற்கருணை உற்சவமும், 25ஆம் திகதியன்று காலை 7மணிக்கு திருப்பலி பூசையும் அதனைத் தொடர்ந்து திருசொரூப பவனியும் இடம்பெறும். பூசைகளை சில்லாலை பங்குத் தந்தை அருட்திரு. அ.ப.அன்ரனிப்பிள்ளை நிறைவேற்றுவார். (ஒ-135


## வேலை வாய்ப்பு

லேத் மெஷின் ஒப்பரேட்டிங், வெல்டிங், கேற் - கிறில் வேலைகள் பழக விரும்புவோர் உடன் வரவும்.

*தொடர்பு :*
*லிங்கோ நுண்பட்டறை,*
*சட்டநாதர் வீதி,*
*நல்லூர்.*

(20317) (31-13-18)




## காரைநகர். மடத்துக்கரை முத்துமாரி அம்பாள் அடியார்களுக்கு முக்கிய அறிவித்தல்

காரைநகர், மடத்துக்கரை முத்துமாரி அம்பாள் ஆலய பரிபாலன சபை இந்து கலாசார அமைச்சில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்பதையும் -

வங்கிக் கணக்கு ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்பதையும் - அம்பிகை அடியார்களுக்கு அறியத்தருகின்றோம். ஆலயத்துக்கு பணம், பொருள் உதவ விரும்புவோர் ஆலய பரிபாலன சபையினருடன் தொடர்புகொள்ளுமாறும் கேட்டுக்கொள்கின்றோம்.

முத்துமாரி அம்பாள் ஆலயம்,
மடத்துக்கரை- காரைநகர்.

(20314) (31-13-18)

- ஆலய பரிபாலன சபையினர்.


## தேவை STORE KEEPER

மின்சாரப் பொருள்களில் அனுபவம் உள்ள களஞ்சியப் பொறுப்பாளர் (Store Keeper) உடன் தேவை.
கிழமை நாள்களில் நேரில் வரவும்.

**JAFFNA ELECTRICALS**
141, Power House Road, Jaffna.

(சி-28970) (31-13-18)

## புரோயிலர் இறைச்சிக் கோழி விற்பனைக்குண்டு

அச்சுவேலி பிராந்திய கோழிப்பண்ணையில் இறைச்சிக் கோழி (கல்பேட்ஸ்) விற்பனைக்குண்டு. இவற்றை தொகையாகக் கொள்வனவு செய்வோர்க்கு விசேட விலைக்கழிவு வழங்கப்படும். விரும்புவோர் 19.07.2003, 20.07.2003 ஆகிய திகதிகளில் மேற்படி பண்ணைக்கு நேரில் சமுகம்தரவும்.

(C/28972) (29-13-18-31)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/நயினாதீவு ஸ்ரீ கணேச கனிஷ்ட மகா வித்தியாலயத்தில் இன்று (16.07.2003) புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் நடைபெறும் வருடாந்த பரிசளிப்பு விழாவுக்கு அமரராகிவிட்ட

**திருமதி சின்னத்துரை சின்னம்மா**

அவர்களின் ஞாபகார்த்தமாக நிதியுதவி வழங்கியும் வருடந்தோறும் தொடர்ந்தும் உதவி வழங்கவிருக்கும் நயினாதீவு, 8ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த **திரு.சின்னத்துரை தியாகராசா** அவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

- அதிபர், ஆசிரியர், மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
பழைய மாணவர் சங்கம்,
யா/நயினாதீவு ஸ்ரீ கணேச கனிஷ்ட மகாவித்தியாலயம்.
நயினாதீவு.

(20318) (31-13-18)

# மரண அறிவித்தல்கள்

## முருகேசு (மாம்பழம்) செல்லத்துரை

சுன்னாகம், செட்டியார் வளவைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு (மாம்பழம்) செல்லத்துரை 12.07.2003 சனிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (16.07.2003) புதன்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*செட்டியார் வளவு,*
*சுன்னாகம்.*

தகவல்:
திருமதி செ.சற்குணம்
(மனைவி).

(20323) (32-13-18)

## திருமதி மரகதேஸ்வரி கணபதிப்பிள்ளை

சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் காரைநகரைப் புகுந்த இடமாகவும் இருபாலை கற்பகப் பிள்ளையார் கோயிலடியைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மரகதேஸ்வரி கணபதிப்பிள்ளை அவர்கள் நேற்று (15.07.2003) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை (வைத்திய அதிகாரி) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற குமாரசாமி- இராசம்மா ஆகியோரின் அருமை மகளும் காலஞ்சென்ற நமசிவாயம் - சுந்தரம்மா ஆகியோரின் அன்பு மருமகளும் க.உபேந்திரன் (கிராம உத்தியோகத்தர், சரசாலை), க.பிரபாகரன் (கனடா) ஆகியோரின் அருமைத் தாயாரும் பதுமாசனி (ஆசிரியை, கைதடி முத்துக்குமாரசாமி மகா வித்தியாலயம்) அவர்களின் அன்பு மாமியாரும் கேதுஷனின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (16.07.2003) புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக இருபாலை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தற்காலிக முகவரி:
*கற்பகப் பிள்ளையார் கோயிலடி,*
*பருத்தித்துறை வீதி,*
*இருபாலை.*

நிரந்தர முகவரி:
*சிவன் கோயிலடி, சாவகச்சேரி.*

தகவல்:
க.உபேந்திரன் (மகன்)
(கிராம உத்தியோகத்தர்)

(20326) (32-13-18-31)

## திருமதி வெற்றிவேலு மகாலட்சுமி

குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகவும் நெட்டிலிப்பாய்ப் பிள்ளையார் கோயிலடி, கோண்டாவிலை வதிவிடமாகவும் கொண்ட திருமதி வெற்றிவேலு மகாலட்சுமி அவர்கள் நேற்று (15.07.2003) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

*நெட்டிலிப்பாய்*
*பிள்ளையார் கோயிலடி,*
*கோண்டாவில்.*
***T.P.077 - 6032173***

தகவல்:
வெ.தேவசீலன் -(மகன்)
மா.கணேசலிங்கம்-(மருமகன்)

(20324) (32-13-18-31)

# தேசிய மெய்வன்மைப் போட்டிகளில் மாபெரும் பணப்பரிசுக் குவியல்!

கொழும்பு,ஜுலை16

இலங்கையின் 81ஆவது தேசிய மெய்வன்மைப் போட்டிகளில் வெற்றியீட்டுவோருக்குப் பெருந்தொகைப் பணப்பரிசுகளை வழங்குவதற்கு இலங்கை மெய்வன்மைச் சங்கம் தீர்மானித்துள்ளது.

ஜுலை 25முதல் 27ஆம் திகதி வரை கொழும்பு சுகததாஸ விளையாட்டரங்கில் இப்போட்டிகள் நடைபெறவுள்ளன.

இது தொடர்பான செய்தியாளர் மாநாட்டில் இலங்கை மெய்வன்மைச் சங்கத்தின் தலைவர் சுனில் ஜயவீர கூறியதாவது:-

இம்முறை மிகச் சிறப்பாக இப்போட்டிகளை நடத்தவுள்ளோம். டயமண்ட் சிமெந்து நிறுவனம் இதற்கு அனுசரணை வழங்குகிறது. இப்போட்டிகளில் வெளிநாடுகளைச் சேர்ந்த மெய்வல்லுநர்களும் பங்குபற்றவுள்ளனர்.

தாய்லாந்து, மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளைச் சேர்ந்த 27 பேர் இப்போட்டிகளில் பங்குபற்றுவதை உறுதிசெய்துள்ளனர். பிலிப்பைன்ஸ் போட்டியாளர்கள் சிலரும் பங்குபற்றுவர் என எதிர்பார்க்கிறோம்.

இலங்கை மெய்வன்மை வரலாற்றில் முதற்றடவையாக பணப் பரிசுகளை வழங்குவதற்கும் நாம் தீர்மானித்துள்ளோம்.

இதன்படி ஏதாவதொரு போட்டியில் முதலிடம் பெறுபவருக்கு 5,000 ரூபா வழங்கப்படவுள்ளது. இரண்டாமிடம் பெறுபவருக்கு 3,000 ரூபாவும், மூன்றாமிடம் பெறுபவருக்கு 2,000 ரூபாவும் வழங்கப்படும்.

அதேவேளை, எதிர்காலத்தில் இலங்கை மெய்வல்லுநர்களுக்கு அனுசரணை வழங்கவும் மெய்வன்மைச் சங்கம் தீர்மானித்துள்ளது.

இலங்கையர் எவரேனும் ஆசிய சாதனையொன்றை முறியடித்தால் அவருக்கு 50,000 ரூபாவும் அவரின் பயிற்றுநருக்கு 20,000 ரூபாவும் மெய்வன்மைச் சங்கத்தால் வழங்கப்படும். அதேவேளை டயமண்ட் சிமெந்து நிறுவனமும் ஆசிய சாதனை புரிவோருக்கு தலா 50,000 ரூபா வழங்கவுள்ளது. இதனால், புதிய ஆசிய சாதனையாளர்கள் தலா ஒரு லட்சம் ரூபாவைப் பெறுவர்.

இதேபோன்று புதிய தேசிய சாதனைகளைப் புரிவோருக்கு 25,000 ரூபாவும் அவர்களின் பயிற்றுநருக்கு 10,000 ரூபாவும் வழங்கப்படும்.

இவை தவிர ஆசிய மட்டத்தில் முதல் 20 இடங்களுக்குள்ளான பெறுபேற்றைப் பெறுவோர் அனுசரணையாளர்களைக் கொண்டிருக்காவிட்டால் அவர்களுக்கு மாதாந்தம் 10,000 ரூபா வீதம் ஒரு வருடகாலத்திற்கு நிதியுதவி வழங்கப்படும்.

முதல்தர தேசிய பயிற்சிக் குழாமில் சேர்க்கப்படுவோர் அனுசரணையாளர்களைக் கொண்டிருக்காவிட்டால் மாதாந்தம் தலா 10,000 ரூபாவையும் 2ஆம் குழாமிற்குச் சேர்க்கப்படுவோருக்கு மாதாந்தம் 5,000 ரூபாவையும் பெறுவர்.

அதேவேளை, இடைநிலை குழாமில் சேர்க்கப்படுவோருக்கு மாதாந்தம் 3,000 ரூபாவும் கனிஷ்ட குழாமில் சேர்க்கப்படுவோருக்கு மாதாந்தம் 2,000 ஆயிரம் ரூபாவும் வழங்கப்படும்.

அத்துடன் 'கிறீடா திரிய' எனும் மாவட்ட அபிவிருத்தித் திட்டத்தில் சேர்க்கப்படும் மெய்வல்லுநர்களுக்கு மாதாந்தம் 500 ரூபா வழங்கப்படவுள்ளது.

இதன்படி ஒகஸ்ட் முதலாம் திகதியிலிருந்து இந்த வெகுமதிகளுக்காக மாதாந்தம் 12 லட்சம் ரூபாவை இலங்கை மெய்வன்மைச் சங்கம் செலவிடவுள்ளது.

இதுதொடர்பான தீர்மானங்களை இலங்கை மெய்வன்மைச் சங்கம் ஏகமனதாக மேற்கொண்டுள்ளது.

2005ஆம் ஆண்டளவில் இத்திட்டத்திற்கான பலன்களைப் பெற்றுக்கொள்ளலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. 2005ஆம் ஆண்டு தெற்காசிய போட்டிகள், 2006ஆம் ஆண்டு ஆசிய விளையாட்டு விழா, 2008ஆம் ஆண்டு பீஜிங் ஒலிம்பிக் போட்டிகள் ஆகியவற்றை இலக்காகக் கொண்டு இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது என்றார்.

இப்போட்டிகளுக்கு அனுசரணை வழங்குகின்ற லங்கா சிமெந்து நிறுவனத்தின் தலைவர் அனில் கொஸ்வத்த உரையாற்றுகையில்,

மெய்வன்மைத்துறைக்கு அனுசரணை வழங்க சில நிறுவனங்கள் தயக்கம்காட்டுகின்றன. ஆனால், இலங்கையில் மெய்வன்மைத் துறையை எதிர்காலத்தில் சிறப்பாக மிளிரச் செய்யமுடியும் என்ற நம்பிக்கை எம்மிடமுள்ளது.

ஓர் அரச நிறுவனம் என்ற வகையில் நாட்டின் மெய்வன்மைத் துறை அபிவிருத்திக்குப் பங்காற்றுவதில் நாம் மகிழ்ச்சியடைகிறோம்.

தேசிய மெய்வன்மைப் போட்டிகளைப் பார்வையிட வருவோருக்கு இலவச அனுமதிச் சீட்டுகள் வழங்கப்படவுள்ளன. இந்த அனுமதிச்சீட்டுகளிலுள்ள இலக்கங்களைக் குலுக்குவதன் மூலம் பார்வையாளர்களுக்குப் பெறுமதிவாய்ந்த பரிசுகளை வழங்குவதற்கும் நாம் தீர்மானித்துள்ளோம். கடந்த காலங்களிலும் அவ்வாறே இத்துறைக்கு எமது நிறுவனம் பங்களிப்பு வழங்கியுள்ளது - என்றார். (ம-5)

## கோலூன்றிப் பாய்தலில் புதிய உலக சாதனை

பெண்கள் கோலூன்றிப் பாய்தல் போட்டியில் ரஷ்யாவின் யெலீனா இஸின்பயேவா புதிய உலக சாதனையொன்றைப் படைத்துள்ளார்.

இங்கிலாந்தின் கேட்ஸ்ஹெட் நகரில் நடைபெறும 'சுப்பர் கிராண்ட் ப்றீ' போட்டிகளில் ஞாயிறன்று 4.82 மீற்றர் உயரம் பாய்ந்தார் யெலீனா.

2001ஆம் ஆண்டு ஜுன் மாதம் கலிபோர்னியாவில் நடைபெற்ற போட்டியொன்றில் அமெரிக்க வீராங்கனை ஸ்டேஸிட் ரெஜிலா 4.81 மீற்றர் பாய்ந்தமையே முந்தைய சாதனையாக இருந்தது.

21வயதான இஸின்பயேவா சுமார் 50 லட்சம் ரூபா பணப்பரிசையும் பெற்றுக்கொண்டார்.

சாதனை படைத்த பின்னர் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

"இது எதிர்பாராததொன்றல்ல. பயிற்சிகளின்போது சிறப்பாக நான் பாய்ந்திருக்கின்றேன். 4.80 மீற்றருக்கு அதிகமான உயரத்தை நான் பயிற்சிகளின்போது பல தடவை பாய்ந்திருக்கின்றேன். இத்தகைய ஒரு தருணத்திற்காக நான் காத்திருந்தேன்" என்றார்.

இப்போட்டியில் 4.30 மீற்றர் உயரத்தில் இருந்து ஆரம்பித்த அவர் 4.44, 4.54, 4.64, 4.74 ஆகிய உயரங்களை கடந்து சாதனை உயரத்தை எட்டினார். முதலாவது, மூன்றாவது உயரங்களைத் தவிர ஏனையவற்றில் இரண்டாவது தடவையே வெற்றிகரமாகப் பாய்ந்தார்.

உலக உள்ளக சாம்பியன்ஷிப் போட்டிகளில் இரண்டாவது இடம்பெற்றவர் இஸின்பயேவா. கடந்த மார்ச் மாதம் நடைபெற்ற உள்ளகப் போட்டியில் 4.80 மீற்றர் பாய்ந்து உள்ளக சாதனையைப் புரிந்த ரஷ்யாவின் ஸ்வெட்லானா ஃபொபனோவா, ஞாயிறன்று 4.54 மீற்றர் பாய்ந்து இரண்டாவது இடம்பெற்றார்.



வடக்கு - கிழக்கு மாகாண தடகளப் போட்டியில் உயரம் பாய்தலில் புதிய சாதனை நிலைநாட்டிய எஸ். கமலமோகன்.

## தாச்சிப் போட்டி

வர்த்தக வங்கி, இலங்கை வங்கி ஆகியவற்றின் அனுசரணையுடன் யாழ் மாவட்ட தாச்சிச் சங்கம் நடத்தும் தாச்சிச் சுற்றுப்போட்டியில் இன்று புதன்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு மானிப்பாய் கட்டுடை விநாயகர் விளையாட்டுக் கழக மைதானத்தில் சுதுமலை நாவலர் விளையாட்டுக் கழகமும் பண்டத்தரிப்பு சாந்தை விளையாட்டுக்கழகமும் விளையாடவுள்ளன. (ம-86)

## ஜிம்னாஸ்ரிக் காட்சி

யாழ்.பல்கலைக்கழக ஜிம்னாஸ்ரிக் அணி மாணவர்களால் நடத்தப்படும் ஜிம்னாஸ்ரிக் காட்சி இன்று பிற்பகல் 3மணியளவில் யாழ்.பல்கலைக் கழக கைலாசபதி அரங்கில் நடைபெறவுள்ளது.

பல்கலைக்கழக துணைவேந்தர் சு.மோகனதாஸ் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ள இருக்கின்றார். (ம)

### மேஜர் முரளி ஞாபகார்த்தமாக நடத்தப்பட்ட

## கிளிநொச்சி உதைபந்தாட்டப் போட்டி சுவிஸ், திருமலை அணிகள் வெற்றி

### 15, 17 வயதுப் பிரிவுகளில்

வலி.வடக்கு,ஜுலை16

கிளிநொச்சியில் இடம்பெற்றுவரும் மேஜர் முரளி ஞாபகார்த்த உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் 15 வயதுப் பிரிவில் சுவிஸ் நாட்டு தமிழர் அணியும் 17 வயதுப் பிரிவில் திருமலை மாவட்ட அணியும் சம்பியனாகியுள்ளன.

கிளிநொச்சி நகரப் பொது மைதானத்தில் நேற்றுமுன்தினம் இந்த இறுதி ஆட்டங்கள் இடம்பெற்றன.

**விளையாட்டு**

17 வயதுப் பிரிவில் சுவிஸ் நாட்டு தமிழர் அணியை எதிர்த்து திருமலை மாவட்ட அணி மோதியது. விறுவிறுப்பாக நடந்த இந்த ஆட்டத்தில் திருமலை அணி கோல்டன் கோல் முறை மூலம் வெற்றிபெற்றது.

முதல் பாதி ஆட்டத்தில் சுவிஸ் தமிழர் அணி இரு கோல்களையும் திருமலை அணி ஒரு கோலையும் பெற்றுக்கொண்டன.

இரண்டாம் பாதி ஆட்டத்தில் திருமலை அணி மேலும் ஒரு கோலைப் பெற்று ஆட்டத்தை சமப்படுத்தியது.

இதனால், மேலதிக நேரம் வழங்கப்பட்டது. அதிலும் இரு அணிகளும் கோல் எதனையும் பெறவில்லை. எனவே இரண்டாவது மேலதிக நேரம் வழங்கப்பட்டது. இதில் திருமலை அணி ஒரு கோலை அடித்து ஆட்டத்தை வென்றது.

15 வயதுப் பிரிவில் யாழ்.மாவட்ட அணியும் சுவிஸ் தமிழர் அணியும் இறுதி ஆட்டத்தில் மோதின.

முதல் பாதி ஆட்டத்தில் சுவிஸ் அணி 3 கோல்களைப் பெற்றது. பின்பாதி ஆட்டத்தில் மேலும் 4 கோல்களைப் போட்டு 7:0 என்ற கோல் கணக்கில் யாழ்ப்பாண அணியை வென்றது.

யாழ்.மாவட்ட அணி சார்பில் புனித ஹென்றியரசர் கல்லூரி அணியே இந்தப் பிரிவில் பங்குகொண்டது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ம-86)

### தேசிய விளையாட்டு விழாவில் கலந்துகொள்ளும்

## வடக்கு - கிழக்கு வீரர்களுக்கு விசேட பயிற்சி வழங்க திட்டம்

யாழ்ப்பாணம்,ஜுலை16

யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ள தேசிய விளையாட்டு விழாவில் கலந்துகொள்ளவுள்ள வடக்கு - கிழக்கு மாகாண வீர வீராங்கனைகளுக்கு விசேட பயிற்சிகள் வழங்கப்பட இருக்கின்றன.

இதற்கென விளையாட்டு உபகரணங்கள் மற்றும் ஏனைய வசதிகளை விளையாட்டு அமைச்சு வழங்கவிருக்கின்றது என்று அமைச்சின் பணிப்பாளர் நாயகம் மிலற்றன் அமரசிங்க தெரிவித்தார்.

கடந்த கால யுத்தங்களினால் ஏனைய துறைகளைப் போன்று வடக்கு - கிழக்கின் விளையாட்டுத் துறையும் மோசமாகப் பாதிப்படைந்திருக்கின்றது. எனவே, அந்தப் பாதிப்புக்களுக்கு மத்தியிலும் தேசிய விளையாட்டு விழாவில் இம்முறை வடக்கு - கிழக்கு வீரர்கள் அதிக பதக்கங்களைப் பெற்றுக்கொள்ளவேண்டும் என்பதே எமது நோக்கம்.

அதனாலேயே வடக்கு - கிழக்கு மாகாண அணிகளின் வீரர்களுக்கு மட்டும் இந்த விசேட பயிற்சிக்கான உதவிகளை வழங்க தாம் முன்வந்ததாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதற்கான கூட்டுப் பயிற்சிகள் விரைவில் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது. (ம-4)

## முன்பள்ளி விளையாட்டு

ஊர்காவற்றுறை பிரதேச சபையினால் உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு பிரதேச சபை மட்டத்தில் நடத்தப்படும் முன்பள்ளி நிலையங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகள் இன்று புதன்கிழமை காலை 9மணிக்கு ஊர்காவற்றுறை பொது நூலகத்திற்கு முன்பாக உள்ள மைதானத்தில் நடைபெறவுள்ளன.

ஊர்காவற்றுறை பிரதேச சபையின் செயலாளர் கு.கணேசலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்விற்கு ஊர்காவற்றுறை மக்கள் வங்கி முகாமையாளர் கோ.சற்குணபாலன், ஊர்காவற்றுறை இலங்கை வங்கி முகாமையாளர் இ.விஜயரட்ணம் ஆகியோர் பிரதம விருந்தினர்களாகவும் தீவக கல்வி வலய முன்பள்ளிகளுக்கான உதவிக் கல்விப் பணிப்பாளர் மு.தவராசா சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்ளவுள்ளனர்.

இப்போட்டிகளில் பங்குபற்றும் பொருட்டு காரைநகர், ஊர்காவற்றுறை, அனலைதீவு ஆகிய பிரதேசங்களில் நடைபெற்று முடிந்த முன்பள்ளி நிலையங்களுக்கு இடையிலான போட்டிகளில் முதலாம் இடத்தைப் பெற்ற மாணவர்கள் அழைக்கப்பட்டுள்ளனர். (ம-16)

## பங்களாதேஷ் கிரிக்கெட் அணிக்கு டெஸ்ட் போட்டியில் பாடம் கற்பிப்போம்!

### கில்கிறிஸ்ட், பிரெட்லீ தெரிவிப்பு

"பங்களாதேஷ் அணிக்குப் பாடம் கற்பிப்போம்" என ஆஸ்திரேலிய கிரிக்கெட் வீரர்களான அடம் கில்கிறிஸ்ட், பிரெட்லீ ஆகியோர் கூறியுள்ளனர்.

ஆஸ்திரேலிய - பங்களாதேஷ் அணிகளுக்கிடையிலான 2 போட்டிகள் கொண்ட தொடர் நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

2000ஆம் ஆண்டு டெஸ்ட் அந்தஸ்து பெற்ற பங்களாதேஷ் அணி இதுவரை ஒரு டெஸ்ட் போட்டியிலும் வெற்றி பெறவில்லை. ஆஸ்திரேலியா, தரவரிசையில் உலகில் முதல்நிலை அணியாக விளங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் பங்களாதேஷுடனான போட்டி குறித்து அடம் கில்கிறிஸ்ட் கருத்துத் தெரிவிக்கையில்,

"இப்போட்டியில் வெற்றிபெறுவோம் என நம்புகிறேன். அதேவேளை, உலகில் முன்னணி அணிகளில் ஒன்றாக இருப்பதற்கான தரநிலை குறித்து பங்களாதேஷுக்கு கற்பிக்கலாம்" என்றார். பங்களாதேஷ் அணியுடன் மோதுவதற்கான உந்துசக்தி இல்லாதிருப்பதே ஆஸ்திரேலிய அணி எதிர்நோக்கும் முக்கிய பிரச்சினை எனவும் அவர் கூறினார்.

டார்வின் நகரில் நடைபெறவுள்ள முதலாவது டெஸ்ட் போட்டியில் பங்களாதேஷ் வெல்லும் என பந்தயம் கட்டுபவர்களுக்கு 1:40 விகிதத்தில் பணம் வழங்க ஆஸ்திரேலிய சூதாட்ட முகவர் ஒருவர் முன்வந்துள்ளார்.

இப்போட்டி வெற்றி தோல்வி இன்றி முடிந்தால் 1:8 விகிதத்தில் பணம் வழங்கவுள்ளார். (ம)

## விளையாட்டு விழா

கொழும்புத்துறை,ஜுலை16

உள்ளூராட்சி வாரத்தையொட்டி யாழ். மாநகரசபை எல்லைக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட சனசமூக நிலையங்களுக்கு இடையிலான விளையாட்டு விழா இன்றுமுதல் 26 ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது.

சனசமூக நிலையங்களின் சமாசத்தினால் நடத்தப்படும் இப்போட்டிகளில் 7 பேர் கொண்ட மென்பந்தாட்டம், 6 பேர் கொண்ட கரப்பந்தாட்டம், 5 மைல் மரதன் ஓட்டம். 10மைல் சைக்கிள் ஓட்டம் என்பன இடம்பெற உள்ளன. (ம-30)

## இன்றைய ஆட்டங்கள்

வலி.வடக்கு, ஜுலை16

உள்ளூராட்சி வாரத்தினையொட்டி வலி.மேற்கு பிரதேச சபையும் சனசமூக நிலையங்களின் சமாசமும் இணைந்து நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று புதன்கிழமை பிற்பகல் 4.15 மணிக்கு, வட்டுக் கோட்டையில் உள்ள பிரதேச சபை விளையாட்டரங்கில் இடம்பெறவுள்ள போட்டிகளில் கலந்துகொள்ளவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-

★ பல்லசுட்டி சாந்திஜி வி.கழகம் எதிர் அராலி ஸ்ரீ முருகன் வி.கழகம்.

★ அராலி நாகேந்திரமடம் வி.கழகம் எதிர் அராலி மேற்கு களவாத்துறை வி.கழகம். (ம-86)

# கண்ணீர் அஞ்சலி

..து கல்லூரி ஆசிரியை திருமதி சிலோனி தருமராசா
அவர்களின் அன்புத் தந்தையார்

## வல்லிபுரம் செல்லத்துரை

அவர்கள் 11.07.2003 இல் காலமானதையிட்டு மிகவும் துயருறுகின்றோம். அன்னாரின் பிரிவால் வருந்தும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு, அவரின் ஆத்மாசாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யா/இராமநாதன்கல்லூரி. சுன்னாகம். அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், கல்விசாரா ஊழியர்கள்.
(20306) (26-24-14-19)



# ரஷ்யாவில் மருத்துவம்

ரஷ்யாவின் சென்பீட்டர்ஸ்பேர்க (St.Peters Burg) எனும அழகிய நகரில் Medicine (M.D.) கற்க அரியவாய்ப்பு. இப் பல்கலைக்கழகம் Sri Lankan Medical Council, W.H.O., British Medical Council, American Medical Council என்பவற்றால் அங்கீகரிக்கப்பட்டது என்பதையும் அறியத்தருகின்றோம். சகல வசதிகளுடன் கூடிய இப் பல்கலைக்கழகத்தில் அங்கு சென்ற பின்னர் நீங்களே கட்டணங்களைச் செலுத்தும் வசதிகள்.

*மேலதிக விவரங்களுக்கு:*

## ராஜா களஞ்சியம்

உப்புமடச் சந்தி, கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்.
(20212) T.P.: 077 - 6116777, 077-7872998 (21-21-14-19)


# 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்
11
-
05
-
1950



மறைவு
15
-
06
-
2003

## திருமதி மேரி புஸ்பராணி வஸ்தியாம்பிள்ளை

(மரியதாஸ்)

அன்போடு எமை அரவணைத்த
பாச தீபமே! எம் தாயே!
மாதம் ஒன்றானாலும்
மனதினில் நீங்காமல் மலர்ந்துள்ளாய்!
நின் ஆன்மா அமைதிபெற
நிமலனை இறைஞ்சுகிறோம்.

இளவாலை புனித அன்னாள் ஆலயத்தில் இன்று (16-07-2003) புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் ஒப்புக்கொடுக்கப்படும் ஆன்ம இளைப்பாற்றித் திருப்பலியில் கலந்துகொண்டு பிரார்த்திப்பதுடன், அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*நிறோ வெதுப்பகம்,*
*கல்லூரி வீதி, இளவாலை.* (20307) (19-24-14) - குடும்பத்தினர்.

# 31ஆம் நாள் நினைவு அஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மண் மகிழ
18
-
11
-
1922



கண்நெகிழ
18
-
06
-
2003

## திருமதி இராசையா கனகம்மா

18-06-2003 புதன்கிழமை சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தெய்வம் திருமதி இராசையா கனகம்மா அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (16-07-2003) புதன்கிழமை காலை 8.00 மணிக்கு கீரிமலை தீர்த்தக் கரையிலும் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் 18.07.2003 வெள்ளிக்கிழமை எமது இல்லத்திலும் மதியம் 1.00 மணிக்கு நடைபெறும்.

இந்நிகழ்வுகளில் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் கலந்துகொண்டு அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு, மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இராசா வீதி, - குடும்பத்தினர்.
தோப்பு, அச்சுவேலி. (20304)(21-19-12-15)

## பாடசாலை சொந்த இடத்தில்

கொழும்புத்துறை,ஜூலை16

கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயம் நேற்றுமுன்தினம் முதல் மீண்டும் சொந்த இடத்தில் இயங்க ஆரம்பித்துள்ளது.

2000 ஆம் ஆண்டு இப்பகுதியில் இடம்பெற்ற யுத்தத்தினால் இப்பாடசாலை பெரிதும் சேதமடைந்திருந்தது.

பின்னர் கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயத்திலும் தனியார் வீடொன்றிலும் இதுவரை இப்பாடசாலை நடைபெற்றுவந்தது.

தற்போது இப்பாடசாலைக் கட்டடத்தின் ஒரு பகுதி புனரமைக்கப்பட்டு உள்ளதாகவும் - புதிய தளபாடங்கள் யாழ்.செயலகத்தால் வழங்கப்பட்டுள்ளதாகவும் - அதிபர் எஸ்.மகேந்திரன தெரிவித்துள்ளார்.

(ம-30)

## தமிழ்வாலிபர்கள் பிரான்ஸ் கடலில் மூழ்கி உயிரிழப்பு!

கொழும்புத்துறை,ஜூலை16

இலங்கைத்தமிழ் இளைஞர்கள் நால்வர் பிரான்ஸில் நேற்றுமுன்தினம கடலில் குளிக்கச் சென்றவேளை கடலுக்குள் மூழ்கி பரிதாபமாக உயிரிழந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த நான்கு இளைஞர்களில் ஒருவர் கோப்பாய் தெற்கைச் சேர்ந்தவர் என்று தெரியவந்துள்ளது.

இவர்கள் குளிக்கச்சென்ற கடற்பகுதிக்கு பொலீஸாரிடம் அனுமதி பெற்றே செல்ல வேண்டும் என்பது அந்நாட்டு நடைமுறை.அதற்கிணங்க இவர்களும் அனுமதிபெற்றே குளிக்கச் சென்றிருந்தனர்.

கோப்பாயைச் சேர்ந்த இளைஞர் இன்னும் சில வாரங்களில் யாழ்ப்பாணம் வர இருந்தவர் என்றும் -

ஏனையோரின் பெயர் விவரங்கள தெரியவில்லை எனவும் -

சடலங்கள் கடலிலிருந்து மீட்கப்பட்டுள்ளதாகவும் - கூறப்படுகின்றது.

(ஒ-30)

## பூரான் கடித்து இளம் பெண் மரணம்

யாழ்ப்பாணம்,ஜூலை16

பூரான் கடிக்கு இலக்கான இளம் பெண் ஒருவர் சிகிச்சை பலனளிக்காது உயிரிழந்தார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை வளலாயில் இடம பெற்ற இச்சம்பவத்தில் அவ்விடத்தைச் சேர்ந்த செ. யோகேஸ்வரி (வயது 31) என்ற இளம்பெண்ணே மரணமானவராவார்.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு பூரான் தீண்டியதை அடுத்து அச்சுவேலி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட இவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டார்.

அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சைக்குட்படுத்திய நிலையில் இருநாளகளின் பின் அங்கு மரணமானார். மரண விசாரணையின் பின் சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது.

(ம-15)

## சாவகச்சேரி இந்து காவலாளிகளுக்கு நேற்றுப் பிணை

தென்மராட்சி,ஜூலை16

சாவகச்சேரி இந்துக்கல்லூரியின் இரண்டு கணனி இயந்திரங்கள்திருட்டுப் போனது தொடர்பாக விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்த மூன்று காவலாளிகளையும் பிணையில் விடுவிக்க நேற்று நீதிவான் உத்தரவிட்டார்.

ஒவ்வொருவரும் தலா 25 ஆயிரம ரூபா ரொக்கப்பிணையிலும் கிராம அலுவலரால் உறுதிப்படுத்தப்பட்ட 50 ஆயிரம் ரூபா பெறுமதியான ஆள் பிணையிலும் செல்ல அனுமதித்தார்.

(ம-17)

## யாழ். ஆஸ்பத்திரிக்கு 6 மொனிற்றர்கள்

யாழ்ப்பாணம்,ஜூலை16

யாழ். போதனா வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவுக்கும், சத்திர சிகிச்சைக் கூடத்திற்கும் சுகாதார திணைக்களம் பெறுமதி மிக்க 6 மொனிற்றர்களை வழங்கியுள்ளது.

இக்கருவியின் உதவியுடன் ஏக காலத்தில் ஒரு நோயாளியின் இதயத் துடிப்பு, இரத்த அழுத்தம், உடல் வெப்பநிலை, இரத்தத்திலுள்ள பிராணவாயுவின் செறிவு ஆகியவற்றை அவதானிக்கமுடியும்.

இக்கருவிகள் கொழும்பில் இருந்து வந்த தொழில்நுட்பவியலாளர் குழுவினால் பொருத்தப்பட்டன.

(ம-15)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



அருள்ஞான வேந்தன்
உயர்திரு. ஆறு.திருமுருகனே
நீ நீடூழி வாழ்க!

செஞ்சொற்செல்வன், அருள்ஞான வேந்தன் ஆறு. திருமுருகனுக்கு யாழ்.கல்வியியற்கல்லூரி 'சிவநெறித் தவமகன்' எனும் விருது வழங்கி உயர்கௌரவம் அளித்ததையிட்டு அவரை மனமார வாழ்த்துவதுடன், அவரது சமயப்பணி, சமூகப்பணி மேலும் சிறக்க சீரார் வழக்கம்பரை தேவி முத்துமாரியை வேண்டுகின்றோம்.

*பண்ணாகம்,சுழிபுரம்.* (20313) சி. ஞானச்சந்திரமூர்த்தி குடும்பம்.

# மரண அறிவித்தல்கள்

## திருமதி செல்லத்துரை மனோன்மணியம்மா (கதிரமலை)

காங்கேசன்துறை, சந்தையடியைப் பிறப்பிடமாகவும் அம்மன்கோயிலடி, கரணவாய் தெற்கு, கரவெட்டியைத் தற்போதைய வதிவிடமாகவும் கொண்ட திருமதி செல்லத்துரை மனோன்மணியம்மா (கதிரமலை) நேற்று (15.07.2003) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.07.2003) புதன்கிழமை காலை 10மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கரணவாய், பூவரம் திட்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*'கீதா பேக்கரி',*
*கரணவாய் தெற்கு,*
*கரவெட்டி.* (20300) (21-24-12-15)

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## சுப்பையா இரத்தினசிங்கம்

கொக்குவில், கே.கே.எஸ்.வீதியை வசிப்பிடமாகக் கொண்ட காலஞ்சென்ற மாம்பழம் சுப்பையாவின் அன்பு மகனும், கொக்குவில் இந்துக்கல்லூரியின் பழைய மாணவரும், தலைசிறந்த உதைபந்தாட்ட வீரருமாகிய வைத்திய கலாநிதி சுப்பையா இரத்தினசிங்கம் அவர்கள் 14.07.2003 திங்கட்கிழமை கொழும்பில் காலமானார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கொக்குவில்.*
(சி-28966) (21-26-12-15)

தகவல்:
து. வைத்திலிங்கம்.

## திருமதி கணபதிப்பிள்ளை இராஜேஸ்வரி

உரும்பிராய் வடக்கைப் பிறப்பிடமாகவும் கட்டுடையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கணபதிப்பிள்ளை இராஜேஸ்வரி (குழந்தை) நேற்று (15-07-2003) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (16-07-2003) புதன்கிழமை காலை 10.00 மணிக்கு பிப்பிலி இந்து மயானத்தில் தகனக்கிரியைகளுக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*கட்டுடை வளவு,*
*மானிப்பாய்.*
(சி-28966)
(21-26-24-14-19)

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

## திருமதி கோமளராணி வேலாயுதம்

(நுணாவில் மேற்கு)

நுணாவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் தற்சமயம் கொழும்பில் வசித்தவருமான திருமதி கோமளராணி வேலாயுதம் அவர்கள் நேற்று (15.07.2003) செவ்வாய்க்கிழமை அதிகாலை 3.30 மணியளவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா சிவம் - நல்லம்மா ஆகியோரின் அன்பு மகளும் மயில்வாகனம் - இளையபிள்ளை ஆகியோரின் அன்பு மருமகளும் மயில்வாகனம் வேலாயுதம் அவர்களின் அன்பு மனைவியும் சண்முகலிங்கம், காலஞ்சென்ற சுந்தரலிங்கம், மாணிக்கத் தியாகராஜலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் சுமதி, ஸ்கந்தசிவம், குருபரன், சிவகுமார், கோமதி (சென்.மேரீஸ் தமிழ் மகா வித்தி., பம்பலப்பிட்டி) ஆகியோரின் அன்புத் தாயாரும் குகப்பிரகாசம், ஜெரின், வதனகுமாரி, சத்தியகுமார் ஆகியோரின் அன்பு மாமியாரும் லோகிதா, சரண்யன், ஜோனத், ஜெருஷாந், விதுரா, லக்ஷிதா ஆகியோரின் அன்புப் பேர்த்தியாருமாவார்.

அன்னாரின் பூதவுடல் களுபோவிலவிலுள்ள ஜெயரட்ண மலர்ச்சாலையில் இன்று (16.07.2003) புதன்கிழமை காலை 9.00மணிக்கு அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இறுதிக்கிரியைகள் நடைபெற்று, மாலை 3.00 மணியளவில் கொகுவல மயானத்தில் தகனக்கிரியைகள் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தயவுசெய்து ஏற்றுக்கொள்ளவும்.

*260/1, ஆஸ்பத்திரி வீதி,*
*களுபோவில,*
*தெகிவளை.*
T.P.: 765521 (C/28969) (24-14-19)

தகவல்:
வே.குருபரன்
(மகன்).

## சிதம்பரப்பிள்ளை நடராஜா

சாரையடி, புலோலியைச் சேர்ந்த சிதம்பரப்பிள்ளை நடராஜா அவர்கள் நேற்று (15.07.2003) செவ்வாய்க்கிழமை காலமானார்.

இவர் காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை - பார்வதிப்பிள்ளை ஆகியோரின் சிரேஷ்ட புதல்வரும் சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான சிவஞானம், கந்தசாமி (கணக்காளர்) மற்றும் பரமேஸ்வரி, மகேஸ்வரி, வைரவேற்பிள்ளை (தம்பு - கொழும்பு) ஆகியோரின் சகோதரரும் அற்புதராணி (ஆசிரியை, வட இந்து மகளிர் கல்லூரி), கணேசதாஸ் ஆகியோரின் தகப்பனாரும் சுந்தரமூர்த்தி (உதவிக் கல்விப் பணிப்பாளர், வடமராட்சி கல்வி வலயம்) அவர்களின் மாமனாரும் சத்ஜன், விதுஜன், நித்யபூபதி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.07.2003) புதன்கிழமை காலை 10 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் ஆனைவிழுந்தான் மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சாரையடி,*
*புலோலி.* (20308) (24-14-19)

தகவல்:
ச.சுந்தரமூர்த்தி.

# வீரச்சாவடைந்த 12 மாவீரர்களுக்கும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

றினர். அதனைத் தொடர்ந்து மாவீரர்களின் உறவினர்கள், போராளிகள ஆகியோர் ஈகச் சுடர்களை ஏற்றினர்.

**வலி. மேற்கு**

மானிப்பாய், சங்கானை, பண்டத்தரிப்பு, சுழிபுரம், சித்தங்கேணி ஆகிய பகுதிகளில் பிரதான வீதிகள் நெடுகிலும் நேற்றுக்காலைமுதல் சோககீதம் ஒலிக்கவிடப்பட்டிருந்தது.

கிழக்குக் கடலில் காவியமான வேங்கைகளில் ஒருவரான மேஜர் வள்ளுவனின் திருவுருவப்படம் சங்கானையிலுள்ள அவரது இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தது.

பெரும் எண்ணிக்கையான மக்கள அங்குசென்று அஞ்சலி செலுத்தினர். மாலையில் சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்தில் அஞ்சலிக் கூட்டம் ஒன்றும் நடைபெற்றது.

**தென்மராட்சி**

லெப்கேணல் கதிரின் திருவுருவப் படம் மீசாலையிலுள்ள அவரது இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது. முற்பகல் 11 மணியளவில் பொது மக்கள், போராளிகள் அணி திரள அங்கிருந்து 'பாண்ட்'வாத்தியக்குழு சகிதம் அவரது திருவுருவப்படம் மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

அங்கு அஞ்சலி நிகழ்வு இடம்பெற்றது. அங்கிருந்து கொடிகாமம் மாவீரர் துயிலும் இல்லத்துக்கு கதிரின் திருவுருவப்படம் எடுத்துச் செல்லப்பட்டது.

அங்கு அவரது நினைவாக நடுகல் நாட்டப்பட்டது.

**நெடுந்தீவு**

நெடுந்தீவு மாவீரர் நினைவு தூபியிலிருந்து 'பாண்ட்' வாத்திய அணி நடையுடன் 12 மாவீரர்களதும் திருவுருவப்படங்கள் ஊர்வலமாக நெடுந்தீவு மகாவித்தியாலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டன.

ஏராளமான பொதுமக்கள் திரண்டிருக்க அங்கு அஞ்சலிக்கூட்டம் நடைபெற்றது. பொதுச்சுடரினை மாவீரர் நாதனின் தந்தையார் பாக்கியராஜா ஏற்றி வைத்தார். போராளி ஈழமாறன் தேசியக் கொடியினை ஏற்றிவைத்தார். அஞ்சலிக் கூட்டமும் இடம்பெற்றது.

**குருநகர்**

குருநகர் கலை அரங்கின் முன்பாக அமைக்கப்பட்டிருந்த விசேட பந்தலில் 12 மாவீரர்களின் திருவுருவப் படங்கள் வைக்கப்பட்டிருந்தன. அப்பகுதியெங்கும் சிவப்பு,மஞ்சள் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தது.

வடமாகாணக் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் சி.தவரட்ணம் தலைமையில் நினைவஞ்சலிக் கூட்டம் நேற்றுமாலை 6.45 மணிக்கு குருநகர் கலை அரங்கில் இடம்பெற்றது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ் நல்லூர் கோட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் கு.ஈஸ்வரன், குருநகர் முன்னேற்ற ஐக்கியமுன்னணி அமைப்பின் தலைவர் கி.கிறிஸ்தோபர் ஆகியோர் பொதுச் சுடரை ஏற்றினார்கள்.

தொடர்ந்து மாவீரர்களின் பெற்றோர் மற்றும் குருநகர், பாஷையூர் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஆகியோர் மாவீரர் திருவுருவப் படங்களுக்கு சுடரேற்றி மலரஞ்சலி செலுத்தினர்.

தொடர்ந்து அஞ்சலி உரைகள் இடம்பெற்றன. தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ் கல்விக் கோட்டப் பொறுப்பாளர் கவியன்பன், ஆனந்தராஜா, வலிகாமம் அரசியல் துறைப்பொறுப்பாளர் இனியவன் உட்பட பலரும் உரை நிகழ்த்தினர்.

இதேவேளை-

வன்னிப் பெருநிலப்பரப்பின் பல்வேறு பகுதிகளிலும் இந்த மாவீரர்களின் நினைவு நிகழ்வுகள் மிகுந்த உணர்வெழுச்சியுடன் அனுஷ்டிக்கப் பட்டன.

விசுவமடுப் பிரதேசத்தில் விசுவமடு மாவீரர் துயிலும் இல்லப்பொறுப்பாளர் பொழிலன் தலைமையிலும், துணுக்காய் பிரதேசத்தில் அரசியல் துறையைச் சேர்ந்த இசைப்பிரியன் தலைமையிலும், ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் கரிப்பட்டமுறிப்பு அரசினர் தமிழ் கலவன் பாடசாலை அதிபர் ஜெயசுதானந்தன் தலைமையிலும் அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்றன.

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தியாலய அதிபர் வி.இந்திரலிங்கம் தலைமையிலும் புதுக்குடியிருப்பில் முல்லை மாவட்ட மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழ் நிலவு தலைமையிலும் நெடுங்கேணியில் நெடுங்கேணி பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் இந்திரன் தலைமையிலும் இந்நிகழ்வுகள் இடம் பெற்றன.

(ஔ-4-5-6-51-70-117-135)

# சித்தமருத்துவ மாணவர் நேற்றுமுதல் மறியல் போர்

வலி.வடக்கு.ஜூலை16

யாழ்.பல்கலைக்கழக சித்த மருத்துவத்துறை மாணவர்களின் பகிஷ்கரிப்புப் போராட்டம் நேற்று முதல் மறியற் போராட்டமாக மாற்றம் பெற்றுள்ளது.

நேற்று காலையில் கைதடியில் அமைந்தள்ள சித்தமருத்துவ பீடத்தின் முன்னால் சுலோக அட்டைகளைத் தாங்கிய வண்ணம் மாணவர்கள் மறியற் போராட்டத்தில் ஈடுபட்டு இருந்தனர்.

சித்தமருத்துவத்துறையை யாழ். பல்கலைக்கழகத்தின் கீழ் தனி நிறுவனமாக்குவதற்கு எடுக்கப்படும் முயற்சிகளை கண்டித்து கடந்த 8ஆம் திகதி முதல் சித்த மருத்துவத்துறை மாணவர்கள் பகிஷ்கரிப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-86)


## கலை உலகின் மலை சரிந்தது!



தன் மூச்சை இசையாக்கி
தரணியை வசப்படுத்தியவன்
அளவையூரில் பிறந்தவந்த
கலை உலகில் கோலோச்சியவன்
நல்லை நகர் குமரனையும்
நாகசுரத்தால் மயக்கியவன்
கேட்போரின் செவிகளெல்லாம்
இசையமுதம் நிரப்பியவன்
பூவுலகில் போதும் சேவை
மேலுலகுக்கு நீ தேவை
என்று இறைவன் அழைத்திடவே
அமரருள் ஒருவனானான்.

மாவிட்டபுரம்.
(C/28980) (29-13-18-31)

கலாபூஷணம் எஸ்.ஆர்.ஞானசுந்தரம்
குடும்பத்தினர்.

## இதய அஞ்சலி



நாதஸ்வர கான கலாநிதி
**N.K.பத்மநாதன்**
(தலைவர், வண்ணை ஸ்ரீ மகா மாரியம்மன் தேவஸ்தானம் திருப்பணிச்சபை)

அவர்கள் 15.07.2003 அன்று காலமானார். அன்னாரின் மறைவினால், துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மசாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

வண்ணை ஸ்ரீ மகாமாரியம்மன் தேவஸ்தானம்
திருப்பணிச் சபை,
185/9, கில்னர் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

(20320) (31-13-18)

## நாகசுர கான கலாநிதியை இழந்து கண்ணீர் வடிக்கிறோம்



ஈழத்தில் மட்டுமல்லாது சர்வதேச மட்டத்திலும் எமது கலைநுட்பத்தைப் பரப்பி எமக்கெல்லாம் பெருமை தேடித்தந்த நாகசுர கான கலாநிதி **என்.கே.பத்மநாதனின்** மறைவு எமக்கு ஈடுசெய்ய முடியாத இழப்பு. அவருக்கு எமது கண்ணீரைக் காணிக்கையாக்குவதுடன் துயரில் தவிக்கும் அவரின் குடும்பத்துக்கு எமது ஆறுதலைத் தெரிவிக்கிறோம்.

கோண்டாவில். (C28982) (32-13-18-31)

நாகசுர வித்துவான்
வி.கே.பஞ்சமூர்த்தி
குடும்பத்தினர்.

## நாகசுர மேதையை இனி எப்போது காண்போம்?



ஈழத்தின் நாகசுர மேதை **என்.கே.பத்மநாதனின்** மறைவு ஈழத்துக்கு மட்டுமல்லாது, சர்வதேச கலை உலகுக்கும் பேரிழப்பாகும். மேற்கு நாடுகளில் கலைச் சேவையாற்றி எமக்குப் பெருமை தேடித் தந்த மேதைக்கு எமது கண்ணீர்க் காணிக்கைகள். அவரது இழப்பால் தவிக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்கள்.

கோண்டாவில்.
(C28981) (32-13-18-31)

நாகசுர வித்துவான்
வி.கே.கானமூர்த்தி குடும்பத்தினர்.

## நாகசுர சக்கரவர்த்தியை இழந்து தவிக்கிறோம்



அளவையூர் தந்த தவப்புதல்வன்
கலாசூரி **என்.கே.பத்மநாதனின்**
மறைவு இசை உலகுக்கு பேரிழப்பாகும்.
எமது கண்ணீர் காணிக்கைகளைத்
தெரிவிப்பதுடன் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

இணுவில்.
(C/28979) (29-13-18-31)

கலாபூஷணம் கே.ஆர்.சுந்தரமூர்த்தி
குடும்பத்தினர்.

## விற்பனைக்கு உண்டு

தச்சு வேலை செய்யும் சைவா மெசின்கள் 10", 12", 14" 16" ஆகியவையும், ரீல்வர்களும், வெல்டிங் பிளாண்ட் (இராஸ்மோமி), அலுமினிய கட்டிங் மெசின் ஏனைய இலத்திரனியல் உபகரணங்கள் விற்பனைக்குண்டு.

தொடர்பு: கி.சுதாகரன்,
No-20, 2ஆம் ஒழுங்கை,
அரசடி வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம். T.P: 0777-295998

(20330) (32-13-18-31)

## தவறிவிட்டது

நயினாதீவுக்கும் - யாழ்ப்பாணத்துக்கும் இடையில் டிஜிற்றல் கமரா ஒன்று தவறிவிட்டது.

கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும்.

T.ரமணன்,
48, டேவிட் வீதி,
யாழ்ப்பாணம்.
222-5605.

(20328) (32-13-18-31)

## லக்ஷ்மி சினிமா
இணுவில்

அஜித், ஜோதிகா, சிம்ரன்
நடித்த
**வாலி** (ரீல்ஸ்)
காட்சி நேரம்: 11.00,2.00,7.00 (பு.நே.)

(C/28976) (30-12-18)

## நிறைஞ்சனாஸ்
சங்கானை

சரத்குமார், மீனா,
ரம்யாகிருஷ்ணன் நடித்த
**பாறை** (ரீல்ஸ்)
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
**THE LORD OF THE RINGS**
தினசரி 8.45 இரவு

(C28977) (31-12-18)

## லிபேட்டி
அச்சுவேலி



சத்தியராஜ், ரம்பா, செந்தில், மணிவண்ணன் நடித்த
**மிலிட்டரி** (ரீல்ஸ்)
தினசரி காட்சி நேரம்
3.00, 7.00 (பு.நே.)
**THE MUMMY**
தினசரி காலை 11.00 மணிக்கு
(செரில்லாப்படம்)
(ரீல்ஸ்)

(C/28888) (31-12-18)

## நாகம்ஸ் சுன்னாகம்

விக்ரம். பிரியங்கா. பிரகாஷ்ராஜ்
நடித்த
**காதல் சடுகுடு** (ரீல்ஸ்)
தினசரி காட்சிகள் : 11.00, 3.00 (பு.நே.)
வெள்ளி,சனி,ஞாயிறு விசேடகாட்சி 7.00 (பு.நே.)

(C28767) (31-13-18)

## ராஜா யாழ்ப்பாணம்

இந்தியாவிலும் இலங்கையிலும்
ஒரே தினவெளியீடு
மாதவன், ஜோதிகா நடித்த
**பிரியமான தோழி** (ரீல்ஸ்)
தினசரி: 10.30,2.30,6.30, 9.30

(31-13-18)

## காந்தரூபன் அறிவுச் சோலை சிறுவர் இல்லம்

### பணிநிலை – நேர்முகத் தேர்வு

நாள் :- 19.07.2003
இடம் :- கிளிநொச்சி மத்திய கல்லூரி
நேரம் :- காலை 9.00 மணிமுதல்
தொடர்பு இணைப்பு :- ஒண்சுடர் கிளிநொச்சி
பணிநிலைகள்:- குழந்தை பராமரிப்பாளர்கள், ஆசிரியர்கள், அலுவலர்கள், தொடர்பாளர்கள், சாரதிகள், விவசாயம்.

« விண்ணப்பம் செய்தவர்கள் சகல தகைமை ஆவணங்களுடனும் சமுகமளிக்கவும்.
« விண்ணப்பம் செய்யத் தாமதமானவர்களும் நேர்முக நாளில் சமுகமளிக்கவும்.

நிர்வாகி,
காந்தருபன் அறிவுச் சோலை.
சிறுவர் இல்லம்.

(C/28975) (29-13-18-31)


## மரண அறிவித்தல்கள்

### தம்பிராஜா வைத்திலிங்கம்

(ஓய்வு பெற்ற தொழில்நுட்ப அலுவலரும், சங்கரத்தை பத்திரகாளி அம்பாள் தேவஸ்தான அறங்காவலரும்)

சங்கரத்தையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட தம்பிராஜா வைத்திலிங்கம் அவர்கள் 13.07.2003 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிராஜா - பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும், இராஜலஷ்மியின் அன்புக்கணவரும் திருமதி சந்திரன் பக்தகௌரி, திருமதி சிவக்குமார் ரமணி, சோதிலிங்கம் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் கந்தையா சந்திரன், தாமோதரம்பிள்ளை சிவக்குமார், திருமதி சுபனா சோதிலிங்கம் ஆகியோரின் அன்பு மாமனாரும் சந்திரன் சுஜீவன், சிவக்குமார் தினேஷ், சிவக்குமார் லோகேஷ், சோதிலிங்கம் பிரதீஷ் ஆகியோரின் அன்புப் பேரனும் தம்பிராஜா சங்கரலிங்கம் (முன்னாள் பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி அதிபர்), திருமதி மார்க்கண்டு அமிர்தவல்லி, தம்பிராஜா சுந்தரலிங்கம் (ஓய்வு பெற்ற புகையிரத பொறியியலாளர்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற சுகுணா மார்க்கண்டு (ஓய்வு பெற்ற புகையிரத அதிபர்) வின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.07.2003) புதன்கிழமை மாலை 4.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக வழுக்கையாறு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சங்கரத்தை,*
*வட்டுக்கோட்டை.*

தகவல்:
வைத்திலிங்கம் சோதிலிங்கம் (மகன்)

(20329) (32-13-18-31)

### திருமதி சீவரத்தினம் தில்லைநாயகி

மலேசியாவைப் பிறப்பிடமாகவும் வீமன்காமம் தெல்லிப்பழையை வசிப்பிடமாகவும் தற்காலிகமாக சாவகச்சேரியில் வசித்தவருமான திருமதி சீவரத்தினம் தில்லைநாயகி நேற்று(15.07.2003)செவ்வாய்க் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப படும்.

*05.டச்சு வீதி,*
*சாவகச்சேரி.*

தகவல்:
திருமதி அற்புதராஜா
விஜயகுமாரி (பேபி).

(C28984) (32-13-18-31)

### அப்பாத்துரை சுப்பிரமணியம்

நீர்வேலி வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அப்பாத்துரை சுப்பிரமணியம் நேற்று (15.07.2003) செவ்வாய்க்கிழமை இறைபதம் எய்திவிட்டார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*"சொர்ண வாசா",*
*நீர்வேலி வடக்கு,*
*நீர்வேலி.*

தகவல்:
சு.சிவகுமார் (மகன்)
*(வலி.கிழக்கு பிரதேசசபை,*
*நீர்வேலி).*

(20331) (29-13-18-31)

### கந்தையா சுப்பிரமணியம்

மீசாலை மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சுப்பிரமணியம் அவர்கள் நேற்று (15.07.2003) செவ்வாய்க் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் தில்லையம்மாவின் அன்புக் கணவரும் நடராசா, சுந்தரம்பிள்ளை, இராசம்மா, காலஞ்சென்ற காசிப்பிள்ளை ஆகியோரின் அன்பு சகோதரனும் பராசக்தி, பரராசசிங்கம், சகுந்தலாதேவி, இராசேஸ்வரி, பாலேந்திரம் (சுவிஸ்), இராசரத்தினம் (பிரான்ஸ்), ஏரம்பமூர்த்தி (கண்ணன் - கணேசா ஹாட்வெயர், சாவகச்சேரி) ஆகியோரின் அன்புத் தந்தையும் தங்கராசா, கலாநிதி, குணநேசராசா, யோகராசரமணி, ஜெயவாணி, சரோஜினி ஆகியோரின் அன்பு மாமனாரும் தர்சனா (யாழ். பல் கலைக் கழகம் 3ஆம் ஆண்டு கலைப்பிரிவு), பர்சனா(யாழ். பல்கலைக் கழகம் முதலாம் ஆண்டு கலைப்பிரிவு), பர்மினா, சங்கீதா, சங்கவி, இளங்கோ, இளங்கீதன், துளசிகா, பிரதாப் (சுவிஸ்), பிரதீப் (சுவிஸ்), துவாரகி ஆகியோரின் அன்பு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

*மீசாலை மேற்கு,*
*மீசாலை.*

தகவல்:
சு.ஏரம்பமூர்த்தி
(கண்ணன் - மகன்)
கணேசா ஹாட்வெயர்
சாவகச்சேரி.

(20332) (32-13-18-31)

# புகழ்பூத்த நாதஸ்வர ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

47 வருடங்களாக ஆஸ்தான வித்துவானாக இருந்து உற்சவ காலத் திலபக்தர்களை பக்தி மயமாக்கும் வகையில் கானமழை பொழிந்துவந்தார். இருதடவைகள் ஆலய கருவறையில் திருப்புகழை நாதஸ்வர இசையாக வாசித்துள்ளார்.

அவரின் இசைப் பணியை கௌரவித்து இலங்கை அரசு கலாசூரி, கலாபூஷணம் ஆகிய பட்டங்களை வழங்கியிருந்தது. வெளி நாடுகளிலும் உள்நாட்டிலும் உள்ள பல்வேறு அமைப்புகள் இவரை கௌரவித்து பட்டங்களையும் பதக்கங்களையும் வழங்கிக் கௌரவித்தன.

இந்தியா, மலேஷியா, சிங்கப்பூர், லண்டன், கனடா, ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளுக்குச் சென்றும் நாதஸ்வர இசை பொழிந்துள்ளார். அண்மையில் இவர் கனடாவுக்கு சென்றிருந்த சமயம் அங்குள்ள புலம்பெயர்ந்த தமிழர்கள் 25 பவுண் நிறையில் தங்க நாகசுரம் ஒன்றை வழங்கிக் கௌரவித்தனர்.

பல அரசு வைபவங்களிலும் இவர் இசை மழை பொழிந்திருக்கின்றார். யாழ்ப்பாணத்திலும், சென்னையிலும் நடந்த தமிழ் ஆராய்ச்சி மாநாடுகளிலும், அண் ணாமலை இசைத்தமிழ மன்றம் நடத்திய இசை விழாக்களிலும ஆடி வேல் விழாக்களிலும் இவர் நாதஸ' வரம் வாசித்துள்ளார்.

இவரது கலைச்சேவைக்கு கிடைத்த கௌரவமாக இவரது புகைப்படம் கொழும்பு நகர மண்டபத்தில் கலைஞர்களின் வரிசையில வைக்கப்பட்டுள்ளது. கலாயோகி ஆனந்தகுமாரசாமிக்கு பின்னர் நகர மண்டபத்தில் படம் வைத்து கௌரவிக்கப்பட்ட தமிழ் பத்மநாதனே ஆவார்.

அமரர் பத்மநாதனுக்கு நான்கு ஆண்களும் மூன்று பெண்களுமாக ஏழு பிள்ளைகள். அவர்களில் அவரது வாரிசாக உருவாகிவந்த முரளிதரன் 1986 ஆம் ஆண்டு இந்திய அமைதிப்படையினரால் படுகொலை செய்யப்பட்டிருந்தார்.

என்.கே.பத்மநாதனின் பூதவுடல் இன்று காலை கொழும் பிலிருந்து விமானம் மூலம் எடுத்து வரப்படும். நாளை வியாழக்கிழமை காலை 9 மணிக்கு அன்னாரின் இறுதிக்கிரியைகள் இடம்பெறும். (ஒ-3-10-15-139)


இப்பொழுது SLS சான்றிதழ் பெற்றுள்ளது

மிற்சுயி ஸ்தாபனத்தின் புதிய படைப்பு

ஹினோடே சீமெந்து




வேலைக்கு முந்தும் - ஜப்பானிய பெயர் !

Access Graphics



JKI

John Keells
INSTITUTE

100, Clock Tower Road, Jaffna. Tel: 021-222 2831

தகவல் தொழில்நுட்ப துறையில் சர்வதேச அங்கீகாரம் பெற்ற தகைமை
யாழ்ப்பாணத்தில்
ஜோன் கீல்ஸ் நிலையம் வழங்குகிறது

வெளிநாட்டில் பட்டப்படிப்பை மேற்கொள்ள அரிய வாய்ப்பு

நீங்கள் ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சையில் இரண்டு பாடங்களிலாவது சித்தியடைந்தவராக அல்லது பரீட்சை முடிவுகளுக்குக் காத்திருப்பவராக இருந்தால் இச்சந்தர்ப்பத்தைச் சிறந்த முறையில் பயன்படுத்திக் கொள்ளுங்கள். வெளிநாட்டுப் பல்கலைக் கழகங்களுடன் இணைந்து ஜோன் கீல்ஸ் நடத்தும் BTEC HND (Higher National Diploma) பயிற்சி நெறியில் இணைந்து கொண்டு அளப்பரிய நன்மைகளைப் பெறுங்கள்.

சர்வதேச சான்றிதழ்கள்

BTEC HND (Higher National Diploma) என்பது கணனித் துறையில் சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட உயர்தரப் பயிற்சிநெறியாகும். 18 மாதகாலப் பயிற்சியின் முடிவில் பிரிட்டனின் Edexcel இன் சர்வதேச டிப்ளோமா சான்றிதழ்களை நீங்கள் பெறுவீர்கள். Edexcel என்பது லண்டன் ஜீ.சீ.ஈ. சாதாரண மற்றும் உயர்தரப் பரீட்சைகளுக்கான உலகளாவிய ஆளுநர் சபையாகும்.

வெளிநாட்டில் படிப்பைத் தொடரலாம்.

ஜோன் கீல்ஸ் நிலையத்தில் BTEC HND (Higher National Diploma) பயிற்சிநெறியைப் பூர்த்தி செய்தவர்கள் நேரடியாகவே பிரிட்டன், அவுஸ்திரேலியா, ஐக்கிய அமெரிக்கா போன்ற நாடுகளிலுள்ள பல்கலைக்கழகங்களின் B.Sc (Hons) இறுதியாண்டு மாணவராகச் சேர்ந்து பட்டப்படிப்பை மேற்கொள்ளலாம். இதன் மூலம் நீங்கள் அதிகளவு பணத்தை மீதப்படுத்திக் கொள்ளலாம்.

தேசிய மற்றும் சர்வதேச புலமைப்பரிசில்கள்

ஜோன் கீல்ஸ் நிலையம் திறமைமிக்க மாணவர்களுக்குப் புலமைப்பரிசில்களை வழங்குகின்றது. கடந்த வருடம் BTEC HND (Higher National Diploma) கல்வித் திட்டத்திற்கென ரூ.300,000/- வரையில் வழங்கப்பட்டது. அதிவிசேட திறமை காண்பிக்கும் மாணவர்களுக்கு பிரிட்டனிலுள்ள பல்கலைக்கழகங்களில் பட்டப்படிப்பை மேற்கொள்வதற்கும் புலமைப்பரிசில்கள் வழங்கப்படுகின்றன.

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.

யாழ்ப்பாண ஜோன் கீல்ஸ் நிலையம் தற்போது மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்களைக் கோரியுள்ளது. மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள் 021-2222831 அல்லது இல.100, மணிக்கூட்டுக்கோபுர வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள எமது அலுவலகத்திற்கு நேரில் வாருங்கள்.

யாழ்ப்பாணம் ஜோன் கீல்ஸ் நிலையம்
2003 ஜுலை 23ஆம் திகதி வைபவரீதியாக திறந்துவைக்கப்படும்.

An Edexcel approved HND Centre


## ஒக்ரோபர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அனுமதிப்பதற்கு மின்சார விநியோகமே முட்டுக்கட்டையாக உள்ளதாக இராணுவத்தினர் தெரிவிததனர் இதனைத் தொடர்ந்து ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதியுதவியுடன் மின்விநியோகத்திட்டம் செயற்படுத்தப்படவுள்ளதுமுகமாலை முதல் பளை வரை மின சாரம் வழங்க 2 கோடி ரூபாவும் - ஓமந்தைமுதல் புளியங்குளம் வரை வழங்க 2 கோடியே 20 லட்சம் ரூபாவும் - செலவாகும் என கணிப்பிடப்பட்டுள்ளது. (ஒ-164)

## மட்டக்களப்பில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரும் மேலதிக பொலீஸாரும் காவலுக்கு நிறுத்தப்பட்டிருந்தனர்.

அம்பாறையிலிருந்து மட்டக்களப்பை நோக்கி வாகனத்தில் வந்த இவர்கள் கல்லடிப்பாலத்தில் வைத்து கைது செய்யப்பட்டனர்.

அவர்களின் பிக்அப் வாகனத்தைச சோதனையிட பொலீஸாரும் இராணுவத்தினரும் முயன்ற போது புலி உறுப்பினர்கள் ஆட்சேபம் தெரிவித்தனர். இதனால் ஏற்பட்ட முறுகல் நிலையை அடுத்து கண்காணிப்புக் குழு உறுப்பினர்கள் அந்த இடத்துக்கு வரவழைக்கப்பட்டனர்.

கண்காணிப்புக் குழு உறுப்பினர்கள் முன்னிலையில் வாகனம் சோதனையிடப்பட்ட போது ரி.56 ரகத் துப்பாக்கி, நான்கு கைக்குண்டுகள், 30 தோட்டாக்கள், 9 எம்.எம்.துப்பாக்கித் தோட்டாக்கள் என்பன கைப்பற்றப்பட்டன என்று பொலீஸார் தெரிவித்தனர்.

8 புலி உறுப்பினர்களில் 4 பேர் பெண்களாவர்.

வாகனத்தை கைப்பற்றிய பொலீஸார், புலி உறுப்பினர்களைக் காத்தான்குடி பொலீஸ் நிலையத்துக்கு கூட்டிச்சென்றனர்.

கதிர்வேற்பிள்ளை ரஜிதகுமார் (ரஜியன்-அக்கரைப்பற்று), சிறீதரன் சுதாகரன் (கண்ணன்-விநாயகபுரம்), கோபாலசிங்கம் தயானந்தன் (நந்தன்- தம்பிலுவில்), தியாகராஜா முரளிதரன் (கள்காலன் - திருக்கோவில்), சிவநாதன் திருமஞ்சு (தமிழிசை-வாகரை), நவரட்ணம் புனிதமலர் (கேர்போடை - பளுகாமம்), நவரத்தினம் மஞ்சுளா (திலகவதி-அக்கரைப்பற்று), விநாயகமூர்த்தி சியாமளா (சுடர்விழி-அக்கரைப்பற்று) ஆகியோரே கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்தவர்களை நீதி மன்றத்தில் நேற்று ஆஜர் செய்யும் முயறசியில் பொலீஸார் ஈடுபட்டதையடுத்து மட்டுநகரில் நகரம், சந்தை, பஸ் நிலையம் போன்றவற்றில் சன நடமாட்டம் குறைந்தது. கோட்டைமுனைப் பாலத்தில் படையினர் வாகனங்களையும், மக்களையும் சோதனை செய்ததால் நகரில் ஒரு வித பதற்றமும், பரபரப்பும் ஏற்பட்டது. விசேட அதிரடிப்படையினர் மோட்டார் சைக்கிள்களிலும் வாகனங்களிலும் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

## தமிழீழ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரகாரம் படையினரை அச்சுறுத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்ளக் கூடாது என்று எமக்கு எமது தலைமைப்பீடம் அறிவுறுத்தியுள்ளது என்றும் -

தேசியக்கொடி ஏற்றுதல் எமது அரசியல் நடவடிக்கைகளில் ஓர் அங்கமே என்றும் - செங்கதிர் கண்காணிப்புக் குழு அதிகாரியிடம் எடுத்துக் கூறினார்.

இதையடுத்து உக்கிலாங்குளத்தில இடம்பெற்ற நிகழ்ச்சியில் தமிழீழ தேசியக்கொடி ஏற்றப்பட்டது. அங்கு முகமூடிகள் அணிந்த நிலையில் சென்ற இராணுவத்தினரும் பொலீஸாரும் கொடியை இறக்கும்படி கோரினர். ஏற்றப்பட்ட தேசியக்கொடி பலாத்காரமாக இறக்கப்படுமாயின் அங்குள்ள சுமார் நூறு போராளிகள் சயனைட் உட்கொள்வார்கள் என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டது. இதனால், அங்கு பதற்றமான சூழ்நிலை ஏற்பட்டது. இந் நிலையில் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு அதிகாரி அந்த இடத்திற்கு வந்து இரு தரப்பிற்கும் இடையில் ஏற்படவிருந்த முறுகல் நிலையை தவித்தார்.

இதன்பின் அஞ்சலிக் கூட்டம் அங்கு இடம்பெற்றது. (ஒ-3-164)

## அரசியல் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறித்துத் தீர்மானங்கள் எடுக்கப்பட்டபோதும், அவை நடைமுறைப்படுத்தப்படவில்லை. அல்லது செயலுருப் பெறவில்லை. அரசமைப்பு மற்றும் சட்ட விவகாரச் சிக்கல்களே இது விடயத்தில் முக்கிய முட்டுக்கட்டையாகப் பின்னர் சுட்டிக்காட்டப்பட்டது.

எனவே எதிர்காலப் பேச்சுக்களின போது-எந்தத் தீர்மானத்தையும் எடுக்க முன்னரும் - அது விடயத்தில் எழக்கூடிய சட்டச் சிக்கல்கள் ஏதும் உள்ளதா என்பதை நேரத்துடனேயே உறுதி செய்து கொள்வது அவசியம் எனப் புலிகள் கருதுகின்றனர்.

இத்தகைய விடயத்தில் உதவுவதற்காகவே சட்டநிபுணத்துவ ஆலோசனைக்குழுவொன்றை அமைக்கப் புலிகள் திட்டமிடுகின்றனர்.

இந்தக்குழுவில் பணியாற்றுவதற்காக அழைக்கப்படக்கூடிய பல பிரமுகர்கள் மற்றும் சட்ட அறிஞர்களின் பெயர்கள் புலிகளின் தலைமைப்பீடத்தால் பரிசீலிக்கப்பட்டு வருகின்றன.

கொழும்பை மையமாகக்கொண்டு இயங்கிவரும் சட்டவிரிவுரையாளர் ஒருவர், சிங்கப்பூரில் சட்டவிரிவுரையாளராகப் பணியாற்றும் இலங்கைத்தமிழர் உட்படப் பலரின் பெயர்கள் இக் குழுவுக்குப் பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளன.

சமாதானப் பேச்சுக்களில் பங்குபற்றும் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் குழுவுக்குப் பின்புலத்தில் நின்று இந்த ஆலோசனைக்குழு பணியாற்றும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (உ)


தென்னிந்தியாவில் இருந்து

யாழ்ப்பாணம் என்னும் புண்ணிய பூமிக்கு யாழ்ப்பாண மக்களின் வேண்டுகோளுக்கிணங்கி 2ஆவது முறையாக வருகைதந்துள்ள பரம்பரை சோதிடக் கலையில் புகழ்பெற்ற சிவபால ஜோதிடர்



ராஜகுருசாமி அவர்கள்

★ கைரேகை ★ ஜாதகம் ★எண்கணிதம்
★ பெயர்ராசி ★ திருமணப்பொருத்தம்
கைரேகை மட்டும் 9 மணி முதல் 2 மணி வரை
இவற்றில் பல வருட அனுபவமும் புகழும் பெற்றவர்.
காலை 9.00மணி முதல் மாலை 6.00மணி வரை

(30-28-12-18) ராஜகுருசாமி T.P. 5867
மிலன்ஸ் மல்ரி கொம்பிளக்ஸ்
60/1 [112], TEMPLE ROAD [Near ICRC], JAFFNA.
(20303)


## மரண அறிவித்தல்

### கலாசூரி என்.கே.பத்மநாதன்

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட நாகசுர வித்துவான் என்.கே.பத்மநாதன் நேற்று (15.07.2003) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.07.2003) வியாழக்கிழமை காலை 9 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் கோம்பயன் மணல் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

*99/4,கில்னர் லேன்,*
*யாழ்ப்பாணம்.* (C28983) (32)

தகவல்:
குடும்பத்தினர்.

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 16.07.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.